යෞවන කටයුතු හා නිපුණතා සංවර්ධන අමාත්‍යාංශය
**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**
**MINISTRY OF YOUTH AFFAIRS & SKILLS DEVELOPMENT**

# ශ්‍රී ලංකා වෘත්තීය පුහුණු අධිකාරිය
# இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
# Vocational Training Authority of Sri Lanka

# *වාර්ෂික වාර්තාව*
# *வருடாந்த அறிக்கை*
# *ANNUAL REPORT*
# *2012*

''නිපුණතා පියස''
අංක 354/2, ඇල්විටිගල මාවත,
නාරාහේන්පිට, කොළඹ
05.

"Nipunatha Piyasa"
No. 354/2" Elvitigala Mawatha"
Narahenpita" Colombo 05

" நிபுணதா பியச,"
இல.354/2 எல்விட்டிகல .
மாவத்தை
நாராஹேன்பிட,கொழும்பு .05

# வருடாந்த அறிக்கை
# 2012

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

**இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை தொடர்பான தகவல்கள்**

| | | |
|---|---|---|
| நிறுவனம் | - | இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை |
| அமைச்சு | - | இளைஞர் அலுவல்கள் , திறன்கள் அபிவிருத்தி அமைச்சு. |
| முகவரி | - | ‘‘நிபுனதா பியச’’<br>இல : 354/2,<br>எல்விட்டிகல மாவத்தை , நாரஹேன்பிட்ட,<br>கொழும்பு 05. |
| மின் அஞ்சல் | - | info@vtasl.gov.lk |
| இனையத்தளம் | - | www.vta.lk |
| கணக்காய்வாளர் | - | கணக்காய்வாளர் அதிபதி<br>கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் |
| வங்கியாளர்கள் | - | மக்கள் வங்கி<br>இலங்கை வங்கி<br>கொமர்ஸல் வங்கி |

# சமர்ப்பணம்

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்விருத்தி அமைச்சர்

இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்விருத்தி அமைச்சு

“நிபுனதாபியச”

இல : 354.⁚.2இ எல்விட்டிகல மாவத்தைஇ

கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவல்கள் இ

**வருடாந்த அறிக்கை – 2012**

**<u>இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை</u>**

**1995** ஆம் ஆண்டின் **12** ஆம் இலக்க தொழிற்பயிற்சி அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 25 மற்றும் 1971 ஆண்டின் நிதிச்சட்டத்தின் **14 (2)** (சி) பிரிவின்படி 2012 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் அறிக்கையை இத்துடன் சமர்பிக்கின்றேன்.

இப்படிக்கு,

நம்பிக்கையுள்ள,

கேர்ணல் எஸ்.ஆர்.பி. இரத்நாயக (ஆர்.டப்ளியு.பி.ஆர்.எஸ்.பி )

துவிசாளர,

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

**2013.02.08**

## எமது நோக்குகை

இலங்கையில் தொழிற் பயிற்சி மற்றும்
தொழில் கற்கை மற்றும் பயிற்சி
வழங்கும் நிறுவனமாதல

## எமது பணி

தேசிய மற்றும் சர்வதேச தொழில்
தேர்ச்சிக்கு ஏற்றவிதத்திலான
தொழில் தேர்ச்சிகளை உருவாக்கும்

## 01. நிர்வாக சபை அறிக்கை

1995ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தொழிற்பயிற்சி அதிகாரசபை சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை 08 தேசிய தொழிற்பயிற்சி நிலையங்களையும் 22 மாவட்ட தொழிற்பயிற்சி அதிகாரசபைகளையும் பிரதேச செயலாளர் பிரிவு அடிப்படையிலான 244 தொழிற்பயிற்சி நிலையங்களையும் உள்ளடக்கி மொத்தம் 247 நிலையங்களுடன் ஓர் வலைப்பின்னலாக இயங்கிவரும் அரசதுறையின் முன்னணி நிறுவனமாகும். 18 துறைகளில் 117 பாடநெறிகளுக்கான 1692 நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறையிலிருப்பதுடன் வருடாந்தம் சுமார் 30,000 இளைஞர் யுவதிகள் இதிலிருந்து பயிற்சி பெற்று தேசிய உழைப்பாளிகள் எண்ணிக்கையுடன் இணைகின்றனர்.

இளைஞர் அலுவல்கள் தொழில் விருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் இந்த நிறுவனமானது 2012இல் அதன் குறிக்கோள் தொடர்பாக பின்வரும் பணிகளில் ஈடுபட்டதுடன் அதன் முன்னேற்றம் எதிர்வரும் அத்தியாயங்களில் காட்டப்படுகின்றது.

- தொழிற்பயிற்சிகளுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்கும்போது இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குதல் மற்றும் தொழிற்பயிற்சிகளைப் பெறக்கூடிய வகையில் தேவையான தகவல்களை நேரடியாகவும் ஏனைய நிறுவனங்க;டாகவும் வழங்குதல்.
- தொழிற்தேர்ச்சி அடிப்படையிலான மதிப்பீடுகளை மேற்கொள்ளல், இறுதி பரீட்சைகளை நடத்துதல், தேசிய தொழில் தகைமைகளை உறுதிப்படுத்தலும் ஏனைய தொழில் சான்றிதழ்களை வழங்குதலும்.
- தொழிற்பயிற்சி தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- தொழில் வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குதல்
- தொழில் பயிற்சித் திட்டங்களை மிகவும் செயற்திறனுடனும் பயனுள்ள வகையிலும் முன்னெடுக்கும் வகையில் பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் தொழில்நுட்ப திறமைகளை மேம்படுத்தலும் செயலமர்வுகளை நடத்துதலும்
- தொழிற்பயிற்சி நிலைய கருத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் தொழிற் பயிற்சியை விஸ்தரித்தல்
- முன்கற்கையை அறிமுகப்படுத்துவதன் மூலம் சான்றிதழ் பெறாத தொழிற்தேர்ச்சியுள்ள நபர்களுக்காக தேசிய தொழில் திறமைகளை வழங்குதல்.
- வேறு நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் வேண்டுகோளுக்கமைய தொழிற்திறன் பரீட்சைகளை நடத்துதலும் தொழில் பபரீட்சை அறிக்கைகளை வெளியிடுதலும்.

### 2012ஆம் ஆண்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அடைந்த வெற்றிகள்

- 2012ஆம் ஆண்டு தேசிய தொழில் தகைமை கட்டமைப்பின் கீழ் நடைமுறையிலிருக்கும் 130 தொழிற்பாடநெறிகளில் 130 பாடநெறிகள் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் அங்கீகாரம் பெற்றுள்ளது. இதுவரை அங்கீகாரம் பெற்ற மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கை 516 ஆகும்.
- நாடு முழுவதிலும் 12 மாவட்டங்களில் 14 ஹோட்டல் பாடசாலைகளை ஆரம்பித்தல்
- முன் கற்கை நெறிமுக முறையின் கீழ் (சீடு) 370 தேசிய தொழைில் தகைமை சான்றிதழ்கள் )ஏஞே( வழங்கப்பட்டுள்ளன. இதுவரை வழங்கப்பட்டுள்ள மொத்த சான்றிதழ்களின் எண்ணிக்கை 584 ஆகும்.
- வெளிவாரி நிறுவனங்களுக்காக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான 06 நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கனேடிய உலக பல்கலைக்கழக சேவைக்காக 126 பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல்

- வெளிவாரி நிறுவனங்களுக்காக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான 06 நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கனேடிய உலக பல்கலைக்கழக சேவைக்காக 126 பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல்
- வவுனியா மாவட்டத்தில் சென்சோலை தொழிற்பயிற்சி நிலையமொன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டது.
- முல்லைத்தீவு முல்லிடெக் தொழிற்பயிற்சி நிலையமானது ருஜேஊநுகு நிதி உதவியுடன் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் அந்த நிலையம் விரைவில் திறந்துவைக்கப்பட உள்ளது.
- இளைஞர் படையணி மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி 09 இளைஞர் படையணிக்குள் ஒப்பனை மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான 18 பாடநெறிகளை ஆரம்பிக்க திட்டமிட்டு இவற்றில் சில பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டமை
- நிர்மாணக் கைத்தொழில் சபை மற்றும் நிர்மாணச் சங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி நிர்மாணத்துறையில் தொழில் புரிபவர்களுக்காக (சீடு) திட்டத்தின்கீழ் தேசிய தொழில் தகைமை (ஏஎஙு) சான்றிதலொன்றை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.
- இலங்கை சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்களின் சங்கத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தொழிற்பயிற்சி அதிகாரசபையில் தொழில் முயற்சி பெற்றவர்களுக்கான மேலதிக பயிற்சிகளுக்கான வாய்ப்புக்கள்
- 2012ஆம் ஆண்டு பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்களில் 7920 பேருக்கு தொழில் நிலைய பயிற்சியை வழங்குதல்.
- 2012 ஆம் ஆண்டு 60 பேருக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களும் 535 பேருக்கு சுயதொழில் வாய்ப்புக்களும் 3733 உள்நாட்டு தொழில் வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.
- அரச மற்றும் தனியார் துறையினருக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அலுமெக்ஸ் தனியார் கம்பனி லங்கா டைல் கம்பனி, டேவிட் பீரிஸ் கம்பனி நேச்சர் பியுட்டி கிரியே‘ன்ஸ் கம்பனி, ஒரிபிலேம் தனியார் கம்பனி, யுஊடு கேபல்ஸ், பீனிக்ஸ் கம்பனி போன்றவற்றுடன் இணைந்து பல்வேறுபட்ட துறைகளைச் சேர்ந்த 3083 தொழில்நுட்பவியலாளர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்காக 30 குறுகியகால செயலமர்வுகளை நடத்துதல்.
- நாடு முழுவதிலும் 2,441 செயலமர்வுகளை நடத்தி பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டுச் சென்ற மாவர்கள், இளைஞர் சமாசங்களின் உறுப்பினர்கள் தொழிற்துறைகளில் பயிற்சி பெருவோர் வெளிக்கள உத்தியோகத்தர்கள், இளைஞர் படையணி பயிற்சி பெறுவோர் என்ற வகையில் 121,452 பேருக்கு தொழில் வழிகாட்டல்களையும் அலோசனைகளையும் வழங்குதல்.
- தொழில் முயற்சிகள் தொடர்பான 27 பயிற்சித்திட்டங்கள் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக 16 அறிவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் 708 இளைஞர் யுவதிகள் தொடர்பாக நடத்தப்பட்டன.
- சுயதொழில்களில் ஈடுபடும் 78 பேருக்கு 17 மில்லியனுக்கு அண்மித்த தொகையை கடன் வசதியாக மக்கள் வங்கி, இலங்கை வங்கி, மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் ஊடாக வழங்குதல்.
- தகைமை பூர்த்தி செய்துள்ள பயிலுனர்கள் 9351 பேருக்கு தேசிய தொழில் தகைமை சான்றிதழ்களையும் தேசிய தகைமைகளையும் தேசிய தொழில் தகைமையல்லாத ஏனைய பாடநெறிகளுக்காக தகைமைகளைப் பூர்த்தி செய்த பயிலுனர்கள் 6601 பேருக்கு சான்றிதழ்களை வழங்க முடிந்தமை.

- இரண்டு மாவட்ட பயிற்சி நிலையங்களான மாத்தளை தலல்ல பயிற்சி நிலையம் மற்றும் மட்டக்களப்பு வந்தாறுமூலை பயிற்சி நிலையத்தையும் விருத்தி செய்து அவற்றை தேசிய பயிற்சி நிலையங்களாக மாற்றுதல்.

**2013 இல் உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் எதிர்பார்த்த இலக்குகளும்.**

- ஹோட்டல் மற்றும் சுற்றுலா தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தனியார் சமூக அபரிவிருத்தி மோட்டார் வாகனங்களை திருத்துதல் ஆகிய துறைகளுக்கு முன்னுரிமை வழங்குதல் உட்பட. உள்நாட்டு வெளிநாட்டு சந்தையின் தேவைக்கமைய பயிலுனர்கள் 33887 பேருக்கு முழுநேர மற்றும் பகுதிநேர அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு தேசிய பொருளாதாரத்துக்கு அவர்களது பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல்.
- பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான பயிற்சி பாடசாலையொன்றை ஆரம்பித்தல்
- வேல்டின் துறையில் ஓர் பாடநெறி, மோட்டார் வாகனத்துறையில் ஓர் பாடநெறி, மெக்கா புரோனிக் துறையில் ஓர் பாடநெறி, தகவல் தொழில்நுட்பத் துறையில் 06 பாடநெறிகள், தேசிய தகைமைகள் 05 மட்டத்தில் தேசிய டிப்ளோமா பாடநெறிகளாக ஆரம்பிக்கப்பட உள்ளன.
- 2012இல் தொழில் பயிற்சி பெற்ற 8025 பேருக்கு தொழில் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
- தேசிய தொழில் தகைமைகளுக்காக தொழில் தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி முறையின் கீழ் நடைமுறையிலிருக்கும் 170 பாடநெறிகள் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- கொரியா அரசினால் வழங்கப்படும் கடன் உதவித்திட்டத்தின் கீழ் ஒருகொடவத்தை தேசிய பயிற்சி நிறுவனத்தை மிகவும் உண்ணதமான ஓர் கேந்திர நிலையமாக மாற்றுதல்.
- மன்னார் மாவட்டத்தில் ருஜேஊநுகு உதவித்திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி நிலையமொன்றை ஆரம்பித்தல்
- தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் தொடர்பான 2500 நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.
- சிங்கப்பூர் குடியரசின் பொலிடெக்னிக் நிறுவனத்தின் அனுசரணையுடன் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதற்கான 2 நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் மூலம் 60 பயிற்சியாளர்களுக்கு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.
- ரணவிரு சேவா அதிகாரசபை மற்றும் ஒருங்கிணைந்த அங்கவீனமடைந்த படைவீரர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து பயிற்சி பாடநெறிகளை நடத்துதல்.
- 2013ஆம் ஆண்டுக்குள் தேசிய தொழில் சான்றிதழ்கள் 11500 வழங்கப்படல்
- தொழில் முயற்சிகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தி சுயதொழில்களில் ஈடுபட விரும்பும் 200 பேருக்கு அரச வங்கிகள் ஊடாக கடன் வழங்குதல்.
- மனிதவள அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கல்விசார் பதவியணியினருக்கான 31 பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும் கல்விசாரா ஊழியர்களுக்காக 45 பயிற்சித் திட்டங்களை நடத்துதலும்.

கேர்ணல். எஸ்.ஆர்.பி. ரத்நாயக்க (ஆர்.டப்ளியு.பி.ஆர்.எஸ்.பி)
தலைவர்
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

**02.** **அறிமுகம்**

1995ஆம் ஆண்டு 12ஆம் இலக்க இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை சட்டமூலத்தினால் இலங்கை தேசிய தொழில் பயிற்சி அதிகாரசபை நிறுவப்பட்டது.

**03.** **இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை கட்டமைப்பு**

1995ஆம் ஆண்டு 12ஆம் இலக்க இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் பிரிவு 05க்கு இணங்க நியமிக்கப்படும் தலைவர் ஒருவர் உபதலைவர் ஒருவர் உட்பட 11 உறுப்பினர்கள் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையில் அடங்குவார்கள்.

**2012.01.01 - 2012.08.30ஆந் திகதி வரை பின்வரும் நிருவாகசபை நடைமுறையிலிருந்தது.**

| | | |
|---|---|---|
| 1 | சட்டத்தரணி திரு. தம்மிக ஹேவாபத்திரன, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | தலைவர் |
| 2 | சட்டத்தரணி திரு. வெஸ்லி வீர மந்திரி, இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை | உபதலைவர் |
| 3 | திரு. பி. ரனேபுர, மேலதிக செயலாளர், உயர்கல்வி அமைச்சு | உறுப்பினர் |
| 4 | திருமதி. எச்.என்.என். குணசேகர, பணிப்பாளர் (திட்டமிடல்) கைத்தொழில் வர்த்தகத்துறை அமைச்சு | உறுப்பினர் |
| 5 | திரு. கே.எம்.எம். சிறிவர்தன, பணிப்பாளர் நாயகம், அரச நிதிக் கொள்கைத் திணைக்களம் | உறுப்பினர் |
| 6 | கலாநிதி. திஸ்ஸ ஜினசேன, தலைவா, தேசிய பயிலுனா் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை | உறுப்பினர் |
| 7 | திரு. எ.ஆர். தேசப்பிரிய, மேலதிக செயலாளர், (தொழில்பயிற்சி), இளைஞர் அபிவிருத்தி தொழிற்தேர்ச்சி அமைச்சு | உறுப்பினர் |
| 8 | திரு. நிமல் வீரதுங்க, ஊடக செயலாளர், இளைஞர் விவகார தொழில் தேர்ச்சி திறமைகள் அபிவிருத்தி அமைச்சு | உறுப்பினர் |
| 9 | திரு. கே.சி.எ. அருண சேவா டி சில்வா, ஒருங்கிணைப்புச் செயலாளர், இளைஞர்கள் விவகார தொழில் அபிவிருத்தி அமைச்சு | உறுப்பினர் |
| 10 | திரு. உதய ஹீன் தொட்டிகே, முகாமைத்துவ பணிப்பாளர், டி.ஏ. டெக்னோலொஜிஸ், | உறுப்பினர் |
| 11 | திரு. சட்டத்தரணி கீர்த்தி களு ஆரச்சி, சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும் | உறுப்பினர் |
| 12 | திரு. எம்.டி.சி. அமரதுங்க, மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம், தொழில் திணைக்களம் | உறுப்பினர் |

2012 இல் நடத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 06 ஆகும்.

**ணக்காய்வு முகாமைத்துவக் குழு உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 1 | திரு. கே.எம்.எம். சிறிவர்தன | தலைவர் |
| 2 | திரு. ஹேரத் யாப்பா | உறுப்பினா |
| 3 | திரு. நிமல் வீரதுங்க | உறுப்பினர் |

2012 வருடத்தில் நடத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை 02 ஆகும்.

இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் தலைமை கட்டளை அதிகாரியாக தலைவர் செயற்படுவதுடன் அவரின் உதவிக்காக இரண்டு உபதலைவர்கள் பணிப்பாளர்கள் 05 பேர் 1740 உத்தியோகத்தர்களைக் கொண்ட பதவியணியினர் இருக்கின்றனர். இதன்படி 2012இல் சேவையிலீடுபட்ட பதவியணியினரில் சிரே'ட மற்றும் மத்திய மட்டத்திலான பதவியணியினர் பின்வருமாறு.

தலைவர் : கேணல் எஸ்.ஆர்.பி. ரத்நாயக்க (ஆர்.டப்ளியு.பி, ஆர்.எஸ்.பி), (2012.09.07ஆந் திகதி தொடக்கம்)
சட்டதத்ரணி தம்மிக ஹேவா பத்திரன (2012.08.30 திகதி வரை)

உபதலைவர்கள் : சட்டத்தரணி வெஸ்லி வீரமந்திரி (2012.09.03 திகதி வரை)

பணிப்பாளர்கள் :
1. திரு. கே.ஜே. கோரளகே
2. திரு. டப்ளியூ.டி. பர்னாந்து (பதில் கடமை) (2012.06.01ஆந் திகதி தொடக்கம்)
3. திரு. டப்ளியூ.ஏ. ரணவீர (பதில் கடமை) (2012.11.06ஆந் திகதி தொடக்கம்)
4. திரு. சீ.பி. லொக்கு கலப்பத்தி (பதில் கடமை) (2012.09.11 ஆந் திகதி தொடக்கம்)
5. செல்வி. எல்.பி. மனோஜன எஸ் பதிரன (பதில் கடமை) (2012.09.19ஆந் திகதி தொடக்கம்)
6. திரு. சீ. விதான பதிரன (2012.04.25 ஆந் திகதி இளைப்பாறியுள்ள)
7. திரு. ஜி.எம்.பி.எ. கல்லப (2012.03.01 ஆந் திகதி சேவையிலிருந்து விலகியுள்ளார்)
8. திரு. என்.கே.ஜி.டி. சில்வா (2012.11.05 ஆந் திகதி இளைப்பாறியுள்ளார்)

பிரதி பணிப்பாளர்கள்
1. திரு. கே. சரத் ஆனந்த
2. திரு. என்.எஸ்.டி. நவரத்ன (பதில் கடமை) (2012.07.05ஆந் திகதி தொடக்கம்)
3. திரு. என். கே. இலேசிங்க (பதில் கடமை) (2012.05.17ஆந் திகதி தொடக்கம்)
4. திரு. மகிந்த ஜயதிலக்க (2012.06.01ஆந் திகதி தொடக்கம் இளைப்பாறியுள்ளார்)
5. திரு. சம்பத் அபேகுணசேகர (பதில் கடமை) (2012.03.12ஆந் திகதி தொடக்கம் விலகியுள்ளார்)

தலைமை கணக்காய்வு உத்தியோகத்தர் 1. திரு. எச்.யு. காரியவசம்

கருத்திட்ட ஒருங்கமைப்பாளர் 1. திரு. சி.ஆர். சமரவீர (2012.04.12 ஆந் திகதி தொடக்கம்)

நிபுணத்துவ ஆலோசனைகள் 1. திரு. ஜி. பாலச்சந்தரன் (தகவல் தொழில்நுட்பம்)
(2012.01.02 தொடக்கம் 2012.11.12 வரை)
2. திரு. டி.பி.எல்.ஆர்.எச். மாகேதர (2012.04.16 தொடக்கம் 2012.11.12 வரை)

உதவிப் பணிப்பாளர்கள் 1. திரு. என்.டி.பி. தம்மிக

**2.** திரு. ட்பிளுஹ்ரீயூ.டப்ளியூ. சொய்சா **(2012.08.05** ஆந் திகதி இளைப்பாறியுள்ளார்)

**3.** திரு. டி.ஆர்.எஸ்.எல். தசநாயக்க

4. திரு. யு.கே. நந்த

**5.** திரு. எச்.டப்ளியூ.ஆர்.பி. விஜேசேகர

**6.** திரு. பி.எம். பெரேரா

**7.** திரு. ரி.டி.எஸ். சங்கதாச

**8.** திரு. ஏ.கே. ஆரச்சிகே

**9.** திரு. டப்ளியூ.ஜி. விஜேரத்ன

**10.** திரு. ரி. வினோதராஜா

**11.** திரு. ஏ.ஏ. ஜபீர்

**12.** திரு. ஜி.வி.பி.என். பெரேரா

**13.** திரு. ஈ.ஏ.டி.எஸ். சேனாரத்ன

14. திரு. எச்.டப்ளியூ. ரொஹான் பிரியந்த (பதில் கடமை)

**15.** திரு. ஏ.எம்.ஏ. ஜயதிஸ்ஸ

**16.** திரு. ஜி.டி. ஜயசிங்க

**17**. திரு. ஆர்.என்.கே.எம்.ஜே. செனவிரத்ன

**18.** திரு. வி.பி. நிமலசிறி (பதில் கடமை)

**19.** திரு. எம்.பி.ரி. இரத்நாயக்க (ஒப்பந்தம்) **(2012.04.01**ஆந் திகதி விலகியுள்ளார்)

**20.** திருமதி. பி.ஆர்.எம்.சி. குலதுங்க (பதில் கடமை)

**21.** திரு. கே.ஏ. லலிததீர (பதில் கடமை)

**22.** திரு. எச்.பி. மனம்பேரி (பதில் கடமை)

**23.** திரு. ஆர்.எம்.ஆர். ரத்நாயக்க (பதில்)(2012.06.01ஆந் திகதி தொடக்கம்)

**24**. திரு. டி.எச்.எஸ். அத்துகோரள (பதில்)(2012.05.17ஆந் திகதி தொடக்கம்)

25. திரு. எச்.ரி.டி.ஆர்.எஸ். விஜேசிங்க (பதில்)(2012.05.15ஆந் திகதி தொடக்கம்)

**26.** திரு. எச்.ரி.எஸ். விக்ரமரத்ன (பதில்)

**27**. திரு. பி.என். அபேசிங்க (பதில்)

**28.** திரு. பி.எல்.ஏ. பீரிஸ் பதில்)

பணிப்பாளர் சபை செயலாளர்/சட்ட உத்தியோகத்தர் 1. திருமதி. ஏ.ஏ.எச்.ஐ. அமரதுங்க

**பதவியணியினர் தொடர்பான தகவல் 2012.12.31 வரை**

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபைக்காக 2012ஆம் ஆண்டக்காக அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் 1928 ஆகும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கத்தின்படி 2012.12.31ஆந் திகதி சேவையில் ஈடுபட்டவர்களின் எண்ணிக்கை 1740 ஆகும்.

| | **பதவி** | **அனுமதிக்கப் பட்ட பதவியணியினர்** | **வருட இறுதியில் பதவியணியினர்** | **வருட இறுதியில் வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| 2. | பணிப்பாளர் | 5 | 4 | 1 |
| 3. | பிரதிப் பணிப்பாளர் | 5 | 3 | 2 |
| 4. | தலைமை உள்ளக கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| 5. | உதவிப் பணிப்பாளர் | 25 | 17 | 8 |
| 6. | சிரேஷ்ட பயிற்சி முகாமையாளர் | 10 | 4 | 6 |
| 7. | பணிப்பாளர் சபையின் செயலாளர் ∴ சட்ட உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 8. | கணக்காளர் | 2 | 0 | 2 |
| 9. | பயிற்சி முகாமையாளர் | 38 | 26 | 12 |
| 10. | நிர்வாக உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 11. | செயலாளர் | 5 | 6 | -1 |
| 12. | முகாமையாளர் (போக்குவரத்து) | 1 | 0 | 1 |
| 13. | முகாமையாளர் (வழங்கல்) | 1 | 1 | 0 |
| 14. | முகாமையாளர் (அச்சு) | 1 | 1 | 0 |
| 15. | கணக்காய்வு உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 16. | கட்டமைப்பு பகுப்பாய்வாளர் | 1 | 0 | 1 |
| 17. | பயிற்சி உத்தியோகத்தர் | 33 | 25 | 8 |
| 18. | அய்வு உத்தியோகத்தர் | 2 | 2 | 0 |
| 19. | திட்டமிடல் உத்தியோகத்தர் | 2 | 2 | 0 |
| 20. | ஆய்வு மதிப்பீட்டு உத்தியோகத்தர் | 3 | 0 | 3 |
| 21. | ஆய்வு உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 22. | கணக்கு உதவியாளர் | 22 | 27 | -5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 23. | கணக்காய்வு உதவியாளர் | 4 | 3 | 1 |
| 24. | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் | 42 | 27 | 15 |
| 25. | தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் | 13 | 10 | 3 |
| 26. | தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர் | 24 | 17 | 7 |
| 27. | சிரே'ட ஆலோசகர் | 26 | 24 | 2 |
| 28. | கருத்திட்ட உதவியாளர் | 115 | 34 | 81 |
| 29. | தலைமை களஞ்சிய உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| 30. | தலைமை எழுதுனர் | 2 | 2 | 0 |
| 31. | மேற்பார்வையாளர் (அச்சு) | 1 | 1 | 0 |
| 32. | கட்டிட மேற்பார்வையாளர் | 1 | 0 | 1 |
| 33. | விடுதி நிர்வாகஸ்தர் | 2 | 1 | 1 |
| 34. | ஆலோசகர் | 1179 | 1159 | 20 |
| 35. | சுருக்கெழுத்தாளர் ∴ தட்டெழுத்தாளர் | 5 | 4 | 1 |
| 36. | களஞ்சிய உத்தியோகத்தர் | 24 | 22 | 2 |
| 37. | எழுதுனர் ∴ தட்டெழுத்தாளர் | 88 | 76 | 12 |
| 38. | கணக்கு எழுதுனர் | 23 | 24 | -1 |
| 39. | கணக்காய்வு எழுதுனர் | 3 | 1 | 2 |
| 40. | காசாளர் | 1 | 1 | 0 |
| 41. | கணினி செயற்பாட்டாளர் | 5 | 5 | 0 |
| 42. | எழுத்து கோர்ப்பவர் | 1 | 1 | 0 |
| 43. | வரவேற்பு உத்தியோகத்தர் | 2 | 2 | 0 |
| 44. | இயந்திர இயக்குனர் (அச்சு) | 1 | 1 | 0 |
| 45. | புத்தகம் கோர்ப்பவர் (அச்சு) | 1 | 1 | 0 |
| 46. | அச்சு உதவியாளர் | 3 | 2 | 1 |
| 47. | சாரதி | 32 | 32 | 0 |
| 48. | அலுவலக சிற்றூழியர் | 3 | 4 | -1 |
| 49. | காவலாளி | 72 | 64 | 8 |
| 50. | களஞ்சியப் பொறுப்பாளர் | 3 | 2 | 1 |
| 51. | சிற்றூழியர்கள் ∴ தொழிலாளர்கள் | 89 | 95 | -6 |
| | **மொத்தம்** | **1928** | **1740** | **188** |
| | உதவி ஆலோசகர் | | **39** | |

**பதில் கடமையாற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய ஊழியர்கள்**

மேற்கூறிய 1740 பதவியணியினர் மத்தியில் மேற்கூறிய பதில் மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஆளணியினரும் உடங்குகின்றனர்.

| **பதவி** | **பதவிகளின் எண்ணிக்கை** | **பதவிகளின் தன்மை** |
|---|---|---|
| பணிப்பாளர் | 04 | பதில் |
| பிரதிப் பணிப்பாளர் | 02 | பதில் |
| உதவிப் பணிப்பாளர் | 08 | பதில் |
| பயிற்சி முகாமையாளர் | 07 | பதில் |
| சிரேஷ்ட பயிற்சி முகாமையாளர் | 01 | பதில் |
| ஆய்வு உத்தியோகத்தர் | 01 | ஒப்படை அடிப்படை |
| போக்குவரத்து முகாமையாளர் | 01 | பதில் |
| தலைமை களஞ்சிய உத்தியோகத்தர் | 01 | பதில் |
| தொழில் வழிகாட்டி உத்தியோகத்தர் | 01 | பதில் |
| கணக்காளர் | 01 | பதில் |
| உதவிக் கணக்காளர் | 01 | ஒப்பந்தம் |
| அலோசகர் | 587 | ஒப்பந்தம் |
| எழுதுனர் ∴ தட்டெழுத்தாளர் | 05 | ஒப்பந்தம் |
| காவலாளி | 15 | ஒப்பந்தம் |
| தொழிலாளர் | 38 | ஒப்பந்தம் |

**04. பதவியணியினா் பயிற்சியளிப்பு**

2012ஆம் ஆண்டுக்கான பதவியணியினா் பயிற்சியளிப்புக்காக விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் பதவியணியினரின் அறிவு, ஆற்றல், மனப்பாங்குகள் என்பவற்றை மாற்றும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி நெறியொன்றின் மூலம் 27 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளும் 1234 உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு பிரிவினையும் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பெரும்பாலும் இரண்டுக்கும் மேற்பட்ட உள்நாட்டுப் பயிற்சிகளில் கலந்து கொண்டார்கள். இவர்களுள் 1151 பேர் கல்விசார் பதவியணியினா் ஆவர் என்பதுடன் 83 பேர் கல்விசார் ஊழியர்கள் ஆவர்.

அந்தந்த பயிற்சிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

**வெளிநாட்டுப் பயிற்சிகள் 2012**

| | புலமைப்பிரிசில் | நாடு | கலந்து கொள்டோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ீடு சர்வதேச கருத்தரங்கு | சிங்கப்பூர் | 01 |
| 2 | மலேசியா - இலங்கை தொழில் தேர்ச்சி மூலோபாய விதிமுறைகளை பரிமாறும் நிகழ்ச்சித்திட்டம் | மலேசியா | 01 |
| 3 | சர்வதேச தொழில் தோச்சி உறுபபினா் நிகழ்ச்சித்திட்டம் | தென்கொரியா | 01 |
| 4 | முகாமைத்துவ பயிற்சித்துறை பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | சிங்கப்பூர் | 05 |
| 5 | தொழில் பயிற்சி துறையின் பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | சிங்கப்பூர் | 05 |
| 6 | ர்ஆவுஜ கருத்திட்டத்தின் கீழ் அந்தந்த துறைகளுக்கான விசேட பயிற்சி | இந்தியா | 10 |
| 7 | ஆசிய நாடுகளுக்கான பயிற்சி தகைமைகளை அனுமதிக்கும் நிகழ்ச்சித்திட்டம் | தென்கொரியா | 01 |
| 8 | கட்புலனற்றோருக்கு பயிற்சியளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் | ஸ்வீடன் | 01 |
| 9 | தொழில் வழிகாட்டிக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | தென் கொரியா | 02 |
| | **மொத்தம்** | | **27** |

## உள்நாட்டுப் பயிற்சி (கல்வி சாரா பதவியணி) – 2012

| | **பயிற்சித்துறை** | **கலந்து கொண்டோரின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | பயிற்சி வழிமுறைகள் சம்பந்தமாக ஆலோசகர்களுக்கு பயிற்சியளித்தல் | 692 |
| 02 | உளப்பாங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 77 |
| 03 | இலத்திரனியல் கற்கைக்கான உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 |
| 04 | பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டம் | 209 |
| 05 | புதிய ஆலோசகர்களுக்கான பயிற்சித்திட்டம் | 110 |
| 06 | ஊஹேஊ இயந்திர பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 07 |
| 07 | தரக்கட்டுப்பாட்டு செயலமர்வு | 46 |
| | **மொத்தம்** | **1,151** |

## உள்நாட்டுப் பயிற்சி (கல்விசாரா ஊழியர்கள்) - 2012

| | | |
|---|---|---|
| 05 | கணினி ஓவியங்கள் | 02 |
| 06 | நவநாகரீக ஆபரண உற்பத்தி தொடர்பான பயிற்சி | 01 |
| 07 | வுயை ஜஊாை ழுயெ’ள ஸநஸநெ ஶயளவநஸ | 01 |
| 08 | பசுமை உற்பத்தித்திறனை அறிமுகப்படுத்தல் | 01 |
| 09 | சம்பளப் பதிவேடு முகாமைத்துவப் பயிற்சி | 01 |
| 10 | அரச கணக்கீடுகள் | 06 |
| 11 | மதிப்பீடுகள் மற்றும் தரங்கள் தொடர்பான தேசிய கருத்தரங்கு | 02 |

| | | |
|---|---|---|
| 12 | ஒழுக்காற்று முகாமைத்துவம் | 02 |
| 13 | தொழில் ரீதியிலான மன உளைச்சல் முகாமைத்துவம் | 01 |
| 14 | செயற்திட்ட முகாமைத்துவப் பயிற்சி | 15 |
| 15 | அரச ஊழியர்களுக்கான ஆற்றல் விருத்தி பயிற்சி | 05 |
| 16 | முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி | 15 |
| | **மொத்தம்** | **83** |


| | **பயிற்சித்திட்டம்** | **கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | பெருமைமிகு அரச ஊழியர்களுக்கான சாதக உளப்பாங்கு அபிவிருத்தி | 27 |
| 02 | மனிதவள அபிவிருத்தி கொள்கைத் திட்டம் | 02 |
| 03 | மனிதவள முகாமைத்துவம் | 01 |
| 04 | காசாளரின் பொறுப்பு கடமைகள் | 01 |

## 05. தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி வழங்குதல்

நாடு முழுவதிலும் நிறுவப்பட்டுள்ள 274 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் 15 தொழில் துறைகளில் 112 பாடநெறிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்படி 2012இல் 32,855 பயிலுனர் பயிற்சி பெறுவதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களுள் 27,469 பயிலுனர்கள் பயிற்சியை பூர்த்தி செய்துள்ளனர். இந்த எண்ணிக்கையில் தொழில் முயற்சியாளர்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆற்றல் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட பயிலுனர்களும் உள்ளடங்கியுள்ளனர்.

**தொழிற்பயிற்சியில் இணைதல் மற்றும் பயிற்சி பெற்று வெளியேறுதல்**

| வருடம் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| பயிற்சியில் இணைந்தவர்களின் எண்ணிக்கை | 28,445 | 33,792 | 32,855 |
| பயிற்சியை முடித்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை | 24,537 | 30,077 | 27,469 |



**இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட முழுநேர மற்றும் பகுதிநேர பாடநெறிகள் - 2012**

| துறை | பாடநெறியும் காலமும் | இணைந்த பயிலுனர்களின் எண்ணிக்கை | பயிற்சியை முடித்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. கட்டிட நிர்மாணத்துறை | 1. நிர்மாணக்கலைஞர் (06 மாதங்கள்) | 833 | 741 |
| | 2. நிர்மாணத்துறை தொழில் நுட்பவியலாளர் | 23 | 18 |
| | 3. அளவீட்டு ஆய்வு டிப்ளோமா | 94 | 86 |
| | 4. திட்ட வரைஞர் | 218 | 193 |
| | 5. குழாய்நீர் நுட்பவியலாளர் (06 மாதங்கள்) | 501 | 437 |
| | 6. அளவீட்டு ஆய்வாளர் | 18 | 16 |
| | 7. யுரவழ உயன | 19 | 19 |
| | | **1706** | **1510** |
| 2. විදුලි සහ සන්නිවේදය | 1. உபகரண தொழில் நுட்பவியலாளர் (12 மாதங்கள்) | 22 | 13 |
| | 2. கையடக்க தொலைபேசி திருத்துனர் (06 மாதங்கள்) | 67 | 66 |
| | 3. அலுவலக உபகரண தொழில் நுட்பவியலாளர் | 13 | 12 |
| | 4. வானொளி, தொலைக்காட்சி உபகரண திருத்துவதற்கான தொழில் நுட்பவியலாளர் (12 மாதங்கள்) | 225 | 172 |

| | | | |
|---|---|---|---|
| | 5. மின்சார மோட்டார் இயக்குனர் | 13 | 13 |
| | 6. மின்சார தொழில் நுட்பவியலாளர் | 68 | 68 |
| | 7. வீடுகளுக்கான மின்சார தொழில்நுட்பவியலாளர் | 12 | 12 |
| | | **420** | **356** |
| 3. விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு | 1. பூக்கள் மற்றும் அலங்கார செடிகள் (06 மாதங்கள்) | 43 | 36 |
| | 2. நாற்றுமேடை பராமரிப்பு மற்றும் செடிகளை ஒட்டுதல் (06 மாதங்கள்) | 12 | 12 |
| | | **55** | **48** |
| 4. | 1. விவசாய உபகரண தொழில் நுட்பவியலாளர்கள் (06 மாதங்கள்) | 83 | 72 |
| | 2. மோட்டார் வாகன குளிரூட்டி தொழில் நுட்பவியலாளர் (06 மாதங்கள்) | 161 | 142 |
| | 3. மோட்டார் வாகன மின்சார தொழில்நுட்பவியலாளர் (12 மாதங்கள்) | 187 | 153 |
| | 4. மோட்டார் வாகன தொழில் நுட்பவியலாளர் (06 மாதங்கள்) | 697 | 597 |
| | 5. மோட்டார் வாகன வர்ணம் பூசுபவர் (06 மாதங்கள்) | 137 | 126 |
| | 6. மோட்டார் வாகன ஒட்டுவேலை (06 மாதங்கள்) | 114 | 103 |
| | 7. சாரதி – கனரக வாகனங்கள் (03 மாதங்கள்) | 350 | 330 |
| | 8. விவசாயப்பண்ணை உபகரண தொழில் நுட்பவியலாளர் | 15 | 15 |
| | 9. மிதிவண்டி தொழில் நுட்பவியலாளர் | 732 | 605 |

| | | | |
|---|---|---|---|
| | 10. மோட்டார் வாகன தொழில் நுட்பவியலாளர் | 16 | 16 |
| | 11. முச்சக்கர வண்டி தொழில் நுட்பவியலாளர் (06 மாதங்கள்) | 589 | 555 |
| | | **3081** | **2714** |
| 5. தகவல் தொழில்நுட்ப பல்லூடகம் | 1. தேசிய தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பத்திர பாடநெறி (06 மாதங்கள்) | 1627 | 1499 |
| | 2. தொழில் சான்றிதழ் பாடநெறி அடொப் (06 மாதங்கள்) | 23 | 21 |
| | 3. தேசிய தகவல் தொடர்பாடல் டிப்ளோமா சான்றிதழ் பாடநெறி (12 மாதங்கள்) | 411 | 352 |
| | 4. ஊஜுளுஊமு கணினி கட்டமைப்பு பாடநெறி (12 மாதங்கள்) | 72 | 64 |
| | 5. கணினி ஓவிய வடிவமைப்பு அங்கவீனமானவர்களுக்கான (06 மாதங்கள்) | 72 | 70 |
| | 6. கணினி வன்பொருள் தொழில் நுட்பவியலாளர் (12 மாதங்கள்) | 293 | 265 |
| | 7. கணினி வன்பொருள் தொழில் நுட்பவியலாளர் (06 மாதங்கள்) | 718 | 633 |
| | 8. கணினி தொழில் நுட்பவியலாளர் (அங்கவினமடைந்தோருக்கான) (06 மாதங்கள்) | 13 | 11 |
| | 9. கணினி உள்ளீட்டு உதவியாளர் | 12 | 12 |
| | 10. கணினி மென்பொருள் | 878 | 870 |
| | 11. புதியவர்களுக்கான அடிப்படை கணினி அறிவு | 43 | 43 |
| | 12. அரச ஊழியர்களுக்கான விசேட கணினி பயிற்சி | 74 | 74 |
| | 13. கணினி அறிவு தொடர்பான விசேட செயற்திட்டம் | 121 | 121 |

| | | | |
|---|---|---|---|
| | 14. ஐஊ3 | 365 | 355 |
| | 15. ஆளு முகககைஉந | 13 | 12 |
| | 16. தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (06 மாதங்கள்) | 2358 | 2180 |
| | | **7093** | **6582** |
| 6. அச்சு | 1. லிடோ மெசின் இயக்குநர் (12 மாதங்கள்) | 36 | 31 |
| | 2. கணினி ஓவியக் கலைஞர் (06 மாதங்கள்) | 249 | 231 |
| | | **285** | **262** |
| 7. ஹோட்டல் சுற்றுலாத்துறை | 1. சமையற்காரர் (06 மாதங்கள்) | 1035 | 902 |
| | 2. அறை ஊழியர்கள் (06 மாதங்கள்) | 357 | 320 |
| | 3. உணவக ஊழியர் (06 மாதங்கள்) | 294 | 259 |
| | | **1686** | **1481** |
| 8. உலோகத் தொழில் | 1. பித்தளை வடிவமைப்பாளர் (06 மாதங்கள்) | 11 | 11 |
| | 2. உலோக வடிவமைப்பாளர் (12 மாதங்கள்) | 57 | 51 |
| | 3. பொருத்துனர் (பொது) (12 மாதங்கள்) | 37 | 36 |
| | 4. இயந்திரவியலாளர் (பொது) (12 மாதங்கள்) | 240 | 189 |
| | 5. பொருத்துனர் (12 மாதங்கள்) | 29 | 26 |
| | 6. பொருத்துனர் (06 மாதங்கள்) | 861 | 755 |
| | 7. அலுமினியம் வடிவமைப்பாளர் | 768 | 655 |
| | 8. ஊஊேஊ ஆடைடடைபெ | 23 | 23 |

| | | | |
|---|---|---|---|
| | | **2026** | **1746** |
| 9. மாணிக்கக்கற்கள் தங்க ஆபரணம் | 1. மாணிக்கக்கற்கள் செப்பனிடுபவர் (06 மாதங்கள்) | 16 | 14 |
| | 2. தங்க ஆபரண தொழில் நுட்பவியலாளர் (12 மாதங்கள்) | 79 | 66 |
| | 3. தங்க ஆபரண மாணிக்கப் பதிப்பாளர் (06 மாதங்கள்) | 24 | 20 |
| | | **119** | **100** |
| 10. மரங்களினாலான உற்பத்திகள் | 1. மர செதுக்கு வேலைகள் (06 மாதங்கள்) | 36 | 22 |
| | 2. மரவேலை தொழில் நுட்பவியலாளர் (தளபாடம்) | 776 | 674 |
| | 3. மரவேலை தொழில் நுட்பவியலாளர் (கட்டிடம்) | 114 | 78 |
| | 4. மரத்தளபாட உற்பத்தி (12 மாதங்கள்) | 184 | 144 |
| | | **1110** | **918** |
| 11. துணிவகைகள் மற்றும் ஆடைகள் | 1. பெப்ரிக் கட்டர் (03 மாதங்கள்) | 11 | 11 |
| | 2. ஆடை உற்பத்தி மேற்பார்வை (06 மாதங்கள்) | 52 | 43 |
| | 3. ஆடை தரக்கட்டுப்பாட்டாளர் (06 மாதங்கள்) | 253 | 217 |
| | 4. அதிவேக தையல் இயந்திர இயக்குனர் (06 மாதங்கள்) | 262 | 230 |
| | 5. அதிவேக தையல் இயந்திர இயக்குனர் (03 மாதங்கள்) | 987 | 962 |
| | 6. மோஸ்தர் வடிவமைப்பாளர் (06 மாதங்கள்) | 195 | 173 |
| | 7. திரை அச்சு நுட்பவியலாளர் (0 மாதங்கள்) | 193 | 157 |
| | 8. உடைகளை தைத்தல் (ஆண்கள்) (06 மாதங்கள்) | 289 | 255 |
| | 9. உடைகளை தைத்தல் (பெண்கள்) (06 மாதங்கள்) | 2165 | 1844 |
| | 10. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (06 மாதங்கள்) | 38 | 31 |

| | | | |
|---|---|---|---|
| | | **4445** | **3923** |
| 12. மின்சாரம் | 1. குளிரூட்டல் குளிர்சாதன தொழில் நுட்பவியலாளர் (12 மாதங்கள்) | 542 | 448 |
| | 2. மின்சார உபகரணங்களை திருத்துதல் | 79 | 54 |
| | 3. மின்சார மோட்டார் சுற்றும் தொழில் நுட்பவியலாளர் | 385 | 322 |
| | 4. மின்சார தொழில் நுட்பவியலாளர் (06 மாதங்கள், 12 மாதங்கள்) | 2391 | 1987 |
| | | **3397** | **2811** |


| | | | |
|---|---|---|---|
| 13. தொழில்நுட்ப முகாமைத்துவம் | 1. தொழில்நுட்ப முகாமைத்துவ டிப்ளோமா (06 மாதங்கள்) | 20 | 20 |
| | | **20** | **20** |
| 14. இறப்பர், பிளாஸ்டிக், தோல் பொருள் உற்பத்தி | 1. தோல் பொருள் உற்பத்தி (பைகள்) (06 மாதங்கள்) | 16 | 14 |
| | 2. தோல் சப்பாத்து உற்பத்திகள் | 54 | 50 |
| | | **70** | **64** |
| 15. පුද්ගල හා සමාජීය සංවර්ධනය | 1. ஒப்பனை (03 மாதங்கள்) | 1477 | 1360 |
| | 2. முடிவெட்டுபவர் (ஆண்கள்) (06 மாதங்கள்) | 29 | 22 |
| | 3. சிகை இலங்காரக் கலைஞர் (03 மாதங்கள்) | 1147 | 1089 |
| | 4. இனிப்பு பண்டங்கள் உற்பத்தி | 8 | 8 |
| | 5. காளான் பூ வளப்பாளர் | 10 | 10 |
| | 6. ஆங்கில மொழி | 76 | 76 |
| | 7. பூங்கா அங்காரக் கலைஞர் | 241 | 211 |
| | | **2988** | **2776** |
| 16.கடற்றொழில் | 1. மோட்டார் படகு தொழில் நுட்பவியலாளர் | 86 | 79 |
| | | **86** | **79** |
| 17. அலுவலக முகாமைத்துவம் | 1. செயலாளர் பயிற்சி | 64 | 56 |
| | | **64** | **56** |
| | 1. பேக்கரி உற்பத்தியாளர் | 362 | 305 |

| | | | |
|---|---|---|---|
| 18. உணவு தொழில்நுட்பம் | 2. பழங்கள், மரக்கறி உற்பத்தி தயாரிப்பாளர் | 51 | 48 |
| | | **413** | **353** |
| | **மொத்தம்** | **29,064** | **25,799** |

### தொழில் பயிற்சித்துறைக்கான கிராக்கி – 2012


| துறை | சேர்த்த பயிலுனர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1. கட்டிட நிர்மாணத்துறை | 1706 |
| 2. இலத்திரனியல் தொடர்பாடல் | 420 |
| 3. விவசாயம், கால்நடை வளப்பு | 55 |
| 4. தன்னியக்க மோட்டார் வாகன நுட்பவியலாளர் | 3081 |
| 5. தகவல் தொடர்பாடல் பல்வகை ஊடகம் | 7093 |
| 6. அச்சு | 285 |
| 7. ஹோட்டல், சுற்றுலாத்துறை | 1686 |
| 8. உலோகம் சார்ந்தவை | 2026 |
| 9. மாணிக்கக்கற்கள் தங்க ஆபரணங்கள் | 119 |
| 10. மீன் உற்பத்திகள் | 1110 |
| 11. ஆடைகள் துணிகள் | 4445 |
| 12. மின்சாரம் | 3397 |
| 13. தொழில்நுட்ப முகாமைத்துவம் | 20 |
| 14. இறப்பர், பிளாஸ்டிக், தோல்பொருள் சார்ந்த உற்பத்திகள் | 70 |
| 15. தனிநபர் மற்றும் சமூக அபிவிருத்தி | 2988 |
| 16. கடற்றொழில் | 86 |
| 17. அலுவலக முகாமையாளர் | 64 |
| 18. உணவு தொழில்நுட்பம் | 413 |
| **மொத்தம்** | **29,064** |

## துணிகளுக்கான கிராக்கி – 2012





## நிலையங்கள் தொடர்பான தகவல்கள

| வருடம் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| தொழில் பயிற்சி நிலையம் | 236 | 232 | 244 |
| மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் | 22 | 23 | 22 |
| தேசிய தொழிற்பயிற்சி நிலையம் | 06 | 06 | 08 |
| **மொத்தம்** | 264 | 261 | 274 |



## 06.பயிற்சி நிலைய செயட்திட்டம் மற்றும் பயிலுனர்களின் தொகை மட்டம் - 2012

| | பயிலுனர் எண்ணிக்கை | | | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | மேல் மாகாணம் | - | 6131 | 21ழு |
| 2. | தென் மாகாணம் | - | 6601 | 23ழு |
| 3. | ஊவா மாகாணம் | - | 1774 | 06ழு |
| 4. | சபரகமுவ மாகணம் | - | 2330 | 08ழு |
| 5. | வடமேல் மாகாணம் | - | 2483 | 09ழு |
| 6. | வட மத்திய மாகாணம் | - | 2076 | 07ழு |
| 7. | கிழக்கு மாகாணம் | - | 3183 | 11ழு |
| 8. | வட மாகாணம் | - | 1733 | 06ழு |
| 9. | மத்திய மாகாணம் | - | 2753 | 09ழு |



07. **தொழில் வழிகாட்டல் மற்றும் அலோசனை நிகழ்ச்சித்திட்டம்**

நாடு முழுவதிலும் நிறுவப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் பிரிவின் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு அவர்களது விருப்பம் மற்றும் தகைமைகளுக்கு பொருத்தமான துறைகளை தெரிவு செய்வதற்காக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை வழிகாட்டும்.


இந்த நிகழ்ச்சித் திட்டங்களின்படி 2012இல் பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு செல்லும் மாணவர்கள், இளைஞர் கழகங்கள், பயிற்சி பெறுபவர்கள், துறைசார் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், இளைஞர் படையணி மாணவர்கள் ஆகியோர் தொழில் தேர்ச்சி படையணி மாணவர்கள் என்ற வகையில் 2441 பயிற்சி நெறிகள் மூலம் 121,452 பேருக்கு அறிவூட்டப்பட முடியும்.

**தொழிற்பயிற்சி வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்தல் - 2012**

| இலக்கு குழுக்கள் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | கலந்து கொண்டவர்கள் |
|---|---|---|
| பாடசாலை மாணவர்கள் | 464 | 32456 |
| பாடசாலையை விட்டு சென்றவர்கள் | 307 | 13087 |
| இளைஞர் சமூக மாணவர்கள் | 139 | 9293 |
| பயிற்சி பெறுநர்கள் | 415 | 14878 |
| வெளிக்கள உத்தியோகத்தர்கள் | 662 | 29009 |
| ஆசிரியர்கள் | 54 | 2227 |
| இளைஞர் படையணி மாணவர்கள் | 50 | 3492 |
| தொழில் தேர்ச்சி படையணி மாணவர்கள் | 22 | 1926 |
| முன்னாயத்த நிகழ்ச்சித்திட்டங்கள் | 328 | 15081 |
| **மொத்தம்** | **2,441** | **121,452** |

**தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

| வருடம் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| கலந்து கொண்டோரின் எண்ணிக்கை | 97,736 | 108,607 | 121,452 |



## 08. தொழில் வழிகாட்டல்

மாவட்ட அடிப்படையில் நடைமுறையிலிருக்கும் தொழில் வழிகாட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் மூலம் பயிலுனர்கள் 4328 பேருக்கு தொழில் வழிகாட்டல்களை மேற்கொண்டது. இவர்களுள் 3733 பெர் உள்நாட்டு தொழில்களுக்கும் 60 பேர் வெளிநாட்டு தொழில்களுக்கும் 535 பெர் சுயதொழில்களுக்கும் உட்படுத்தப்பட்டனர். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 62 உள்நாட்டு வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு இயனுள்ளவாறு தொழில் வாய்ப்புகளுக்கு உட்படுத்தப்பட்டதனால் நாட்டின் பொருளாதாரத்துக்கு 681 மில்லியன் ரூபாவுக்கான பங்களிப்பினை வழங்குவதற்கு தேசிய தொழில் பயிற்சி நிறுவனத்தினால் முடிந்தது.

**தொழில் வழிகாட்டல்கள் தொடர்பான தகவல்கள்**

| | **மாவட்ட ∴ தேசிய தொழிற் பயிற்சி நிலையங்கள்** | **உள்நாட்டு** | **வெளிநாட்டு** | **சுயதொழில்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|
| 1. | தலைமை அலுவலகம் | 58 | 0 | 0 | **58** |
| 2. | தே.தொ.ப.நி. நாரஹேன்பிட்ட | 144 | 3 | 10 | **157** |
| 3. | தே.தொ.ப.நி. ஒருகொடவத்த | 10 | 0 | 0 | **10** |
| 4. | தே.தொ.ப.நி. இரத்மலானை | 70 | 0 | 0 | **70** |
| 5. | தே.தொ.ப.நி. நியாகம | 148 | 10 | 09 | **167** |
| 6. | தே.தொ.ப.நி. பத்தேகம | 55 | 2 | 9 | **66** |
| 7. | தே.தொ.ப.நி. மிரிஜ்ஜவில | 31 | 0 | 0 | **31** |
| 8. | கொழும்பு | 404 | 6 | 35 | **445** |
| 9. | கம்பஹ | 121 | 0 | 57 | **178** |
| 10. | களுத்துறை | 201 | 1 | 35 | **237** |
| 11. | குாலி | 315 | 0 | 42 | **357** |
| 12. | மாத்தரை | 225 | 0 | 21 | **246** |
| 13. | ஹம்பாந்தோட்டை | 290 | 0 | 88 | **378** |
| 14. | பதுள்ள | 177 | 0 | 8 | **185** |
| 15. | மொனராகலை | 102 | 1 | 16 | **119** |
| 16. | இரத்தினபுரி | 128 | 0 | 10 | **138** |
| 17. | கேகாலை | 267 | 16 | 6 | **289** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | கண்டி | 222 | 8 | 58 | **288** |
| 19. | மாத்தளை | 10 | 0 | 0 | **10** |
| 20. | நுவரெலியா | 103 | 0 | 0 | **10** |
| 21. | பொலன்னறுவை | 133 | 0 | 13 | **146** |
| 22. | அநுராதபுரம் | 139 | 4 | 5 | **148** |
| 23. | குரனாகல் | 87 | 4 | 67 | **158** |
| 24. | புத்தளம் | 182 | 0 | 9 | **191** |
| 25. | அம்பாறை | 36 | 1 | 37 | **74** |
| 26. | திருகோணமலை | 75 | 5 | 0 | **80** |
| | **மொத்தம்** | **3,733** | **60** | **535** | **4,328** |

உள்நாட்டு வெளிநாட்டு சயதொழில

**தொழில் வழங்கல் மூலம் தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கிய பங்களிப்பு**


| **வகை** | **தொழில் வழங்கல்** | **தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கிய பங்களிப்பு** |
|---|---|---|
| உள்நாட்டு | 3733 | 542.26 |
| வெளிநாட்டு | 60 | 31.47 |
| சுயதொழில் | 535 | 107.38 |
| **மொத்தம்** | **4328** | **681.11** |

❖ 2012இல் தொழில் வழங்கப்பட்ட பயிலுனர்களின் எண்ணிக்கை வருடமொன்றுக்கு கிடைக்கும் இலாபத்தை சராசரியாக மதிப்பிட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

**தொழில் வழங்கப்பட்ட எண்ணிக்கை**

| வருடம் | உள்நாட்டு | வெளிநாட்டு | சுயதொழில் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 2010 | 4,370 | 130 | 826 | 5,326 |
| 2011 | 5,927 | 98 | 593 | 6,618 |
| 2012 | 3,733 | 60 | 535 | 4,328 |

**இலங்கை தொழில் பயிற்சி நிலையத்தினால் தொழில் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மாத்திரம்**




**09. அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் தொழில் திறமைகளை மேம்படுத்தலும் செயலமாவுகளை நடத்தலும்**

தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது அறிவு மற்றும் ஆற்றல் என்பவற்றை வளர்த்துக் கொள்வதற்காக மாறுபடும் உலகில் புதிய தொழில்நுட்ப அறிக்கைகளையும் வழங்கும் நோக்கத்துடன் இந்த நிகழ்ச்சித்திட்டம்

நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி 2012இல் 06 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து இவ்வாறான 30 நிகழ்ச்சித்திட்டங்கள் 06 துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்மூலம் 3083 பெருக்கு தமது திறமைகளை மேம்படுத்திபக் கொள்ள முடிந்தது.

**ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம்**

| | **நிகழ்ச்சித்திட்டம்** | **நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | **கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை** | **அனுசரணை** |
|---|---|---|---|---|
| 1 | தரை ஓடுகள் பதித்தல் | 10 | 360 | லங்கா டைல்ஸ் கம்பனி |
| 2 | ஒப்பனை | 16 | 2336 | • நேர்ச்சர்ஸ் பியுட்டி கிரியெ'ன்ஸ் தனியார் நிறுவனம் ஒரிபிலேம் தனியார் நிறுவனம் |
| 3 | பேக்கரி | 01 | 80 | ஏ.பி. மயுரி கம்பனி |
| 4 | தச்சுத்தொழில் | 01 | 45 | • மெக்போட்டன் லிமிடட் |
| 5 | குழாய்நீர் தொழில் நுட்பவியலாளர் | 01 | 68 | • பீனிக்ஸ் பெலோ காபர்ட் |
| 6 | மின்சார தொழில் நுட்பவியலாளர் | 02 | 194 | • யுனூடு கேபல் தனியார் நிறுவனம் |
| **மொத்தம்** | | **31** | **3,083** | |

## 10. புரிந்தணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடல்

இலங்கை தொழிற்பயிற்சி நிலையத்தின் நோக்கத்தை அடைவதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளுள் தொழில் பயிற்சிக்கான வாய்ப்புக்களை அதிகரித்தலை, நோக்கமாகக் கொண்டு 2012இல் தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் 05 புரிந்தணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

**அந்த புரிந்தணர்வு ஒப்பந்தங்கள் பின்வருமாறு**

| | புரிந்தணர்வு ஒப்பந்தம் | நிறுவனம் |
|---|---|---|
| 1 | வவுனியா மாவட்டத்தில் மூன்று முறிப்பு, மதலைக்குளம், சென்சுவான் தொழிற்பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தல் | விஹாரையின் தலைமை தேரர் அலவ்வ குருமுல்ல ஸ்ரீ தர்மபாலாரா மற்றும் கப்புருவல ஸ்ரீ மலியதேவ அரஹந்த ரஜமஹாவிஹாரை |
| 2 | தொழிற்பயிற்சி பாடநெறிகளில் பின்பற்றும் தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான ஒப்பனைக் கலை தொடர்பான பயிற்சி | நேர்ச்சர்ஸ் பியூட்டி |
| 3 | இலங்கை இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்கும் குளறிப்பிட்ட பயிற்சி உபகரணங்களை வழங்கி மலேசியாவில் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல் | மலேசியா (இலங்கை) அமைச்சு |
| 4 | பத்தேகம, கொத்தட்டுவ தொழில் பயிற்சி நிலையத்தைப் பேணுதல் | பிகஸ்போன் மன்றம் |
| 5 | தெல்கொட அஹுகம்மன தொழில் பயிற்சி நிலையத்தைப் பேணுதல் | சிறிஜயந்தி மகாகருனை இளைஞர் அமைப்பு |

## 11. தொழில் முயற்சிகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்

தொழிற்பயிற்சி துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிறிய அல்லது நடுத்தர அளவிலான தொழில் முயற்சியொன்றை ஆரம்பிப்பதற்கான வழிகாட்டலாக தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. 2012இல் நாடு முழுவதிலும் இருந்த இவ்வாறான 27 செயற்திட்டங்கள் ஊடாக 548 பேருக்கு சேவைகளை வழங்க முடிந்தது. மேலும் தெரிவு செய்த பாடநெறிகளுக்காக பயிற்சி பெறும் காலத்தில் உங்கள் தொழில் முயற்சி பற்றி அறிவதற்காக (முழெற யுடிழரவ டீரளைநௌள) 16 நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் 160 பேருக்கு வர்த்தக அறிவு தொடர்பான அறிக்கைகளையும் ஆற்றலையும் வழங்க முடிந்தது.

இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் பெற்றுக்கொண்ட அறிவினைப் பயன்படுத்தி தொழில் முயற்சிகள் தொடர்பான திட்டங்களைத் தீட்டி 2012இல் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டவர்களில் பயிலுனர்கள் 78 பேருக்கு சுமார் 17 மில்லியன் ரூபா மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிரதேச வங்கி போன்றவற்றின் ஊடாக கடன் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் செய்து கொடுக்கப்பட்டன. இதன்மூலம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைக்கு இளம் உழைப்பாளிகளை வலுவூட்ட முடிந்தது

## 12. சவால்கள்

- புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆற்றல் உள்ள போதனா ஆசிரியர்களின் பற்றாக்குறை மற்றும் அவர்களுக்கு உயர் மட்டத்திலான சம்பளம் செலுத்த முடியாமை.

- பயிற்சியளிப்புத் துறைகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்கிடையிலான ஒவ்வாமையை குறைத்துக்கொள்ளல்.

- சேவைகள் வழங்கும் நிறுவனமாக அரசினால் ஒதுக்கப்படும் மூலதனம் மற்றும் நடைமுறைச் செலவுகளுக்கான நிதி போதுமானதல்ல

- நாடு முழுவதிலுமுள்ள சகல தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் சமனான வசதிகளை செய்து கொடுக்க முடியாமலிருக்கின்றமை

- தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கான போதுமான நிதி வசதிகள் இல்லாமை

- தொழிற்பயிற்சி வழங்கும் தனிநபர் நிறுவனங்களுடன் போட்டி போட வேண்டிய நிலைமை

- இளைஞர் யுவதிகளை தொழிற்பயிற்சி மீது ஈர்ப்பதற்காக பொரும் முயற்சி எடுக்க நேரிட்டுள்ளமை

- சிறந்த தொழில் வாய்ப்புள்ள தொழில்நுட்ப ரீதியிலான பாடநெறிகள் தொடர்பாக இளைஞர் யுவதிகள் கூடிய கவனம் செலுத்தாமை

- இளைஞர் யுவதிகளை தொழிற்பயிற்சி தொடர்பாக ஊக்குவிப்பதற்கு பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. தொழில் வாய்ப்புக்கள் உள்ள தொழில்நுட்ப பாடநெறிகள் தொடர்பாக இளைஞர் யுவதிகள் பெரும் அக்கறை செலுத்தாமை

# *2012 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்று*

# *இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை*

மீளாய்வு ஆண்டினுள் பொதுத் திறைசேரியினாலும், அமைச்சினாலும், உள்@ர் மற்றும் வெளியூர் நன்கொடையாளர்களாலும் அதிகார சபைக்கு மொத்தமாக ரூபா **1,363,838,143..33** தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **1.1 அரச கொடைகள்** | **ஒதுக்கீடுகள் (ரூபா)** | **விடுவிக்கப்பட்ட தொகை (ரூபா)** |
|---|---:|---:|
| திறைசேரி கொடைகள் - மீண்டெழும் | 850,000,000.00 | 850,000,000.00 |
| திறைசேரி கொடைகள் - மூலதன | 591,500,000.00 | 475,900,000.00 |
| அமைச்சுக் கொடைகள் - மீண்டெழும் | 25,074,000.00 | 25,074,000.00 |
| யுனிசெப் | 3,854,143.33 | 3,854,143.33 |
| எச்.எம்..ரி.ஐ. (ர்ஆவுஐ) | 7,600,000.00 | 7,600,000.00 |
| பிராந்திய கடற்றொழில் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டம் | 1,410,000.00 | 1,410,000.00 |
| **மொத்தம்** | **1,479,438,143.33** | **1,363,838,143.33** |

| **1.2 வருமானம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட (ரூபா)** | **ஈட்டிய தேறிய வருமானம் (ரூபா)** |
|---|---:|---:|
| வருமானம் | **80,000,000.00** | **125,951,193.21** |

2012 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

பின்வரும் ஆவணங்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றன:

01. 2012 திசெம்பர் 31ஆம் திகதியன்று உள்ளவாறான நிதிக்கூற்று நிலைமை.

02. 2012 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுச் .செயலாற்றுகை

03. 2012 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று.

04. 2012 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான தேறிய சொத்து . மாற்றங்களின் கூற்று

05 நிதிக் கூற்றுக்கான குறிப்புரைகள்.

கேர்ணல் எஸ்.ஆர்.பீ. ரத்நாயக்க (RWP,RSP)

தலைவர்
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை

பிரசாத் லொக்குகலப்பத்தி
பணிப்பாளர் (நிதி)

## 2012 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் நிதிக்கூற்று நிலைமை.

| | குறிப்பு | 2012 (ரூபா) | | 2011 (ரூபா) | |
|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் | | | | | |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் பொறிகள், உபகரணங்கள் | 2 | **5,602,397,206.13** | | 4,955,516,007.34 | |
| இடம்பெற்று வரும் மூலதனப் பணிகள் | 3 | **42,515,103.96** | | 70,945,141.57 | |
| ஏனைய நிதிச் சொத்துக்கள் நிலையான வைப்புக்கள் | | **25,000.00** | **5,644,937,310.09** | 25,000.00 | 5,026,486,148.91 |
| நடைமுறைச் சொத்துக்கள் கையிருப்புகள் | 4 | **27,743,984.66** | | 22,466,182.82 | |
| அறவிட வேண்டியவை | 5 | **27,004,876.03** | | 32,431,994.51 | |
| பணியாட் தொகுதிக் கடன் | 6 | **39,915,619.33** | | 38,871,607.32 | |
| காசும் காசுக்கு நிகரான சொத்துக்களும் | 7 | **85,636,160.92** | **180,300,640.94** | 89,181,574.70 | 182,951,359.35 |
| மொத்தச் சொத்துக்கள் | | | **5,825,237,951.03** | | **5,209,437,508.26** |
| உரிமைகளும் பொறுப்புக்களும் | | | | | |
| திரண்ட மிகை (பற்றாக்குறை) | | **-517,566,571.16** | | (517,459,890.91) | |
| அரச கொடைகள் - மூலதனம் | 8 | **31,920,731.38** | **-485,645,839.78** | 36,642,549.71 | -480,817,341.20 |
| நடைமுறை சாரா பொறுப்புக்கள் பிற்போடப்பட்ட வருமானக் கொடைகள் | 9 | **3,712,897,842.01** | | 3,094,396,681.23 | |
| மீள்மதிப்பீட்டுப் பற்றாக்குறை | | **2,319,991,544.97** | | 2,319,991,544.97 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 10 | 200,517,827.18 | 6,233,407,214.16 | 172,574,957.88 | 5,586,963,184.08 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | | |
| செலுத்த வேண்டியவை | 11 | 62,204,040.29 | | 93,255,700.26 | |
| திரண்ட செலவினம் | 12 | 15,272,536.36 | 77,476,576.65 | 10,035,965.12 | 103:291,665.38 |
| மொத்த உரிமைகளும் பொறுப்புகளும் | | | 5,825,237,951.03 | | 5,209,437,508.26 |

# 2012 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று (தன்மையின்படி செலவின வகையீட்டை எடுத்துக்காட்டல்)

| விபரணம் | குறிப்பு | 2012 (ரூபா) | 2011 (ரூபா) |
|---|---|---|---|
| செயற்பாட்டு வருமானங்கள் | | | |
| மீண்டெழும் கொடை - திறைசேரி | | 850,000,000.00 | 807,600,000.00 |
| மீண்டெழும் கொடை - அமைச்சு | | 25,074,000.00 | |
| பிற்போடப்பட்ட வருமானக் கொடைகள் | | 479,812,995.76 | 335,897,669.71 |
| ஏனைய வருமானங்கள் | | | |
| ஏனைய வருமானங்கள் | 13 | 107,921,111.72 | 81,157,916.70 |
| உற்பத்தி அலகுக்கான வருமானம் (தேறிய) | 14 | 18,030,081.49 | 16,819,918.21 |
| விசேட கருத்திட்டங்களுக்குக் கிடைத்த நிதியங்கள் | 15 | 8,428,127.65 | 74,810,730.81 |
| | | 1,489,266,316.62 | 1,316,286,235.43 |
| செயற்பாட்டு செலவினங்கள் | | | |
| பணியாட்டொகுதி கிரயம் | 16 | 648,243,805.20 | 563,088,826.34 |
| போக்குவரத்து | 17 | 10,672,082.97 | 12,528,714.28 |
| வழங்கல்களும் நுகர்வுப் பயன்பாடும் | 18 | 27,483,115.97 | 24,880,653.31 |

| | | | |
|---|---|---|---|
| பேணுகை | 19 | 27,248,877.41 | 35,122,467.68 |
| ஒப்பந்த ரீதியான சேவைகள் | 20 | 111,039,274.14 | 88,965,576.24 |
| பணியாட்டொகுதி பயிற்றுவிப்புகள் | | 2,179,196.87 | 7,481,327.92 |
| பதவியுயர்வும் தொழில் வழிகாட்டலும் | | 32,206,844.62 | 38,151,727.94 |
| தொழில் உருவாக்கல், ஆராய்ச்சி, மற்றும் தொழில் முயற்சியாண்மையும் | 21 | 2,641,071.25 | 3,276,942.25 |
| தேய்மானம் | | 479,812,995.76 | 335,897,669.71 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 22 | 122,819,399.07 | 150,008,639.90 |
| விசேட கருத்திட்டங்கள் மீதான செலவினம் | 23 | 8,428,127.65 | 74,810,730.81 |
| நிதிக் கிரயம் | 24 | 460,665.95 | 406,625.17 |
| மொத்த செயற்பாட்டுச் செலவினம் | | 1,473,235,456.86 | 1,334,619,901.55 |
| காலப் பிரிவிற்கான தேறிய மிகை.·.பற்றாக்குறை | | 16,030,859.76 | (18,333,666.12) |
| திரண்ட மிகை.·.பற்றாக்குறை கூற்று | | | |
| ஜனவரி 01ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை | | (517,459,890.91) | (493,129,667.33) |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | 25 | (16,137,540.01) | (5,996,557.46) |
| மீளக் குறிப்பிட்டவாறு | | (533,597,430.92) | (499,126,224.79) |
| காலப் பிரிவிற்கான தேறிய மிகை.·.பற்றாக்குறை | | 16,030,859.76 | (18,333,666.12) |
| திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான நிலுவை | | **(517,566,571.16)** | **(517,459,890.91)** |

2012 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின்
காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2012 (ரூபா) | | 2011 (ரூபா) | |
|---|---|---|---|---|
| செயற்பாட்டுப் பணிகள் | _ | _ | | |
| காலப்பிரிவிற்கான மிகை (பற்றாக்குறை) | | 16,030,859.76 | | (18,333,666.12) |
| முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் | | | | |
| சீராக்கல்: | | | | |
| தேய்மானம் | 479,812,995.76 | | 335,897,669.71 | |
| பிற்போடப்பட்ட வருமானக் கொடை இலதாக்கல் | (479,812,995.76) | | (335,897,669.71) | |
| பணிக்கொடை ஏற்பாடுகள் | 36,206,831.95 | | 28,488,585.04 | |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (8,263,962.65) | | (6,823,470.21) | |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | (16,137,540.01) | | (5,996,557.46) | |
| வரவேண்டியவைகளின் அதிகரிப்பு.'.குறைப்பு | 5,427,118.48 | | 17,193,217.79 | |
| பணியாட்டொகுதி கடன் அதிகரிப்பு.'.குறைப்பு | (1,044,012.01) | | (1,058,096.70) | |
| செலுத்தவேண்டியவைகளின் அதிகரிப்பு.'.குறைப்பு | (31,051,659.97) | | (14,215,782.11) | |
| திரண்ட செலவின அதிகரிப்பு.'.குறைப்பு | 5,236,571.24 | | (277,678.07) | |
| கையிருப்புகளின் அதிகரிப்பு.'.குறைப்பு | (5,277,801.84) | (14,904,454.81) | (4,210,271.05) | **13,099,947.23** |
| செயற்பாட்டுப் பணிகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | | 1,126,404.95 | | **(5,233,718.89)** |

2012 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்று

| | | | | |
|---|---|---|---|---|
| முதலீட்டுப் பணிகள் | – | – | | |
| சொத்து, பொறி, உபகரணங்கள் கொள்வனவு | (1,126,694,194.55) | | (466,691,907.37) | |
| இடம்பெற்றுவரும் வேலைகள் | 28,430,037.61 | | (45,663,610.85) | |
| முதலீட்டுப் பணிகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல் | | (1,098,264,156.94) | | (512,355,518.22) |
| நிதிசார் பணிகள் | – | – | | |
| அரச மூலதனக் கொடைகள் | 475,900,000.00 | | 457,500,000.00 | |
| ஏனைய வருமானக் கொடைகள் | 617,692,338.21 | | 36,375,490.81 | |
| நிதிசார் பணிகள் மூலமாக தேறிய காசுப் பாய்ச்சல் | | 1,093,592,338.21 | | 493,875,490.81 |
| காசும் காசுக்கு நிகரான சொத்துக்களின் தேறிய அதிகரிப்பு.'.குறைப்பு | | (3,545,413.80) | | (23,713,746.30) |
| காலப்பிரிவு ஆரம்பத்தில் காசும் காசுக்கு நிகரான சொத்துக்களும் | | 89,181,574.70 | | 112,895,321.00 |
| காலப்பிரிவு முடிவில் காசும் காசுக்கு நிகரான சொத்துக்களும் | | 85,636,160.90 | | 89,181,574.70 |

## இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய கூற்று

| விவரணம் | திரண்ட நிதியம் | அரச மூலதனக் கொடைகள் | பிற்போடப்பட்ட வருமானக் கொடைகள் | மீள் மதிப்பீட்டு மிகை | பணிக்கொடை ஏற்பாடுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2011 சனவரி 01ஆம் திகதியில் உள்ளவாறான | (493,129,667.33) | 56,466,698.12 | 2,898,412,747.24 | 2,319,991,544.97 | 150,909,843.05 | 4,932,651,166.05 |
| முன்னைய ஆண்டு சீராக்கல்கள் | (5,996,557.46) | | | | | (5,996,557.46) |
| இவ்வருடத்தில் கிடைத்த கொடைகள் | | 457,500,000.00 | | | 28,488,585.04 | 485,988,585.04 |
| பிற்போடப்பட்ட வருமானக் கொடைகளுக்கு மாற்றப்பட்ட தொகை | | (477,780,027.41) | 514,155,518.22 | | | 36,375,490.81 |
| இவ்வாண்டிற்கான இலதாக்கல் | | | (335,897,669.71) | | | (335,897,669.71) |
| இவ்வாண்டிற்கான மிகை.்.பற்றாக்குறை | (18,333,666.12) | | | | | (18,333,666.12) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இவ்வாண்டிற்கான கொடுப்பனவு | | | | | (6,823,470.21) | (6,823,470.21) |
| இவ்வாண்டில் திரண்டவை | | | | | | |
| 2011 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை | (517,459,890.91) | 36,186,670.71 | 3,076,670,595.75 | 2,319,991,544.97 | 172,574,957.88 | 5,087,963,878.40 |
| 2011 சனவரி 01ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை | (517,459,890.91) | 36,186,670.71 | 3,076,670,595.75 | 2,319,991,544.97 | 172,574,957.88 | 5,087,963,878.40 |
| ஆரம்ப ஐந்தொகை சீராக்கல்கள் | (16,137,540.01) | 455,879.00 | 17,726,085.48 | | | 2,044,424.47 |
| சீராக்கப்பட்ட ஆரம்ப ஐந்தொகை | | | 3,094,396,681.23 | | | 3,094,396,681.23 |
| ஆண்டில் கிடைக்கப்பெற்ற கொடைகள் | | 475,900,000.00 | | | 36,206,831.95 | 512,106,831.95 |
| பிற்போடப்பட்ட வருமானக் கொடைகளுக்கு மாற்றப்பட்ட தொகை | | (480,621,818.33) | 1,098,314,156.54 | | | 617,692,338.21 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிற்போடப்பட்ட வருமானக் கொடைகளுக்கு மாற்றப்பட்ட தொகை | | (480,621,818.33) | 1,098,314,156.54 | | | 617,692,338.21 |
| இவ்வாண்டிற்கான இலதாக்கல்கள் | | | (479,812,995.76) | | | (479,812,995.76) |
| இவ்வாண்டிற்கான மிகை.்.பற்றாக்குறை | 16இ030இ859.76 | | | | | 16,030,859.76 |
| இவ்வாண்டிற்கான கொடுப்பனவு | | | | | (8,263,962.65) | (8,263,962.65) |
| ஆரம்ப ஐந்தொகை சீராக்கல்கள் | | | | | | |
| 2012 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகை | (517இ566இ571.16) | 31இ920இ731.38 | 3,712,897,842.01 | 2,319,991,544.97 | 200,517,827.18 | 5,747,761,374.38 |

**01 - கணக்கீட்டுக் கொள்கைகள்**

1.0 **கூட்டிணைவான தகவல்கள்**

1.1 இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 1995ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நியதிச்சட்ட சபையாகும்.

1.2 நிதிசார் கூற்றுக்கள் தொடர்பாக பக்கம் 04 முதல் 25 வரையில் காணப்படும் குறிப்புகள் நிதிக் கூற்றுக்களின் முக்கிய அம்சங்களாக அமைகின்றன.

1.3 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமானங்கள், விசேடமாகக் குறிப்பிட்டிருந்தாலொழிய ஏனையவை இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளன. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

1.4 **பொதுவான கொள்கைகள்**

1.4.1 இசைவுக்கூற்று

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இயைபானதாக நிதி நிலைமைக்கூற்று, நிதிசார் செயலாற்றுகைக்கூற்று, தேறிய சொத்துமாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்புகளுடன் (நிதிக்கூற்றுகள்) தயாரிக்கப்பட்டுள்ளன.

1.4.2 தயாரிப்பின் அடிப்படை

விடேமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையிலும் வரலாற்றுக் கிரய அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.4.3 கூட்டிணைவான தகவல்கள்

விடேமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, அதிகார சபையால் முன்வைக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், முன்னைய ஆண்டில் பிரயோகிக்கப்பட்ட கொள்கைகளுடன் இயைபானவையாகும். நடப்பு ஆண்டின் சமர்ப்பணங்களைக் காண்பிக்கும் பொருட்டு முன்னைய ஆண்டின் தொகைகளும் வாக்கியத் தொடர்களும் அவசியமான இடங்களில் மீளமைக்கப்பட்டுள்ளன.

1.4.4 ஐந்தொகைத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

சீராக்கல் அல்லது கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டிய எந்தவொரு நிகழ்வும் ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் எழவில்லை.

1.5 **வரியிடல்**

அரசாங்க நிதியங்களின் பேரில் தொழிற்படுத்தப்படும் அதிகார சபையின் மூலம் இலாபமிடல் எதிர்பார்க்கப்படாமையினால், வருமான வரிக்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.

1.5.1 பிற்போடப்பட்ட வரி

அதிகாரசபையின் வரியிடல் கொள்கைக்கு அமைவாக ஒப்பீட்டு ரீதியான காலமாற்றம் வரி தொடர்பில் எழாது. ஆகையால், பிற்போடப்பட்ட வரியிடலொன்று ஏற்பாடு செய்யப்படவில்லை.

1.6 சொத்துக்களையும் அவற்றின் அளவீட்டு அடிப்படையையும் மதிப்பிடுதல்.

1.6.1 நிலையான சொத்துக்களை ஏற்று அங்கீகரித்தல்.

நிலையான சொத்து உருப்படியொன்றின் கிரயம் ஏற்று அங்கீகரிக்கப்படும் வேளையில்,

அ) சொத்துக்களுடன் தொடர்புபட்ட எதிர்காலப் பொருளாதார அனுகூலங்கள் தொழிற்பயிற்சி அதிகார சபையை நோக்கியதாகப் பெருகி வரக்கூடும்.

ஆ) தொழிற்பயிற்சி அதிகார சபையின் சொத்துக்களுக்கான கிரயம், நம்பத்தகுந்தவாறு மதிப்பிடலாம்.

**தொழிற்பயிற்சி அதிகார சபையின் மூலதனவாக்க தொடக்கநிலை ரூபா 2,000.:.-ஆகும்.** எவ்வாறாயினும், நிலையான சொத்துக்களை அடையாளம் காண்பது மூலதனவாக்க தொடக்க நிலையின் மீது மாத்திரம் தங்கியிருப்பதில்லை என்பதுடன், கீழ்க்காணும் விடயங்களையும் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

(ை) சொத்தின் உத்தேச பயனுள்ள ஆயுட்காலம்.

(ைை) சொத்தின் உளங்கொள் நோக்கம்.

(ைைை) சொத்தின் நிலைத்திருக்கும் தன்மை.

(ைவ) சொத்து உபயோகிக்கக் கூடியதா, இல்லையா என்ற தன்மை.

1.6.2 கையிருப்புக்கள்

வழக்கொழிந்ததும் மந்தகதியான அசைவுகளுடன் கூடியதுமான உருப்படிகளுக்காக உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட பின் ஆகக்குறைந்த கிரயத்தினதும் தேறிய நம்பத் தகுந்த பெறுமானத்தினதும் மீது கையிருப்புகளின் மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. கையிருப்பை இன்றுள்ள இடத்திற்கும் நிலைக்கும் கொண்டுவருவதற்காக ஏற்பட்ட கிரயம் பின்வருமாறு: முதலில் வருவன முதலில் வெளியேறும் (குஐகுழு) அடிப்படையில் கணிப்பிடப்படும்.

1. பயிற்சிப் பொருள்கள் -கிரய விலையில்

2. காகிதாதிகள் -கிரய விலையில்

3. மூலப்பொருள்கள் (அச்சீட்டு) -கிரய விலையில்

4. ஏனைய உபயோகப் பொருள்கள் -கிரய விலையில்

1.6.3 ஆதனம் (சொத்து), பொறி மற்றும் உபகரணம்.

(அ).கிரயத்தில் அல்லது மதிப்பீட்டிலிருந்து திரண்ட தேய்மானத்தைக் கழித்த பின்னரே ஆதனமும் (சொத்து), பொறியும் உபகரணமும் பதிவு செய்யப்படும்.

மீள்நிறுவுதல், கையுதிர்ப்பு அல்லது எதிர்காலப் பொருளாதார அனுகூலங்களுக்காகப் பயன்படாதிருப்பதன் பேரில் ஆதனம் (சொத்து), பொறி, உபகரண உருப்படிகள் ஏற்றங்கீகரிக்கப்படாமை காரணமாகத் தவறவிடப்படும் யாதேனும் ஓர் ஆதாயம் ஈட்டும் அல்லது இழப்பு குறித்த சொத்தை ஏற்றங்கீகரிக்கப்படாமைக்கு உட்படுத்திய ஆண்டின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்..

ஆ) தேய்மானம்

தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் இறையிலி காணிகள் தவிர்ந்த சகல ஆதனம் (சொத்து) பொறி, உபகரணம் என்பவற்றின் கிரயம் அல்லது மதிப்பீட்டின் பேரில் குறைவடைந்து செல்லும் நிலுவை முறையைப் பயன்படுத்திக் கணிப்பிடப்பட்டுள்ளது.

| வகை | மூ |
|---|---|
| கட்டிடங்களும் மேம்படுத்தல்களும் | 5% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 25% |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10% |
| பயிற்சி உபகரணங்கள் | 20% |
| பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 20% |
| கணனி உபகரணங்கள் | 20% |
| மின்னியல் உபகரணங்கள் | 20% |

இ) மூலதன தொழிற்பாட்டு முன்னேற்றம்
வேலை பூர்த்தி செய்யப்பட்ட பணியின் அல்லது மதிப்பீட்டுக் கிரயத்தின் பேரில் கருத்திட்டங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன.

1.6.4 வரவேண்டியவைகள்.

அறவிடமுடியா மற்றும் ஐயத்திற்கிடமான வரவேண்டிய தேறிய ஏற்பாடுகளைக் கழித்த பின் வரவேண்டிய உருப்படிகளும் அவற்றை விற்பதன்மூலம் கிடைக்குமென மதிப்பீடு செய்யப்படும் பெறுமானத்தின்படி குறிப்பிடப்படுகின்றன. கடனுக்கு 365 நாட்கள் தாண்டும்போதும் மொத்தப் பெறுமதியை அறவிடுவதைத் தொடர்ந்தும் எதிர்பார்க்க முடியாதுள்ளபோதும் ஐயக்கடன் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

1.6.5. காசும் காசுக்கு நிகரானவையும்

கையிலுள்ள காசையும் வங்கி வைப்புக்களின் கூட்டு மொத்தத்திலிருந்து செலுத்தப்படாத வங்கி வைப்புக்களின் மீவரையலையும் கழித்து காசுப் பாய்ச்சல் கூற்றில் காசும் அதற்கு நிகரானவையும் காண்பிக்கப்பட்டுள்ளது.

**1.7 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்**

1.7.1 நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது சகல அறியப்பட்ட பொறுப்புக்களும் கணக்கிலி உட்படுத்தப்பட்டுள்ளன.

1.7.2
பணியாட்டொகுதிக்கான பணிக்கொடை

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது 2007ஆம் ஆண்டுவரை 5 (ஐந்து) வருட சேவையைப் பூர்த்தி செய்திருந்த ஊழியர்களுக்கு மாத்திரமே பணிக்கொடை ஏற்பாடுகளைச் செய்து வந்தது. இக்கொள்கையானது 2008ஆம் ஆண்டு முதல் இலங்கை கணக்கீட்டு நியமம் (இ.க.நி.) 16ற்கு இணங்க மாற்றமடைந்துள்ளது. கடந்த ஆண்டில் எஞ்சிக் கிடக்கும் ஏற்பாடுகள் முன்னைய ஆண்டு சீராக்கல் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம், ஐந்து (05) ஆண்டு காலத் தொடர்ச்சியான சேவையைப் பூர்த்தி செய்த பின்னரே இப்பொறுப்பு எழுகின்றது.

பணிக்கொடைப் பொறுப்புக்காகப் பொதுத் திறைசேரியினால் நிதியளிக்கப்படுவதன் காரணமாக, பணிக்கொடைப் பொறுப்பு எறிய அலகு செலவு முறையின் பேரில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படாது. இப்பொறுப்புத் தொடர்பில் எந்தவிதமான நிதியமும் ஏற்பாடு செய்யப்படவில்லை.

1.7.3 வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள்

ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமும்.

சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் ஆகியவற்றிற்கேற்ப ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புக்கும் ஊழியர்கள் தகுதி பெறுகின்றனர்.

1.7.4. அரச கொடைகளும் மானியங்களும்

(அ).நிறுவனம் அதன் செலவினங்களுக்காகத் தங்கியிருக்கும் அரச கொடைகள் பெறப்படும் அடிப்படையில் கணக்குகளில் உட்படுத்தப்படும். 2004ஆம் ஆண்டு வரையில் மீண்டெழும் செலவினங்களுக்காக ஏற்புடையதாகும் கொடைகள், வருமானங்கள், செலவினங்கள் கணக்கில் செலவு வைக்கப்படுவதுடன், மூலதனச் செலவினங்களுக்காகக் குறித்த கொடைகள் மூலதனக் கொடைக் கணக்கில் செலவு வைக்கப்படுகிறது. இக்கொள்கைக்குப் பதிலாக 2005ஆம் ஆண்டு முதல் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டல்களின் கீழ் புதியதொரு கொள்கை அமுல்படுத்தப்பட்டது. மூலதனக்கொடை, பிற்போடப்பட்ட வருமானக் கொடைக்காக வருடாந்தம் செலவு வைக்கப்படுகிறது.

(ஆ).தொடக்கத்தில், சொத்துக்கள் தொடர்பில் கொடை வழங்கும் முகவராண்மைகளிலிருந்து கிடைக்கப்பெறும் கொடைகள் அவற்றைப் பயன்படுத்துகின்ற வரையில் பொறுப்புக்களாக இனங்காணப்படுகிறது. கொடையிலிருந்து பயன்பாட்டுக்காகப் பெறப்படும் தொகை, பிற்போட்ட வருமானக் கொடைக்காக மாற்றப்படுகிறது. பின்னர், சொத்தின் பயனுள்ள ஆயுட்காலத்துள் இலதாக்கப்படும்.

1.7.5 ஏற்பாடுகளும் நிகழ்சாத்தியப் பொறுப்புக்களும்

கடப்பாடொன்று வளங்களின் வெளிப்பாய்ச்சலுக்குக் காரணமாக அமையும்போது, அவ்வாறு வெளிச் செல்லும் அளவுக்காக நம்பத்தகுந்த மதிப்பீமொன்றை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்போது ஐந்தொகை தினத்தன்று உள்ளவாறான சகல செலவினங்களுக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும். வளங்கள் வெளிச்செல்வது

மிகவும் சேய்மையானதாக இருக்கவில்லையாயின், சகல நிகழ்சாத்தியப் பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

. அனைத்து நிகழ்சாத்தியப் பொறுப்புக்களும் வளங்களின் வெளியேற்றம் தொலைவில் காணப்படும் வேளையில் நிதிசார் கூற்றுக்களின் 27ஆம் குறிப்பின் கீழ் காடடப்படும்.

**1.8 வருமானம் மற்றும் செலவினக் கூற்று**

1.8.1 வருமானங்களை ஏற்றங்கீகரித்தல்

பொருளாதார அனுகூலங்களின் உட்பாய்ச்சல் அதிகார சபைக்குள் இடம்பெறுகின்றதா அத்துடன், வருமானமும் அதுதொடர்பில் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் அல்லது சுமக்கநேரிடும் செலவினங்களைக் குறிப்பாக அளவிடமுடியுமா என்ற அளவுக்கு ஏற்ப, வருமானங்கள் ஏற்றங்கீகரிக்கப்படும். வரவேண்டிய, பெறப்பட்ட வருபேறின் நியாயமான பெறுமானத்தின் அடிப்படையில் வருமானம் அளவிடப்படுகிறது.

வருமானங்களை ஏற்றங்கீகரிப்பதற்காகப் பின்வரும் திட்டவட்டமான அளவுகோல்கள் கையாளப்படுகின்றன.

(அ).மீண்டெழும் செலவினங்களுக்காகப் பெறப்பட்ட கொடைகள்

மீண்டெழும் செலவினங்களுக்காகப் பொதுத் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட கொடைகள் வருமானமாக ஏற்றங்கீகரிக்கப்படும்.

ஆ)தொடக்கத்தில் சொத்துக்கள் தொடர்பில் கொடை வழங்கும் முகவராண்மைகளிலிருந்து கிடைக்கப்பெறும் கொடைகள் அவற்றைப் பயன்படுத்துகின்ற வரையில் பொறுப்புக்களாக இனங்காணப்படுகின்றது. கொடையிலிருந்து பயன்பாட்டுக்காகப் பெறப்படும் தொகை பிற்போட்ட வருமானக் கொடையாக மாற்றப்படுகிறது.

இ).பயிற்சிப் பாடநெறியிலிருந்து பெறப்படும் வருமானம்

பயிற்சிப் பாடநெறிகளுக்கான மாணவர் கட்டணங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்றங்கீகரிக்கப்படும்.

ஈ) மாணவர் உற்பத்தி அலகுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம்

மாணவர் உற்பத்தி அலகுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் அட்டுறு அடிப்படையில் ஏற்றுங்கீகரிக்கப்படும்.

உ) வாடகை வருமானம்

வாடகை வருமானம் குத்தகைக் காலத்திற்கமைய அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படும்.

ஊ) ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையில் ஏற்றுங்கீகரிக்கப்படும்.

1.8.2 செலவினங்களை ஏற்றுங்கீகரித்தல்

அ) வருமானக் கூற்றில் குறிப்பாக வருமான உருப்படிகளின் ஈட்டல்களுக்கும் அதில் சுமக்க நேரிட்ட கிரயத்திற்கும் இடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் செலவினங்கள் ஏற்றுங்கீகரிக்கப்படும். ஆண்டின் தேறிய மிகை அல்லது பற்றாக்குறையைக் கணிப்பிடும்போது தொழிற்பயிற்சி அதிகாரசபையை நடாத்திச் செல்லும்போதும் ஆதனம் (சொத்து), பொறி, உபகரணம் என்பவற்றை வினைத்திறன் வாய்ந்த விதத்தில் பராமரித்துச் செல்லும் போதும் ஏற்படும் சகல செலவினங்களும் வருமானத்திற்குப் பொறுப்புவிக்கப்படுகி

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம்** | **3** | | | | | | | | | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **காணி** | **கட்டிடங்களும் மேம்படுத்தல்களும்.** | **மோட்டார் வாகனங்கள்** | **தளபாடங்களும் பொருத்திகளும்** | **பயிற்சி உபகரணங்கள்** | **அலுவலக உபகரணங்கள்** | **மின்னியல் உபகரணங்கள்** | **கணனி உபகரணங்கள்** | **பொறி மற்றும் இயந்திர உபகரணங்கள்** | **ரூபாவில்** |
| **<u>கிரயம் அல்லது மதிப்பீடு</u>** | | | | | | | | | | |
| வருட ஆரம்பத்தில் | 1,715,757,703.98 | 2,623,597,726.54 | 140,283,508.12 | 162,280,477.87 | 786,652,891.75 | 69,344,282.13 | 2,017,181.81 | 257,723,887.27 | 62,971,088.04 | **5,820,628,747.51** |
| வருடத்தில் சேர்க்கப்பட்டவை | 2,173,482.94 | 240,773,170.48 | 112,329,177.38 | 48,896,894.96 | 600,570,445.82 | 6,377,170.67 | | 105,359,814.01 | 10,214,038.29 | 1,126,694,194.55 |
| வருட முடிவில் | **1,717,931,186.92** | **2,864,370,897.02** | **252,612,685.50** | **211,177,372.83** | **1,387,223,337.57** | **75,721,452.80** | **2,017,181.81** | **363,083,701.28** | **73,185,126.33** | **6,947,322,942.06** |
| **<u>திரண்ட தேய்மானம்</u>** | | | | | | | | | | |
| வருட ஆரம்பத்தில் | | 343,033,848.55 | 69,245,172.33 | 33,156,198.84 | 285,275,704.14 | 13,636,370.57 | 936,935.87 | 91,680,827.80 | 28,147,682.07 | 865.112.740.17 |
| வருடத்திற்கான கட்டணம் | | 126,066,852.42 | 45,841,878.29 | 17,802,117.40 | 220,389,526.69 | 6,208,508.22 | 216,049.19 | 54,280,574.70 | 9,007,488.85 | 479,812,995.76 |
| வருட முடிவில் | | **469,100,700.97** | **115,087,050.62** | **50,958,316.24** | **505,665,230.83** | **19,844,878.79** | **1,152,985.06** | **145,961,402.50** | **37,155,170.92** | **1,344,925.735.93** |
| **<u>எழுதப்பட்ட மதிப்பீடு</u>** | | | | | | | | | | |
| 2012 திசெம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறு | **1,717,931,186.92** | **2,395,270,196.05** | **137,525,634.88** | **160,219.056.59** | **881,558,106.74** | **55.876,574.01** | **864,196.75** | **217,122,298.78** | **36,029.955.41** | **5.602,397,206.13** |
| 2011 திசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு | 1,715,757,703.98 | 2,280,563,877.99 | 71,038,335.79 | 129,124.279.03 | 501,377,187.61 | 55.707.911.56 | 1.080.245.94 | 166,043.059.47 | 34.823.405.97 | 4,955.516.007.34 |

2.1 ஆரம்ப நிலுவைக்கான சீராக்கல்

| ஆதன வகை | சீராக்கலுக்கு முன்னான ஆரம்ப நிலுவை | மேற்கொள்ளப்பட்ட சீராக்கல் | சீராக்கலுக்குப் பின்னான ஆரம்ப நிலுவை |
|---|---|---|---|
| கட்டிடங்களும் மேம்படுத்தல்களும் | 2,622,643.799.54 | 953,927.00 | 2,623,597,726.54 |
| மோட்டார் வாகனங்கள் | 141.456.658.12 | (1,173,150.00) | 140,283,508.12 |
| பயிற்சி உபகரணங்கள் | 785.181.547.75 | 1,471,344.00 | 786.652,891.75 |
| கணனி உபகரணங்கள் | 231,480,258.94 | 26,243,628.33 | 257,723,887.27 |
| மொத்தம் | 3.780,762,264.35 | 27,495,749.33 | 3.808,258.013.68 |

| ஆதன வகை | சீராக்கலுக்கு முன்னான ஆரம்ப நிலுவை | மேற்கொள்ளப்பட்ட சீராக்கல் | சீராக்கலுக்குப் பின்னான ஆரம்ப நிலுவை |
|---|---|---|---|
| கட்டிடங்களும் மேம்படுத்தல்களும் | 342.986,152.20 | 47,696.35 | 343,033.848.55 |
| மோட்டார் வாகனங்கள் | 69,538,459.83 | (293,287.50) | 69,245,172.33 |
| பயிற்சி உபகரணங்கள் | 284,716,635.34 | 559,068.80 | 285,275,704.14 |
| கணனி உபகரணங்கள் | 82,224,641.60 | 9,456,186.20 | 91,680,827.80 |
| மொத்தம் | 779,465,888.97 | 9,769,663.85 | 789,235,552.82 |

## 2.2 மதிப்பிடப்படாத காணியும் கட்டிடங்களும்

1. பின்வரும் தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள காணிகள் மற்றும் கட்டிடங்கள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாததன் காரணமாக வருடாந்தக் கணக்கில் உள்ளடக்கப்படவில்லை.

- தொழிற்பயிற்சி நிலையம், மாத்தளை - மாத்தளை
- தொழிற்பயிற்சி நிலையம், யக்கலமுல்ல - காலி
- தொழிற்பயிற்சி நிலையம், கினிமெலகா - காலி
- தொழிற்பயிற்சி நிலையம், அக்மீமன - காலி
- தொழிற்பயிற்சி நிலையம், வதுரவில - காலி
- தொழிற்பயிற்சி நிலையம், கடான - கம்பஹா
- தொழிற்பயிற்சி நிலையம், கிரிந்த - ஹம்பாந்தோட்டை
- தொழிற்பயிற்சி நிலையம், சிறிபோபுர - ஹம்பாந்தோட்டை

மேற்படி காணிகள் மற்றும் கட்டிடங்களின் மதிப்பீடு விரைவில் இட்பெறும்.

2. பின்வரும் கட்டிடங்கள் தொழிற்பயிற்சி அதிகார சபைக்குச் சொந்தமல்லாத காணிகளில் திறன் அபிவிருத்திக் கருத்திட்ட நிதியத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேற்படி காணிகள் மற்றும் கட்டிடங்களின் மதிப்பீடானது 2013இல் கணக்கிடப்படும்.

- தொழிற்பயிற்சி நிலையம், பின்கிரிய - குருணாகல்
- தொழிற்பயிற்சி நிலையம், வியாங்கொடை - கம்பஹா
- தொழிற்பயிற்சி நிலையம், யக்கலமுல்ல - காலி
- தொழிற்பயிற்சி நிலையம், நியகம - காலி
- தொழிற்பயிற்சி நிலையம், ரூவன்வெல - கேகாலை
- தொழிற்பயிற்சி நிலையம், கந்தளாய் - திருகோணமலை
- தொழிற்பயிற்சி நிலையம், ஹம்பாந்தோட்டை - ஹம்பாந்தோட்டை
- தொழிற்பயிற்சி நிலையம், வஸ்கடுவ - களுத்துறை
- தொழிற்பயிற்சி நிலையம், ஹல்துமுல்ல - பதுளை
- தொழிற்பயிற்சி நிலையம், வெலிமடை - பதுளை
- தொழிற்பயிற்சி நிலையம், வெல்லவாய - மொனறாகலை
- தொழிற்பயிற்சி நிலையம், பிபிலை - மொனறாகலை
- தொழிற்பயிற்சி நிலையம், மிகுந்தலை - அநுராதபுரம்
- தொழிற்பயிற்சி நிலையம், கல்னெவ - அநுராதபுரம்
- தொழிற்பயிற்சி நிலையம், தம்புத்தேகம - அநுராதபுரம்
- தொழிற்பயிற்சி நிலையம், ராஜாங்கனய - அநுராதபுரம்
- தொழிற்பயிற்சி நிலையம், மின்னேரியா - பொலனறுவை
- தொழிற்பயிற்சி நிலையம், யட்டியாந்தோட்டை - கேகாலை
- தொழிற்பயிற்சி நிலையம், கிளிநொச்சி - யாழ்ப்பாணம்
- தொழிற்பயிற்சி நிலையம், இரத்மலானை - கொழும்பு

3. தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு உரித்தில்லாத பின்வரும் மோட்டார் வாகனங்கள் தொழிற்பயிற்சி அதிகாரசபையால் உபயோகிக்கப்பட்டுள்ளன. ஆயினும், தொழிற்பயிற்சி அதிகார சபையால் உபயோகிக்கப்பட்டுள்ள பின்வரும் வாகனங்கள் காப்புறுதி மதிப்பீட்டிற்காகக் கணக்கிடப்பட்டுள்ளன.

- 56-4622
- 56-4644
- 56-4647
- 53-0490
- 32-2836
- 64-1602
- 62-4815
- 26-8167
- 32-2835
- 32-2837
- 64-9724
- 64-3186
- 31-6449
- 62-2015
- WP QD-3612

4.பின்வரும் மோட்டார் வாகனங்கள் பயிற்சி நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்டன.

- 18-5640
- 301-872

| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **3 மூலதனத் தொழிற்பாட்டு முன்னேற்றம்** | | | |
| அம்பாறை | | 5,326,588.42 | 2,608,871.13 |
| அநுராதபுரம் | | | 1,859,269.65 |
| பதுளை | | 3,661,609.30 | 545,783.72 |
| மட்டக்களப்பு | | | 16,015,975.70 |
| கொழும்பு | | 1,818,015.75 | |
| காலி | | 2,525,829.30 | 927,000.00 |
| கம்பஹா | | | 2,142.680.30 |
| அம்பாந்தோட்டை | | | 3,584,998.45 |
| கண்டி | | 1,528,035.29 | 4,943,829.74 |
| மாரவில | | | 444,010.90 |
| மாத்தளை | | | 2,280,440.00 |
| மாத்தறை | | 2,431,370.26 | 5,920,982.72 |
| மொனராகலை | | 4,196,314.41 | 896,702.08 |
| முல்லைத்தீவு | | | 6,995,532.70 |
| நாரஹேன்பிட்டி | | | 14,717,968.64 |
| நியாகம | | 9,535,986.47 | 4,883,721.05 |
| நுவரெலியா | | 8,670,794.41 | 2,177,374.79 |
| வவுனியா | | 2,820,560.35 | |
| | | **42,515,103.96** | **70,945,141.57** |
| **4 கையிருப்புகள்** | | | |
| பயிற்சிப் பொருட்கள் | | 21,603,608.01 | 15,844,619.33 |
| காகிதாதிகள் | | 5,736,652.93 | 6,240,638.26 |
| மூலப்பொருட்கள் (அச்சிடல்) | | 308,544.72 | 265,741.48 |
| ஏனைய நுகர்வுப் பொருட்கள் | | 95,179.00 | 115,183.75 |
| | | **27,743,984.66** | **22,466,182.82** |
| **5 அறவிடப்படவேண்டியவை** | | | |
| நிகழ்ச்சித் திட்டங்களுக்கான முற்பணங்கள் | | 313,494.92 | 918,038.18 |
| நட்டஈட்டுக்கான வைப்பு | | 485,778.72 | 485,778.72 |
| வைப்புக்கள் | | 102,000.00 | 202,000.00 |

| | 2012 | 2011 |
|---|---|---|
| தொழிற்பயிற்சி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | 4,097,520.24 | 4,097,520.24 |
| இளைஞர் விவகார அமைச்சு | 93,614.73 | - |
| நானாவித கடனாளிகள் | 10,000.00 | 10,000.00 |
| முன்கொடுப்பனவுகள் | 9,076,745.41 | 1.600,000.00 |
| அறவிடப்படவேண்டிய பாடநெறிக் கட்டணம் | 16,055,145.02 | 25.491.261.38 |
| அறவிடப்படவேண்டிய வருமானம் | 10,200.00 | 100,200.00 |
| அறவிடப்படவேண்டிய கருத்திட்ட நிதியம் | 2,873,221.56 | 3.264.079.82 |
| அறவிடப்படவேண்டிய சம்பளம் | 285,809.04 | - |
| வருமானக் குறைபாடு | 166,000.00 | 260,500.00 |
| அரச நிறுவனங்கள் | 4,144,544.97 | 4,144,544.97 |
| வர்த்தக மற்றும் அறிவிடப்படவேண்டிய ஏனையவை | 413,248.46 | 2,980,518.24 |
| | 38,127,323.07 | 43,554,441.55 |
| கழி:- ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு | 11,122,447.04 | 11,122.447.04 |
| | **27.004,876.03** | **32,431.994.51** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

| | | குறிப்பு | 2012<br>ரூபா | 2011<br>ரூபா |
|---|---|---|---|---|
| 6 | **பணியாட்டொகுதிக் கடன்கள்** | | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | | **38,871,607.32** | **37,813.510.62** |
| | கூட்டு: வருடத்தில் வழங்கிய கடன்கள் | | 34.093,589.30 | 30.470.826.04 |
| | | | **72,965,196.62** | **68.284,336.66** |
| | கழி: வருடத்தில் மேற்கொண்ட மீள்கொடுப்பனவுகள் | | 33,049,577.29 | 29,412,729.34 |
| | வருட முடிவில் நிலுவை | | **39.915,619.33** | **38,871,607.32** |
| 7 | **காசும் காசுக்கு நிகரானவையும்** | | | |
| | இடைவழிக் காசு | | 15.994.20 | 3,113,743.31 |
| | தங்க நாணயங்கள் | | 104,000.00 | 104,000.00 |
| | **வங்கி வைப்புக்கள்** | | | |
| | மக்கள் வங்கி | | 62,551.319.11 | 62,073,135.45 |
| | இலங்கை வங்கி | | 10.615.674.52 | 6.608.490.56 |
| | கொமர்'ல் வங்கி | | 12,337,819.05 | 14.290.732.50 |
| | சிறு கட்டுநிதி | | | |
| | கையிருப்பு காசோலை | | 4.850.00 | 2,985,932.88 |
| | கையிருப்பு பணம் | | 6,504.04 | 5.540.00 |
| | | | **85.636,160.92** | **89,181,574.70** |

7.1 இரண்டு தங்க நாணயங்கள் செலான் வங்கியிடமிருந்து கிடைத்துள்ளன. ஒவ்வொரு நாணயமும் 8.02கிராம் எடையையும் 22.03 கரட் தங்க பெறுமதியையும் கொண்டுள்ளன.

**8 அரச மானியம் - மூலதனம்**

| | | |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் நிலுவை | 36,642,549.71 | 56,466,698.12 |
| கூட்டுக: வருடத்தின்போது கிடைக்கப்பெற்ற மானியம் | 475,900,000.00 | 457,500,000.00 |
| | 512,542,549.71 | **513,966,698.12** |
| கழிக்க: வேறு வருமான மானியத்திற்கு மாற்றப்பட்டவை | 480,621,818.33 | 477,780,027.41 |
| வருட இறுதியில் நிலுவை | **31,920,731.38** | **36,186,670.71** |
| கூட்டுக: ஆரம்ப நிலுவை சீராக்கல் | - | **455,879.00** |
| | **31,920,731.38** | **36,642,549.71** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

| | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| **9 திரண்ட வருமான மானியம்** | | | |
| வருட ஆரம்பத்தில் நிலுவை | | 3,094,396.681.23 | 2,898,412,747.24 |
| கூட்டுக: வருடத்தின் போதான மாற்றங்கள் | 9.1 | 1,098,314,156.54 | 514,155,518.22 |
| | | **4,192,710,837.77** | **3,412,568,265.46** |
| கழிக்க: வருடத்திற்கான இலதாக்கல் | | 479,812,995.76 | 335,897,669.71 |
| வருட முடிவிலான நிலுவை | | **3,712,897,842.01** | **3,076,670,595.75** |
| கூட்டுக: ஆரம்ப நிலுவை சீராக்கல் | | - | 17,726,085.48 |
| | | **3,712,897,842.01** | **3,094,396,681.23** |
| **9.1 திரண்ட வருமானத்திற்கு மாற்றம்** | | | |
| அரச மானியம் - மூலதனம் | | 480,621,818.33 | 477,780,027.41 |
| ஏனைய மானியங்கள் | | 617,692,338.21 | 36,375,490.81 |
| | | **1,098,314,156.54** | **514.155.518.22** |
| **10 பணிக்கொடைக்கான ஏற்பாடு** | | | |
| வருட ஆரம்பத்தில் நிலுவை | | 172.574.957.88 | 150.909,843.05 |
| கூட்டுக: வருடத்திற்கான கட்டணம் | | 36,206,831.95 | 28,488,585.04 |
| | | **208,781,789.83** | **179,398,428.09** |
| கழிக்க: வருடத்திற்கான கொடுப்பனவுகள் | | 8,263,962.65 | 6,823,470.21 |
| | | **200.517.827.18** | **172.574,957.88** |
| வருட இறுதியில் நிலுவை | | **200.517,827.18** | **172.574,957.88** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

| | | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| 11 | **<u>கொடுபடவேண்டியவை</u>** | | | |
| | கணக்காய்வுக் கட்டணம் | | 500,000.00 | 750,000.00 |
| | காசாளர் வைப்பு | | 25,000.00 | 25,000.00 |
| | கொடுபடவேண்டிய பாடநெறிக் கட்டணம் | | 70,300.00 | |
| | வைப்பு | | 371,500.00 | 235,250.00 |
| | ஊழியர் சேமலாப நிதி | | | 6,394,005.10 |
| | ஊழியர் நம்பிக்கை நிதியம் | | | 959,100.77 |
| | பணிக்கொடை மேல்விதிப்பு வரி | | 109,908.80 | |
| | விரிவுரைக் கட்டணம் | | 2,456,100.00 | 870,050.00 |
| | ஏனைய கடனாளிகள் | | 19,754,603.35 | 10,446,472.06 |
| | கொடுபடவேண்டிய கருத்திட்ட நிதியம் | | 11,792,407.24 | 15,469,865.30 |
| | முற்பணமாகப் பெற்றவை | | 585,150.00 | 1,060,100.00 |
| | மீள்செலுத்தப்படும் கேள்விப்பத்திர வைப்பு | | 799,784.44 | 1,918,832.04 |
| | பிடிப்புப் பணம் | | 18,398,224.90 | 10.436,234.71 |
| | கொடுபடவேண்டிய சம்பளம் | | 290,021.31 | 680,585.23 |
| | பணியாட்டொகுதி ஊக்குவிப்புக் கொடுப்பனவு | | 197,384.00 | 94,280.00 |
| | காகிதாதிகள் | | 41,626.00 | 33,430.00 |
| | வர்த்தகக் கடன்கொடுத்தோர் | | 6,051,315.59 | 43,867,601.01 |
| | வாகன சேவை அலகு | | 626,370.00 | |
| | விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் | | 134,344.66 | 14,894.04 |
| | | | 62.204,040.29 | **93,255,700.26** |

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|
| | | ரூபா | ரூபா |
| 12 **<u>திரண்ட செலவுகள்</u>** | | | |
| விளம்பரம் | | 308.000.00 | |
| தொழில்சார் வழிகாட்டல் | | 9,340.00 | 58,554.00 |
| மின்சாரம் | | 3,114,560.70 | 863.842.18 |
| பரீட்சைகளும் மதிப்பீடும் | | 300,961.56 | 411,313.15 |
| எரிபொருளும் ஊராய்வுநீக்கியும் | | 36,672.76 | 257,195.00 |
| காவலாளி சேவைகள் | | 201,186.62 | 147,087.50 |
| பேணுகை | | 704,438.52 | 906,431.82 |
| செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும் | | 8.405.00 | 23,240.00 |
| ஏனையவை | | 250,170.00 | 552,545.36 |
| ஏனைய படிகள் | | | 70,202.00 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | | 262,883.95 | 680,517.72 |
| கொடுபடவேண்டிய பகுதிநேர செலவுகள் | | 2,876,909.60 | 1,452,892.15 |
| தபாற் கட்டணம் | | | 400.00 |
| மேம்பாட்டு செயற்பாடுகள் | | 203.863.88 | 1.640,611.20 |
| தரமுகாமைத்துவத்துக்காகக் கொடுக்கப்படவேண்டியவை | | | 3.034.00 |
| வாடகை, விலைகள், வரிகள் | | 131.760.00 | 96,503.55 |
| பருவகாலச் சீட்டுக்கள் | | 1,020.201.34 | 687.373.77 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | | 1,293.605.00 | |
| விசேட பயிற்சி நிகழ்ச்சி நிரல் | | 20.000.00 | |
| பணியாட்டொகுதிப் பயிற்சி | | | 8.260.00 |
| ஊதியம் | | 1.657,855.33 | 1,424,755.59 |
| தொலைபேசி | | 1.723,203.61 | 56,486.52 |
| தொழிற்றுறைப் பரீட்சை | | 43,644.00 | |
| போக்குவரத்து | | 72,400.00 | 14,400.00 |
| பிரயாணம் | | 500.563.13 | 384,055.75 |
| வாகன வாடகைக் கட்டணம் | | | 40,000.00 |
| நீர் | | 531,911.36 | 256,263.86 |
| | | 15,272,536.36 | **10,035,965.12** |

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| 13 | <u>ஏனைய வருமானம்</u> | | | |
| | ஏலவிற்பனை வருமானம் | | 247,496.25 | 381,603.26 |
| | பாடநெறிக் கட்டணம் | | 85,553,118.65 | 69,878,707.50 |
| | தினசரி குறிப்பேடு (டயறி) | | 2,456,700.00 | |
| | தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | | 9,000.00 |
| | பரீட்சைக் கட்டணங்கள் | | | 32,050.00 |
| | அபராதங்கள் | | 118,564.89 | 179,195.74 |
| | பூர்த்தியாக்கப்பட்ட பொருட்கள் | | | 33,507.00 |
| | தங்க நாணய வருமானம் | | | 30,800.00 |
| | மண்டப வருமானம் | | 892.000.00 | 615,981.52 |
| | விடுதிக் கட்டணங்கள் | | 68,800.00 | 205,900.00 |
| | காப்புறுதி உரிமை கோரல் | | 670,673.88 | 33,917.00 |
| | கதிர்காமம் சுற்றுலா விடுதி | | 211,045.00 | 115,600.00 |
| | கடன் வட்டி | | 1,145,245.69 | 1,139,915.15 |
| | நானாவிதம் | | 7,571,167.36 | 1,420,739.53 |
| | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர வைப்பு | | 300,000.00 | 1,044,000.00 |
| | பதிவுப் புத்தகம் | | 2,419,100.00 | |
| | பதிவுக் கட்டணங்கள் | | 5,759,200.00 | 5,499,850.00 |
| | வாடகை | | 448,000.00 | 490,150.00 |
| | பதிவு விநியோகம் | | 60,000.00 | 47,000.00 |
| | | | 107,921,111.72 | **81,157,916.70** |

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| 14 | <u>உற்பத்தி அலகு வருமானம்</u> | | | |
| | சிகை மற்றும் அழகு நிலையம்(அகடமி) | | 2,106,181.32 | 218,308.69 |
| | அலுமினியம் பிரிப்பு | | | 26,041.40 |
| | தச்சர் | | | 57,821.50 |
| | பரீட்சைக் கட்டணங்கள் | | | 150,511.90 |
| | ஹோட்டல் பாடசாலை - அஹுன்கம | | 505,150.16 | 717,149.32 |
| | கொக்கல | | | 37,500.00 |
| | பேணுகை | | | 262,960.40 |
| | ஏனையவை | | 482,893.87 | 288,878.83 |
| | பகுதி நேரம் | | 12,740,339.26 | 13,510,664.98 |
| | அச்சிடல் பாடசாலை - காலி | | 673,160.00 | |
| | அச்சிடல் பாடசாலை - நாரஹேன்பிட்டி | | 12,006.74 | (147,599.46) |
| | பதிவுப் புத்தக வருமானம் | | | 714,740.40 |
| | சிற்றுண்டிச்சாலை - தலல்ல | | 109,017.00 | |
| | ஆர்.பீ.எல். (சீடு) | | 649,122.00 | 222,068.00 |
| | தொழிற்றகமைப் பரீட்சை | | 589,508.14 | 576,774.00 |
| | வாகன சேவை | | 162,703.00 | 184,098.25 |
| | | | 18,030,081.49 | **16,819,918.21** |

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| 15 | **விசேட கருத்திட்ட நிதியங்கள்** | | | |
| | கிழக்கு மாகாண சேவை | | 92,000.00 | |
| | போரூட் | | | 4,097,848.24 |
| | எச்.எம்.டி.ஐ. கருத்திட்டம் | | 2,803,595.26 | |
| | தொழிற் தாபனங்களுக்கு இடையிலான | | 1,140,386.15 | 364,434.12 |
| | இளைஞர் விவகார அமைச்சு | | | 55,551,357.86 |
| | பிராந்திய கடற்றொழில் வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டம் | | 1,412,170.00 | 121,042.50 |
| | ரி.வீ.ஈ.சீ (வுஏநுஊ) | | 109,774.00 | 168,191.39 |
| | யுனிசெப் | | 2,505,069.74 | 4,454,483.68 |
| | யூ.எஸ்.எயிட் | | | 1,756,113.00 |
| | வேர்ல்ட் வி'ன் | | 199,900.00 | 655,019.83 |
| | டபிள்யூ.யூ.எஸ்.சி. | | 165,232.50 | 7,642,240.19 |
| | | | 8,428,127.65 | **74,810,730.81** |
| 16 | **பணியாட்டொகுதி செலவினம்** | | | |
| | ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி. | | 62,141,663.14 | 54,391,200.39 |
| | ஏனைய படிகள் | | | 15,092.44 |
| | ஓய்வூதிய பங்களிப்பு | | | 34,058.69 |
| | சம்பளங்கள், மேலதிக நேரக் கொடுப்பனவு | | 550,546,161.30 | 480,159,889.78 |
| | பணியாட்டொகுதி பணிக்கொடை | | 35,555,980.76 | 28,488,585.04 |
| | | | **648,243,805.20** | **563,088,826.34** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

| | | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| **17** | **<u>பிரயாணங்கள்</u>** | | | |
| | உள்ளூர் | | 7,106,938.93 | 6,936,946.60 |
| | வெளியூர் | | 3,565,144.04 | 5,591,767.68 |
| | | | 10,672,082.97 | **12,528,714.28** |
| **18** | **<u>விநியோகம் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்கள்</u>** | | | |
| | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | | 12,161,567.51 | 10,402,960.74 |
| | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | | 13,826,299.94 | 13,180,278.39 |
| | ஏனையவை | | 1,495,248.52 | 1,297,414.18 |
| | | | 27,483,115.97 | **24,880,653.31** |
| **19** | **<u>பேணுகை</u>** | | | |
| | வாகனம் | | 8,970,381.51 | 7.986,251.69 |
| | பொறி மற்றும் இயந்திர உபகரணம் | | 6,007,231.62 | 8.386,224.71 |
| | கட்டிடம் | | 12.271.264.28 | 18,749,991.28 |
| | | | 27,248.877.41 | **35,122.467.68** |
| **20** | **<u>ஒப்பந்த வேலைகள்</u>** | | | |
| | கணக்காய்வுக் கட்டணங்கள் | | 556,064.00 | 350,000.00 |
| | விளம்பரம் | | 1>169>794.08 | 2,125,898.08 |
| | ஆலோசனை மற்றும் நிபுணத்துவக் கட்டணங்கள் | | 2>607>000.00 | |
| | மின்சாரம் | | 44>429>668.09 | 36,029,878.56 |
| | வாடகைக் கட்டணங்கள் | | 1>009>950.00 | 3,668,156.33 |
| | காப்புறுதி | | 4,530,342.39 | 2,603,184.61 |
| | காவலாளர் சேவை | | 4,529,682.74 | 4,885,123.35 |
| | செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகள் | | 369,259.00 | 471,315.00 |
| | தபாற்செலவுகள் | | 720,206.55 | 1,002,367.15 |
| | வாடகை | | 6,165,960.81 | 2,970,063.79 |
| | பாதுகாப்புச் சேவைக் கட்டணங்கள் | | 18,715,260.21 | 14,054,549.93 |
| | பணியாட்டொகுதி நலன்புரி மற்றும் ஏனையவை | | 123,690.00 | 1,282,331.94 |
| | தொலைபேசிக் கட்டணங்கள் | | 13,281,222.73 | 9,239,880.53 |
| | போக்குவரத்து | | 4,385,635.10 | 2,822,633.20 |
| | நீர் | | 8,445,538.44 | 7,460,193.77 |
| | | | 111,039,274.14 | 88,965,576.24 |

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| 21 | <u>வேலைக்கமர்த்தல், ஆராய்ச்சி மற்றும் தொழில்முயற்சி</u> | | | |
| | பாடவிதான அபிவிருத்தி | | 556,922.00 | 521,447.00 |
| | தொழிற்பயிற்சி மற்றும் கண்காணிப்பு | | 919,600.00 | 219,295.00 |
| | தொழில்முயற்சி நிகழ்ச்சி நிரல் | | 732,787.75 | 1,130,630.00 |
| | வேலைக்கமர்த்தல் | | 190,742.50 | 887,275.00 |
| | அரச, தனியார் பங்குடமை | | 241,019.00 | 518,295.25 |
| | | | 2,641,071.25 | **3,276,942.25** |
| 22 | <u>ஏனைய செயற்பாட்டுச் செலவுகள்</u> | | | |
| | **கருவிகளும் நுகர்வுப்பொருட்களும்** | | **10,522,573.87** | 18,206,602.96 |
| | செலுத்தப்படாத பாடநெறிக் கட்டணங்கள் | | 5,320,410.00 | 4,999,600.00 |
| | பரீட்சைகளும் மதிப்பீடுகளும் | | 10,926,749.70 | 11,389,262.76 |
| | வெகுமானங்கள் | | 1,106,127.30 | 1,434,996.65 |
| | தேசத்திற்கு மகுடம் | | 3,649,031.06 | - |
| | சட்டக் கட்டணங்கள் | | 1,104,242.00 | 43,975.04 |
| | நானாவிதம் | | 2,993,903.13 | 2,721,726.82 |
| | தரமுகாமைத்துவ சான்றளிப்பு | | 873,021.00 | 653,989.50 |
| | பருவகாலச் சீட்டுக்கள் | | 6,600,710.05 | 7,401,705.78 |
| | விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | | 550,955.60 | 817,117.00 |
| | ஊதியப்படி | | 20,621,684.97 | 16,528,957.91 |
| | பயிற்சிப் பொருட்கள் | | 58,549,990.39 | 85,810,705.48 |
| | | | 122,819,399.07 | 150,008,639.90 |

| | | |
|---|---|---|
| **ஊக்குவிப்புச் செலவுகள்** | | 33,087,536.94 |
| தொழில்சார் வழிகாட்டல்கள் | | 5,064,191.00 |
| | | 38,151,727.94 |

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | குறிப்பு | 2012 | 2011 |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| 23 | **விசேட கருத்திட்டங்கள் மீதான கருத்திட்டங்கள்** | | | |
| | தொழில் தாபனங்களுக்கு இடையிலான | | 1,140,386.15 | 364,434.12 |
| | கிழக்கு மாகாண சேவை | | 92,000.00 | |
| | ரி.வீ.ஈ.சி. (வுஏநுஊ) | | 109,774.00 | 168,191.39 |
| | வேர்ல்ட் வி'ன் | | 199,900.00 | 655,019.83 |
| | எச்.எம்.ரி.ஐ. (ர்ஆவுஐ) | | 2,803,595.26 | |
| | டபிள்யூ.யூ.எஸ்.சி. (றுருளுஊ) | | 165,232.50 | 7,642,240.19 |
| | யூ.எஸ்.எயிட் (ருளுயுஐனு) | | | 1,756,113.00 |
| | யுனிசெப் | | 2,505,069.74 | 4,454,483.68 |
| | போரூட் | | | 4,097,848.24 |
| | இளைஞர் விவகார அமைச்சு | | | 55,551,357.86 |
| | பிராந்திய கடந்றொழில் வாழ்வாதார நிகழ்ச்சி நிரல் | | 1,412,170.00 | 121,042.50 |
| | | | 8,428,127.65 | **74,810,730.81** |

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | **நிதிச் செலவு** | | | |
| | பணிக்கொடை கூடுதல் கட்டணம் | | 186,727.55 | |
| | வங்கிக் கட்டணம் | | 273,938.40 | 406,625.17 |
| | | | 460,665.95 | **406,625.17** |

**நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்**

**25. முன்னைய ஆண்டுச் சீராக்கல்**

25.1 2010 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில் பாடநெறியிலிருந்து விலகிய 1வது தொகுதி மாணவர்களிடமிருந்து அறவிடவேண்டிய பாடநெறிக் கட்டணம் ரூபா 15இ754இ160.00 தொகையொன்று முன்னைய வருட சீராக்கலாகக் கணக்குக் கூற்றில் சீராக்கப்பட்டது.

25.2 முன்னைய வருடச் சீராக்கலாக ரூபா 126இ264.01 மூலதன ஏற்றங்கீகார மாற்றம் மற்றும் மீண்டெழும் செலவினமாகச் சீர்ப்படுத்தப்பட்டது.

25.3 2012ஆம் ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடுகளின் கீழ் முன்னைய வருட சீராக்கலாக ரூபா 476இ336.00 தொகை அறவிடப்பட்டது.

**26. உடன்பாடுகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள்**

m) அதிகாரசபைக்கு எதிரான வழக்காடல்

நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகள் பின்வருமாறு:

| | 31.12.2012 | 31.12.2011 |
|---|---|---|
| மாகாண மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் | 02 | 02 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம் | 01 | 01 |
| மாவட்ட நீதிமன்றம் | 01 | 01 |
| தொழில் நியாய சபை | 06 | 03 |
| | 10 | 07 |

(அ) மூலதன உடன்பாடுகள்

2012.12..31ஆம் திகதிய பொருள் மூலதன உடன்பாடுகள் காணப்படவில்லை

**இலங்கைதொழிற்பயிற்சி அதிகாரசபை**
**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**
**செயலாற்றுகை - 2012**

**1. குழு உறுப்பினர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | திரு. கே.எம். சிறிவர்தன | - | குழுத்தலைவர் | 2012 மார்ச் |
| 2) | திரு. பேத் பாபா | - | உறுப்பினர் | |
| 3) | திரு. நிமல் வீரதுங்க | - | உறுப்பினர் | |
| 4) | திரு. கே.எம்.எம். சிறிவர்தன | - | உறுப்பினர் | 2012 மார்ச் மாதத்தின் பின்னர் |
| 5) | திரு. நிமல் வீரதுங்க | - | உறுப்பினர் | |

**2. தீர்மானங்கள்**

- ❖ அதிகார சபையின் நிதி முன்னேற்றத்தை இற்றைப்படுத்துவதற்காக அதனை மீளாய்வுக்கு உட்படுத்தல் மற்றும் பிழைகள் மற்றும் குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக சிபாரிசுகளை முன்னெடுத்தல்

- ❖ உள்ளக கணக்காய்வு பிரிவின் பணிகளை அனுமதிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வு திட்டத்துக்கமைய நடைமுறைப்படுத்துவதற்கான அலோசனைகளை வழங்குதல்.

- ❖ அரசாங்க கணக்காய்வு கேள்விகள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பதில் வரைவினை தொடர்ச்சியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சபைக்கு ஆற்றுப்படுத்தல்.

- ❖ அரசாங்க கணக்காய்வு கேள்விகளுக்கு துரிதமாக பதில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No: ஜேஎப்/எப்/விரி/எப்ஏ/12

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2014 மே 13


தலைவர்,

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றக்கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1995 இன் 12 ஆம் இலக்க இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2013 நவம்பர் 11 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.


අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை | No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 - 34

ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No.: 2887223

ඉලෙක්ට්‍රොනික තැපැල් / ஈ மெயில் / E-mail: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழிவுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழிவுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழிவுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2:2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் அதிகாரசபை வாகனங்களுக்காக ஏற்பட்ட பழுதுபார்த்தல் செலவினங்கள் ரூபா 1,447,739 ஆன வாகனக் கொள்வனவாக கணக்கிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 361,935 ஆலும் நிலையான சொத்துக்கள் ரூபா 1,447,739 தொகையாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கணிப்பீட்டுத் தவறின் காரணமாக பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 916,697 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பணிக்கொடை செலுத்தி முடிக்கப்பட்ட ஊழியருக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 112,227 கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 171,206 தொகையான சம்பளமற்ற லீவு

மற்றும் அதிகாரசபை உத்தியோகத்தர்களின் தொலைபேசிக் கட்டணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 151,437 கணக்கிடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அதிகாரசபையின் நூலகப் புத்தகங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கிடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொடுப்பனவு நடவடிக்கைகளைப் போன்று நிர்மாணிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 8,802,937 தொகையான நிர்மாண வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்களும் பெறுமானத்தேய்வுகளும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஊ) செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களான ரூபா 350,000 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அறவிடமுடியாக் கடனாக ரூபா 11,122,447 தொகை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 1,102,185 தொகையான மீதி அதிகாரசபையின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவகங்களிடம் இருந்தும் ரூபா 10,020,262 தொகை வெளி நிறுவகங்களிடம் இருந்தும் பெறவேண்டியிருந்தது.

(ஆ) ரூபா 4,727,992 கூட்டுத்தொகையான 37 கடன்பட்டோர் மீதிகள் 06 ஆண்டு காலத்திற்கும் ரூபா 6,665,228 கூட்டுத்தொகையான 18 மீதிகள் மீதி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டுக் காணப்பட்ட போதிலும் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 9 ஆண்டு காலத்திற்கு மேலான காலம் கடந்திருந்த ரூபா 129,773 தொகையான முற்பண மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) புலமைப் பரிசில் பெற்று வெளிநாட்டிற்குச் சென்றிருந்த மூன்று உத்தியோகத்தர்கள் மீள சேவைக்கு வருகைதராததுடன் இதற்காக திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தால் செலவிடப்பட்டிருந்த ரூபா 7,582,956 தொகையும் அதிகாரசபையால் சம்பளம் மற்றும் படிப்பனமாகச் செலுத்தப்பட்ட ரூபா 581,748 தொகையும் அறவிடப்பட்டிராததுடன் இது தொடர்பாக பிணை பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 2012 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 9,076,745 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அப் பொருட்கள் 2013 யூன் மாதம் வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய ரூபா 6,375,042 தொகையான கடன்கொடுத்தோர் மீதி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பின்வரும் விடயங்கள் அவ்விடயங்களுக்கு எதிராகக் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத எழுத்து மூலச்சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| காணி | 1,703,131,187 | உரித்துறுதிப் பத்திரம் மற்றும் உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள். |
| இருப்பு | 27,743,985 | விபரமான பட்டோலை/ பெறுவனவு மற்றும் கொடுப்பனவு பதிவுகள் உள்ளடக்கப்பட்ட பின்அட்டைகள் |
| பெறவேண்டிய மீதி | 27,004,876 | விபரமான பட்டோலை மற்றும் உறுதிப்படுத்தல்கள் |

| | | |
|---|---|---|
| மேம்பாட்டுச் செலவினம் | 340,272 | கொடுப்பனவுகளுக்கு உரித்தான சஞ்சிகைகள், பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் விபரங்கள் அடங்கிய கோவை |
| செலவினங்கள் (செலசினே) | 6,500,000 | தகவல் அடங்கிய கோவை |
| உலக அபிவிருத்தி தினச் செலவினம் | 1,000,000 | செலவினங்கள் தொடர்பான விபரம் அடங்கிய கோவை |
| எரிபொருள் | 13,826,300 | 141 வாகனங்களுக்கு உரித்தான நாளோட்ட அட்டவணைகளும் 17 வாகனங்களுக்கு உரித்தான மாதாந்தப் பொழிப்பும் |
| தேசத்திற்கு மகுடம் செலவினங்கள் | 3,649,031 | பொருட்கள் ஒப்படைக்கப்பட்டமைக்கான தகவல்களும் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்களும் |
| தேசத்திற்கு மகுடம் போக்குவரத்துச் செலவின முற்பணம் | 400,000 | முற்பண உறுதிச்சீட்டுக்களும் கொடுப்பனவு தீர்ப்பனவு உறுதிச்சீட்டுக்களும் |

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச்சட்டம் | |
| 13(5)(ஐ) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் அரையாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு |

அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தாபன விதிக்கோவை

| | |
|---|---|
| (i) VIII ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | ஒரு மணித்தியாலத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு ஒரு நாள் சம்பளத்தின் 1/8 அல்லது நாட்சம்பளத்தின் 1/30 எனக் கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையால் நாட்சம்பளம் 1/20 ஆகக் கணிப்பிட்டு மேலதிக நேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) IX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவு | மேலதிக நேரத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் கடமைகளுக்காக பெறப்படும் கொடுப்பனவில் 10 சதவீதம் அறவிடப்பட்டு வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும் பகுதிநேர பாடநெறிகளின் விரிவுரைக் கட்டணமும் ஏனைய படிப்பணக் கொடுப்பனவின் போது அவ்வாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. |

(இ) நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| (i) இல. 104 | 13 வாகன விபத்துக்கள் தொடர்பாக நட்டஇழப்பு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) இல. 188(2) | வைப்புச் செய்யப்பட்ட ரூபா 387,883 தொகையான வைப்புக்கள் வங்கிக்குச் செலவு வைக்கப்பட்டிராத போதிலும் இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) திறைசேரிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 2011 செப்தெம்பர் 15 ஆம் திகதிய 58/02 ஆம் இலக்க பொது | தலைவருக்கும் உப தலைவருக்கும் வழங்கப்படும் கொடுப்பனவுகளுக்கும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகக் |

| | | |
|---|---|---|
| | முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | கிடைக்கப்பெறும் கொடுப்பனவில் 10 சதவீதம் பிடித்து வைத்தல் வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் 20 சந்தர்ப்பங்களின் போது அறவிடப்பட வேண்டிய ரூபா 81,417 தொகை அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.3.1 (ஆ) பிரிவு | வாகனங்களின் பழுதுபார்த்தல் பெறுமதி ரூபா 200,000 இற்கு மேற்படுகையில் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக 7 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,082,265 செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) | 1971 யூலை 26 ஆம் திகதிய 810 ஆம் இலக்க சுற்றறிக்கை | சம்பளமற்ற லீவிற்கான அறவீடு குறித்த மாதத்திலோ அல்லது அதனை அடுத்துள்ள மாதத்தில் அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(உ) அரச நிர்வாகச் சுற்றறிக்கை

---

| | | |
|---|---|---|
| (i) | 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களுக்கு ஒரு தடவையும் வாகனங்களின் எரிபொருள் கொடுப்பனவு தொடர்பாக பரீட்சிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள சாரதிகள் மேலதிக நேரக் கொடுப்பனவைக் கோருகையில் சுற்றறிக்கையின் 01 ஆம் இலக்கப் படிவத்தின் படி சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

(ஊ) 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | |
|---|---|
| (i) 6.5.1 ஆம் பிரிவு | ஆண்டறிக்கையின் வரைபொன்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. |
| (ii) 6.6 ஆம் பிரிவு | 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 9.3.1 ஆம் பிரிவு | பதில் கடமை நியமனம் 06 மாதங்களுக்கு மேற்படலாகாத போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிராத 18 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகாரசபையின் செயற்பாடுகளில் ரூபா 16,030,860 ஆன மிகை காணப்பட்டதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 18,333,666 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 34,364,526 தொகையான முன்னேற்றத்தைக் காண்பித்தது. நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்காக கடந்த ஆண்டைப் பார்க்கிலும் அரச மானியங்கள் அதிகரித்தமை, நானாவித வருமானம் அதிகரித்தமை, பிற்போடப்பட்ட வருமான அதிகரிப்பு மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களில் குறைவும் தாக்கமளித்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

மீளாய்வாண்டின் இறுதியில் ஊழியர்களால் நிறுவனத்திற்கு எதிராக 10 வழக்குகளும் வெளி நிறுவனங்களால் 2 வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன.

3.3 செலவினங்களின் அதிகரிப்பு

மீளாய்வாண்டின் தேறிய சொத்துக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களின் வேறுபாடு மற்றும் திரவத்தன்மை விகிதம் பின்வருமாறாகும்.

| | 2012 | 2011 |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன |
| தேறிய சொத்துக்கள் | (485.64) | (481.05) |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 102.82 | 79.42 |

| | நியமம் | உள்ளபடியானது | உள்ளபடியானது |
|---|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1 | 1:2.33 | 1.77 |
| திரவ விகிதம் | 1:1 | 1:1.97 | 1.55 |

4. செயற்பாடு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டின் போது 27 துறைகளில் 98 பாடநெறிகளுக்காக 28,335 பயிலுனர்கள் சேர்க்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் 29,064 பயிலுனர்களே சேர்க்கப்பட்டிருந்தனர். தேசிய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு 2,775 பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இவர்களில் 230 பேர் பாடநெறியை விட்டு விலகிச்சென்றிருந்தனர். மாவட்ட தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு 26,289 பேர் சேர்க்கப்பட்டிருந்ததுடன் இவர்களில் 3,035 பேர் பாடநெறியை விட்டு விலகிச்சென்றிருந்தனர். 2011 ஆம் ஆண்டின் போது 15 துறைகளின் 101 பாடநெறிகளுக்காக 29,251 பயிற்சிகளைப் பெற்றிருந்தனர்.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பாடநெறிக்காக பயிலுனர்கள் சேர்க்கப்பட்டு, சான்றிதழ்கள்

வழங்குதல் தொடர்பான மதிப்பீடு மற்றும் உள்ளபடியான செயலாற்றல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | செயற்பாடு | பயிலுனர்களின் எண்ணிக்கை: மதிப்பீட்டு எண்ணிக்கை | பயிலுனர்களின் எண்ணிக்கை: உள்ளபடியான எண்ணிக்கை | அதிகரிப்பு/ (குறைவு) | அதிகரிப்பு/ (குறைவு) சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| i. | சேர்ப்பு | 28,335 | 29,064 | 729 | 2.57 |
| ii. | சான்றிதழ்கள் வழங்குதல் NVQ | 11,200 | 7,999 | (3,201) | (28.58) |
| iii. | சான்றிதழ்கள் வழங்குதல் Non NVQ | 6,400 | 6,601 | 201 | 3.14 |

(இ) பயிலுனர்கள் பாடநெறிகளை விட்டு விலகிச் சென்றமை

மீளாய்வாண்டிலும் முன்னைய 05 ஆண்டுகளிலும் பயிலுனர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பாடநெறிகளை விட்டு விலகிச் சென்றவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| ஆண்டு | சேர்த்துக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை | பாடநெறிகளை விட்டு விலகிச்சென்றவர்களின் எண்ணிக்கை | சேர்க்கப்பட்ட எண்ணிக்கையின் சதவீதமாக பாடநெறிகளை விட்டு விலகிச்சென்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2007 | 24,302 | 3,884 | 15.98 |
| 2008 | 25,362 | 4,507 | 17.77 |
| 2009 | 27,752 | 5,721 | 20.60 |
| 2010 | தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| 2011 | 29,251 | 3,635 | 12.43 |
| 2012 | 29,064 | 3,265 | 11.23 |

வருடாந்தம் பாடநெறியை விட்டு விலகிச்செல்லும் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவாக இருந்ததுடன் அவ்வெண்ணிக்கையைக் குறைத்துக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டமைக்கு தகவல்கள் இருக்கவில்லை. மேலும் 2012 முதல்

அரையாண்டின் பாடநெறிக்கு சேர்க்கப்பட்டிருந்த பயிலுனர்களில் 1,493 பேர் பாடநெறியை விட்டு விலகிச் சென்றதாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5,320,000 தொகையான பாடநெறிக் கட்டணம் மீளாய்வாண்டின் செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது. பாடநெறிகளின் எண்ணிக்கையின் படி, பாடநெறிகளை விட்டுச் சென்றமை 100 சதவீதமாக 3 சந்தர்ப்பங்களிலும் 50 சதவீதத்திலும் மேற்பட்ட 29 சந்தர்ப்பங்களும் 50 சதவீதத்திற்கும் 20 சதவீதம் வரையான 149 சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டின் போது பயிற்சியைப் பூர்த்தி செய்துகொண்ட 5,500 பயிலுனர்களை தொழில்புரிவதற்கு அனுப்பிவைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 4,328 பேரை மாத்திரம் வேலைக்கு அனுப்பிவைக்கக் கூடியதாக இருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட அளவைப் பார்க்கிலும் 1,172 ஆல் அதாவது 21.30 சதவீதத்தால் குறைவான அளவாகும். வருடாந்தம் பயிற்சியைப் பூர்த்தி செய்துகொண்ட பயிலுனர்கள் 2011 ஆம் ஆண்டின் போது 6,618 பேர் தொழில்புரிந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது 4,328 பேர் மாத்திரமே தொழில் புரிந்திருந்தனர். இதன் படி, 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டில் 35 சதவீதத்தால் தொழிலுக்கு அனுப்பிவைப்பதில் வீழ்ச்சி காணப்பட்டது.

(உ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவிற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 500,000 ஒதுக்கப்பட்டு 03 ஆராய்ச்சிகளும் தேடல் ஆய்வுகளாக 05 ஆய்வுகளுமாக 08 ஆராய்ச்சிகள் செயற்படுத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சிகள் எதுவும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், அதிகாரசபையால் உரிய பிரிவு ஸ்தாபிக்கப்படும் நோக்கில் மேற்கொள்ளப்படுவதற்கு முடியாது போனதாகவும் இப் பிரிவிற்கு ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்கள் விளைவற்றுக் காணப்பட்டமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஊ) முன்கல்வி அறிமுகம் (RPL) நடாத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்டிராததுடன் 12 துறைகளின் கீழ் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 383 பேர் கலந்துகொண்டிருந்ததுடன் பயிற்சித் துறைகளில் ஈடுபடுவதற்கு தமது அறிவையும் திறனையும்

விருத்தி செய்வதற்கான 40 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 31 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

(எ) தொழில்துறை வழிகாட்டலும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களும்

---

தொழில்துறை வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல் பிரிவின் மூலம் 2,441 தொழில்துறை வழிகாட்டலும் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களும் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. நடாத்தப்பட்ட தொழில்துறை வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்துக் காணப்பட்டன. 2011 ஆம் ஆண்டின் போது பெற்றோர்களை அறிவூட்டும் 319 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு இதற்காகஎதுவும் 15,997 பேர் கலந்துகொண்டிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

ii. 22 திறன்தொழில் படை மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் இது எதிர்பார்க்கப்பட்ட அளவைப் பார்க்கிலும் 50 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதன் பங்கேற்பு எதிர்பார்க்கப்பட்ட அளவைப் பார்க்கிலும் 2,474 ஆல் அதாவது 56 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

iii. இளைஞர் படையணி விழிப்புணர்வூட்டும் 76 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 50 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தமையால் இது எதிர்பார்க்கப்பட்ட அளவின் 34 சதவீத குறைவைக் காண்பித்தது. இளைஞர் படையணியின் மூலம் தொழில்துறை வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 3,492 பேர் கலந்து கொண்டிருந்ததுடன் இவர்கள் இலக்கிடப்பட்ட எண்ணிக்கையைப் பார்க்கிலும் 54.05 சதவீதத்தால் குறைவைக் காட்டியது.

iv. பயிலுனர்களை விழிப்புணர்வூட்டும் 552 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 415 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தமையால் இது எதிர்பார்க்கப்பட்ட அளவில் 24 சதவீதத்தால் குறைவைக் காண்பித்தது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 24,840 பேரின் பங்கேற்பு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 14,878 பேர் மாத்திரமே பங்கேற்றிருந்தனர்.

v. 390 முன்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 328 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தமையால் இது எதிர்பார்க்கப்பட்ட அளவில் 15.89 சதவீத குறைவைக் காண்பித்தது. இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக 23,400 பேரின் பங்கேற்பு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக 15,081 பேர் மாத்திரமே பங்கேற்றிருந்தமையால் இது எதிர்பார்க்கப்பட்ட அளவைப் பார்க்கிலும் 35.55 சதவீத குறைவைக் காண்பித்தது.

(ஏ) மீளாய்வாண்டின் போது 30 தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு இதற்காக 750 பேரின் பங்கேற்பு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 27 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. இதில் 548 பேர் மாத்திரமே பங்கேற்றிருந்தனர்.

(ஐ) "உங்கள் வியாபாரத்தைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்" எனும் கருப்பொருளின் கீழ் 20 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 500 பேரை அறிவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 16 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 160 பேரை மாத்திரமே அறிவூட்டக் கூடியதாக இருந்தது. இலக்கிடப்பட்ட நிலையின் படி ஒரு நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து 25 பேரை அறிவூட்டுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ஒரு நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து 10 பேர் மாத்திரமே அறிவூட்டப்பட்டிருந்தனர்.

(ஒ) மீளாய்வாண்டின் போது தொழில் பயிற்சியின் மூலம் 150 பயிலுனர்களுக்கு ரூபா 37.5 மில்லியன் தொகையான கடன் வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 78 பயிலுனர்களுக்கு ரூபா 17 மில்லியன் தொகையான கடன் மாத்திரமே

வழங்கப்பட்டிருந்தது. இது எதிர்பார்க்கப்பட்ட அளவில் 55 சதவீத குறைவாகக் காணப்பட்டது.

(ஓ) மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட 168 பகுதிநேரப் பாடநெறிகளில் 135 பாடநெறிகளில் இருக்க வேண்டிய குறைந்தளவு எண்ணிக்கையான பயிலுனர்கள் இன்மை, ஒரே பாடநெறிக்கு பல்வகைக் கட்டணங்கள் அறவிடப்பட்டமை, பாடநெறிக் கட்டணங்கள் ஒரே தடவையில் அறவிடப்பட்டிராமை மற்றும் ரூபா 5,874,000 தொகையான நிலுவையான பாடநெறிக் கட்டணங்கள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஔ) 2011 ஆம் ஆண்டில் 26 நிலையங்களில் 231 பாடநெறிகளுக்கும் 2012 ஆம் ஆண்டில் 23 நிலையங்களில் 152 பாடநெறிகளுக்கும் உரித்தான சான்றிதழ்கள் 2013 ஆகஸ்ட் மாதம் வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(க) பாடநெறியை மதிப்பிடுவதற்காக முன்னைய ஆண்டுகளின் போது மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு உதவியாக வழங்கப்பட்டிருந்த ரூபா 10,229,081 தொகை செலுத்த வேண்டிய பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் 2013 ஆகஸ்ட் வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்ட உதவித் தொகையில் ஒரு மாதத்திற்குள் உபகரணங்களைக் கொள்வனவு செய்து உரிய ஆவணங்கள் ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) பயிற்சிப் பாடநெறிகளை நடாத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2004 சனவரி 28 ஆம் திகதிய ரீவீசீ/1/ச.லே./2004/1 ஆம் இலக்க மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், மொத்த அளவில் 70 சதவீதம் பாடநெறியை ஆரம்பிக்கும் போது

இருக்க வேண்டியதுடன் அவ்வாறில்லாது விடில் அமைச்சுச் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மீளாய்வாண்டின் போது 312 பாடநெறிகள் 70 சதவீத மொத்த அளவின்றி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 92 பாடநெறிகளின் அளவில் 50 சதவீதத்திற்கும் குறைந்த அளவு காணப்பட்டது.

(ii) பாடநெறிகளை ஆரம்பிக்கையில் ஆகக் குறைந்த அளவானோர் இன்மை, சுற்றறிக்கையின் பிரகாரம் அளவு குறைவாக இருக்கையில் மாற்று வழிகள் பின்பற்றப்பட்டிராமை, சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் எடுத்திராமை போன்ற காரணங்களால் பாடநெறிகளின் இறுதியில் பயிலுனர்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட முறைகளைப் பின்பற்றாமையால் பாடநெறியை விட்டுச் செல்லும் பயிலுனர்களின் எண்ணிக்கை 30 சதவீதத்தால் அதிகரித்து 182 பாடநெறிகள் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் போது இது 87 சதவீதமாகக் காணப்பட்டது.

(ஆ) நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசகர்களைச் சேர்த்தல்

கணனி மற்றும் ஹொட்டேல் போன்ற துறைகளுக்காக மாதாந்தம் ரூபா 150,000 தொகையான படிப்பணம் செலுத்தும் நோக்கில் இரு ஆலோசகர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் கிடைக்கப்பெற்றதுடன் ஆலோசகர்களை சேர்த்துக்கொள்வதன் மூலம் அதிகாரசபை எதிர்பார்த்த பாடநெறிகளின் தரம், பயிலுனர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், வருமான நிலை உயர் தரத்திற்குக் கொண்டுவருதல் உள்ளடங்கலாக ஏனைய ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை மேற்கொண்டமைக்கு எவ்வித தகவலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், அவர்களது சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

(இ) பதவியணிப் பயிற்சிப் பாடநெறிகளை நடாத்தல்

2009 மார்ச் 26 ஆம் திகதிய 125/09 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி பயிற்சியில் கலந்துகொள்பவர்களுக்கு காலை

மற்றும் இரவு உணவு வழங்கப்படாத வேளையில் மாத்திரம் கொடுப்பனவு வழங்கப்படக்கூடிய போதிலும் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருக்கையில் ரூபா 205,100 தொகை கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) புத்தளம், மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் பாடநெறிகளை உறுதிப்படுத்தல், புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் ஆலோசகர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் அறிவை நாளதுவரையாக்கலுக்கான செயற்திட்டத்திற்காக ஹிந்துஸ்தான் இயந்திரப் பொறிகள் சர்வதேச (HMTI) செயற்திட்டத்தின் மூலம் ரூபா 502,949,307 தொகையான நிதி மற்றும் உபகரண உதவி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு வழங்கப்படும் ரூபா 29,921,663 தொகையான உபகரணங்கள் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மட்டக்களப்பு வனதுரமுல்லை நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த பொருட்கள் காணாமற் போயிருந்த போதிலும் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயற்திட்டத்தின் மூலம் வளங்களை வழங்கிய பாடநெறி பயிற்சி பெற்ற பயிலுனர்களின் எண்ணிக்கையில் குறைவு அவதானிக்கப்பட்டது.

(iii) செயற்திட்டத்தின் மூலம் வெளிநாட்டுப் பயிற்சி பெற்ற ஓர் உத்தியோகத்தர் கேட்டு விலகிய போதிலும் உடன்படிக்கை மீறப்பட்டமையால் புலமைப்பரிசிலுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 1,064,492 தொகை மீள அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மோட்டார் தொழிநுட்பவியலாளர் பாடநெறிக்காக ரூபா 83,857,040 தொகையான பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்தமைக்காக 2012 பெப்ரவரி மற்றும் மே மாதங்களின் போது பொருட்கள் கட்டளையிடப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கொள்வனவு வழிகாட்டல் கைநூலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் விலை கோரல்கள் மேற்கொள்ளப்பட்டு பொருட்களைக் கட்டளையிடுவதற்கு 04 மாதங்கள் முதல் 06 மாத காலம் கடந்திருந்தது.

(ii) 2012 பெப்ரவரி மற்றும் மே மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கட்டளைகளுக்கு உரிய பொருட்கள் முறையே 2013 மே மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் போதும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 பெப்ரவரி மாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட 18 ஆம் இலக்க கொள்வனவுக் கட்டளைக்குரிய பொருட்கள் குறித்த தினத்தில் வழங்கப்பட்டிராத காரணத்தால் 2012 யூன் மாதத்தின் போது இது இரத்துச் செய்யப்படுவதாக அதிகாரசபையால் வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து வழங்குனரால் 2012 யூலை 10 இற்கும் 15 இற்கும் இடைப்பட்ட நாட்களில் உபகரணங்களை விநியோகிப்பதற்கு உடன்பட்டிருந்தது. எனினும், அக் காலப்பகுதியின் போதும் உபகரணங்களை வழங்கியிராததுடன் கொள்வனவுக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் பிணைத் தொகையை காசாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ரூபா 6,840,673 பெறுமதியான ஒரு விடயத்திற்கு உரித்தான தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை 2013 யூலை மாதம் வரையிலும் பெறப்பட்டிராத போதிலும் ரூபா 6,090,768 தொகையான 08 விடயங்கள் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவால் 2012 யூலை மாதத்தின் போது நிராகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் உபகரணங்கள் 2013 யூலை 31 ஆம் திகதி வரையிலும் மீள வழங்கப்பட்டிருக்கவில்லை.

(v) ரூபா 47,322,040 பெறுமதியான 66 ஆம் இலக்க கொள்வனவுக் கட்டளை 2012 ஒக்டோபர் 04 ஆம் திகதி கொள்வனவுக் குழுவால் இரத்துச் செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு தீர்மானம் எடுக்கப்படாததாகக் கருதப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தலைவரால் 2012 ஒக்டோபர் 16 ஆம்

திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. கொள்வனவுக் குழுத் தீர்மானத்திற்கு முரணாக தலைவர் நடவடிக்கை எடுத்ததாகவும் கட்டளையிடப்பட்ட 19 வகையான உபகரணங்களில் 03 வகையான உபகரணங்களே விநியோகிப்பட்டதாக கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது. இவ்வாறே விநியோகிக்கப்பட்டிருந்த பொருட்கள் மாதிரிகளுடன் இணங்கியிராமையால் சில உபகரணங்கள் குறைபாடுள்ளவையானமையால் சிற்சில வரையறைகளுடன் பயன்படுத்துமாறு ஆலோசகர்கள் அறிவூட்டப்பட்டிருந்தனர். பயிலுனர்களின் கவனக்குறைவாலும் தவறுதலாலும் உபகரணங்கள் பாதிப்புறும் இயலுமை அதிகம் என்பதால் குறைபாட்டுடனான உபகரணங்கள் பயன்படுத்தப்படுவது ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(vi) நிராகரிக்கப்பட்ட ரூபா 1,938,313 தொகையான 16 வகையான உபகரணங்களும் விடய இலக்கம் 01 இன் கீழ் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு நிராகரித்த ரூபா 4,099,323 தொகையான 05 வகையான பொருட்கள் 2013 யூலை மாதம் வரையிலும் மீள வழங்கப்பட்டிருக்கவில்லை.

(vii) ஒரு வருடத்திற்கு மேலான காலமாக பொருட்களை விநியோகிப்பதற்கு முடியாமையால் இந் நிறுவனம் தவறுனர் பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் குறித்த உபகரணம் கிடைக்கப்பெற்றிராமையால் பயிற்சி நடவடிக்கைகள் ஒரு வருடத்திற்கும் மேலான காலத்தால் தாமதமாகியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஊ) நடைமுறை வேலை

(i) 2011 மார்ச் 13 ஆம் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த தலல்ல தொழிற் பயிற்சி நிலையத்தின் வெதுப்பகப் பிரிவு திருத்தவேலை ஒப்பந்தத்தின் பெறுமதியான ரூபா 2,171,788 இற்கு மேலாக ரூபா 386,632 தொகை கூடுதலாக செலவிடப்படுவது தொடர்பான உடன்பாடு

இன்மையால் 2013 திசெம்பர் மாதம் வரையிலும் இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 3,661,609 பெறுமதியான மாபாகடவெவ நிலையக் கட்டிடம் 2012 சனவரி 05 ஆம் திகதி பூர்த்தியடைய வேண்டிய போதிலும் இது 2012 திசெம்பர் 28 ஆம் திகதியே பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. வேலைத்தளங்கள் பரீட்சிக்கப்பட்டு நலிவுகளும் குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்படுவதற்கு 05 மாதங்கள் கடந்திருந்தன.

(iii) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட ரூபா 23,112,752 தொகையான 5 ஒப்பந்தங்கள் 2 ½ மாதங்கள் முதல் 13 ½ மாதங்கள் தாமதித்திருந்த போதிலும் குறித்த காலப்பகுதியில் பூர்த்திசெய்யப்படாத ஒப்பந்தங்கள் தொடர்பில் தாமதக் கட்டணங்கள் அறவிடல் அல்லது வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்

அதிகாரசபையால் பயிற்சிப் பாடநெறிகள் சனவரி மற்றும் யூலை மாதங்களில் ஆரம்பிக்கப்படுவதுடன் அப் பாடநெறிக்காக தேவையான பயிற்சி உபகரணங்களைக் கொள்வனவு செய்வது இதனை அண்மித்த காலத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உபகரணங்கள் கட்டளையிடப்பட்ட நாள் முதல் விநியோகிக்கப்படுவதற்கு 53 நாட்கள் முதல் 366 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தது.

(ii) வழங்குனர் பொருட்கள் வழங்கியதை அடுத்து அப் பொருட்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு தொடர்புபடுத்தப்பட்டு அதன் அங்கீகாரம் பெறப்பட்ட பொருட்கள் மாத்திரம் பொறுப்பேற்கப்பட வேண்டிய போதிலும் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் சில தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்படாது களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. விநியோகிக்கப்பட்ட

உபகரணங்கள் மாதிரிகளுடன் இணங்குவதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை பெற்றுக்கொள்ளப்படுவதற்கு 12 நாட்கள் முதல் 334 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்ததுடன் அவ்வறிக்கை பெறப்படும் வரை பொருள் விநியோகிக்கப்படலாகாத போதிலும் சில சந்தர்ப்பங்களின் போது இதற்கு முரணான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பயிற்சி ஆலோசகர்களிடமிருந்து அப் பொருட்கள் நல்ல நிலையில் இருப்பதற்கான பரிந்துரை பெறப்பட்டிருந்தது.

(iii) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 8.9.3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்குனர்களுடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) களஞ்சியங்களின் பின்அட்டைகளில் பொருட்கள் குறைத்துப் பதியப்பட்டிருந்த சந்தர்ப்பங்களைப் போன்று பெறுமனவுகள் பதியப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. 2011 ஆம் ஆண்டில் தலைமைக் களஞ்சியத்தின் பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட ரூபா 4,742,905 தொகையான பற்றாக்குறையும் ரூபா 2,304,837 தொகையான மிகையும் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 10 பொருட்களின் பற்றாக்குறையின் பெறுமதியான ரூபா 324,202 தொகை அங்கீகாரம் இன்றி புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. பெறுமதி ரூபா 154,080 தொகையான 04 பொருட்கள் மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்டிராததுடன் அவற்றின் பெறுமதியும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக அநுராதபுரம் மாவட்டக் காரியாலயத்திலிருந்து ரூபா 2,828,711 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கண்காட்சியின் உத்தியோகபூர்வக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட மற்றும் உணவு வழங்கியமைக்கு முறையே ரூபா 563,000 தொகையும் ரூபா 613,915 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் விசேட கொடுப்பனவாக ரூபா 434,500 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

4.3 **சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் நிலையான சொத்துப் பதிவேடு தயாரிக்கப்படுவதற்காக தனியார் நிறுவகமொன்றிற்குச் செலுத்தப்பட்ட தொகையிலிருந்து அறவிடப்பட வேண்டிய பெறுமதி சேர் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டிராத போதிலும் மேலும் ரூபா 1,762,076 செலுத்தப்பட வேண்டிய தொகையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2008 முதல் 2011 ஆம் ஆண்டு வரை 04 ஊழியர்களும் 2012 ஆம் ஆண்டின் போது 12 ஊழியர்களும் சேவையிலிருந்து விலகிச் சென்றிருந்த போதிலும் அவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 3,843,139 தொகையான பணிக்கொடை 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிராததுடன் ஒரு ஊழியர் தொழில் நீதிமன்றில் வழக்கொன்றைத் தொடர்ந்திருந்தமையால் மிகையறவீடாக ரூபா 109,908 தொகையும் செலுத்தப்படுவதற்கு நேர்ந்திருந்தது. பணிக்கொடை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் குறித்த நாளில் பணிக்கொடை செலுத்தப்பட்டிராமையால் எதிர்காலத்திலும் மிகையறவீடு செலுத்தப்படுவதற்கு நேருமென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) உப தலைவரின் உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காக ரூபா 40,000 தொகையான முற்பணம் பெறப்பட்டு ரூபா 40,505 தொகையான செலவினம் ஏற்கப்பட்ட போதிலும் இதற்கு மேலதிகமாக அவ் விடயங்களுக்காக வேறோர் நிறுவகத்திற்கு ரூபா 44,000 செலுத்தப்பட்டிருந்தது.

4.4 **விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

2011 ஆம் ஆண்டின் போதும் அதன் முன்னரும் கொள்வனவு செய்யப்பட்ட 532 பொருட்கள் 2013 பெப்ரவரி மாதம் வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவிகளுக்கு நியமிக்கப்படுகையில் ஆரம்ப படிமுறையிலும் பார்க்க உயர்ந்த சம்பள அளவுத்திட்டத்தை வழங்கியதன் காரணமாக 80 சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்கு சம்பளமாக ரூபா 6,079,090 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஓய்வு பெற்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,934 தொகையான தொலைபேசிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) குறித்த தினத்திற்கு வருமான அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிராமையால் 07 வாகனங்களுக்காக ரூபா 8,100 தொகையான மிகையறவீட்டைச் செலுத்த நேர்ந்தது.

4.6 ஒப்பந்த நிர்வாகம்

நாராஹென்பிட்டி தேசிய தொழிற் பயிற்சி நிறுவகத்தின் பிரதான மூன்று மாடிக் கட்டிடத்தின் வெளிப்பகுதியை பூச்சிடுவதற்காக (Cladding work) இற்கான ரூபா 32,095,280 தொகையான ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் இவ் ஒப்பந்தத்திற்கான மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிராததுடன் ஒரு விலை மனு மாத்திரம் பெறப்பட்டிருந்தது.

(ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.2 ஆம் பந்தியின் பிரகாரம் 03 மாதங்களுக்கு மேற்படும் வேலைக்காக விலைமுரண்கள் கருத்திற்கொள்ளப்படக் கூடிய போதிலும் ஒப்பந்தக் காலம் 45 நாட்களான இவ் ஒப்பந்தத்திற்காக ரூபா 4,206,825 தொகையான விலை முரண்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இது

மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 13.11 சதவீதமாகக் காணப்பட்டது.

(இ) உடன்படிக்கையின் பிரகாரம் 2012 சனவரி 14 ஆம் திகதி இச் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட வேண்டிய போதிலும் 333 நாட் காலதாமதத்தை அடுத்து இது பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ஈ) இச் செயற்பாட்டினால் (Cladding work) கட்டடத்தின் வெளித் தோற்றம் மாத்திரம் மாற்றமடைந்த போதிலும் வினைத்திறன் அதிகரிக்கும் வகையிலான வாய்ப்போ அல்லது வேறு வசதிகள் எதுவும் மேம்படாமையால் இதற்காக ரூபா 35 மில்லியன் இற்கும் மேற்பட்ட தொகையைச் செலவிடுவது சிக்கனமற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது.

**4.7 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் தொடர்பாக கருத்திற்கொள்ளாது அதிகாரசபையின் 25 ஊழியர்கள் அமைச்சிற்கும் ஏனை சில வெளி நிறுவகங்களுக்கும் விடுவிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறே அதிகாரசபைக்கு எவ்வித சேவையும் மேற்கொள்ளப்படாது அவர்களில் 20 பேருக்கான சம்பளமும் படிப்பணமுமாக ரூபா 4,446,919 தொகை அதிகாரசபையால் செலுத்தப்பட்டிருந்தது. இவ் ஊழியர்களில் சிலர் 1 முதல் 17 ஆண்டுகள் வரையான காலத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததாகவும் சேர்க்கப்பட்ட காலம் முதல் ஊழியர்கள் விடுவிக்கப்பட்ட 17 சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 9 ஆலோசகர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்கும் நியமன ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, பாடநெறிக்கு அவசியமான ஆலோசகர்கள் சேர்க்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

(இ) சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஓர் உத்தியோகத்தரின் வாகன விபத்துத் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 135,744 தொகை விடுவிக்கப்படுவதற்கு முன்னர் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மூன்று வாகனங்கள் வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினமாக அதிகாரசபையிலிருந்து ரூபா 299,466 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 4.8 பதவியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான விபரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| ஊழியர் வகை | 2012 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|
| | அங்கரிக்கப் பட்டது | உள்ள படியானது | மிகை/ (பற்றாக்குறை) | அங்கரிக்கப் பட்டது | உள்ள படியானது | மிகை/ (பற்றாக்குறை) |
| நிறைவேற்று தரம் | 11 | 8 | (3) | 11 | 09 | (2) |
| பதவி நிலைத் தரம் | 87 | 59 | (28) | 78 | 54 | (24) |
| ஏனையவை | 1830 | 1673 | (157) | 1842 | 1691 | (151) |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆட்சேர்ப்பு நடைமுறைக் கோவையின்றி அமைய, ஒப்பந்த மற்றும் நிரந்தர அடிப்படையில் 37 ஊழியர்களும், 43 பேர் முன்னைய ஆண்டின் போதும் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் இதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஆட்சேர்க்கப்படுவதற்கு தேவையான அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிப்பாளர் நாயகத்தின் 2008 முதல் சமுர்த்தி அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டு முதல் அப் பதவியில்

பதில் கடமையாற்றுவதற்கோ அல்லது உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் 02 கணக்காளர் பதவிகள் காணப்பட்டதுடன் அப் பதவிகள் 2010 செப்தெம்பர் மாதமும் 2011 ஆகஸ்ட் மாதம் முதல் வெற்றிடம் நிலவியது.

(ஈ) 33 மாவட்ட அலுவலகத்திலும் தேசிய தொழிற்துறை பயிற்சி நிலையங்களிலும் கல்விசார் பதவியணி 1,110 தொகையும் 601 கல்விசாரா பதவியணியினரும் காணப்பட்டனர். ஒரு நிலையத்திற்கு 4 முதல் 51 வரையான வீச்சில் கல்விசாரா பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கு மேலதிகமாக கல்விசாரா பதவியணியினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதன் பிரகாரம், 234 கல்விசார் பதவியணியினர் வினைவற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) உசாத்துணை பதவியணியின் 49 பேர் நிறுவனத்தின் பிரதான நோக்கத்திற்கு மாறான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

(ஊ) உரிய விடயம் தொடர்பாக பாடநெறிகள் நடாத்தப்படாத நிலையங்களுக்கு ஆலோசகர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரே பாடநெறிக்கு ஆலோசகர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் ஒரே பாடநெறிக்கு ஒரு ஆலோசகருக்கு மேல் ஈடுபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

(எ) மீளாய்வாண்டின் போது ஊழியர்கள் பெறப்பட்டிருந்த சம்பளமற்ற லீவு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிராததுடன் ஆலோசனைப் பதவியணியில் 25 பேர் 214 சம்பளமற்ற லீவுநாட்களைப் பெற்றிருந்தனர். இவ்வாறு ஆலோசனையாளர்கள் கூடுதலாக லீவைப் பெறுவது பயிலுனர்களின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஏ) பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடாத ஆலோசகர்கள் அப்பயிற்சி நிலையங்களில் வைத்திருந்து சம்பளம் வழங்கப்படலாகாதெனவும்

அவ்வாறு 02 மாதங்களுக்கு மேல் சம்பளம் பெறப்படுவதாயின் இதற்காக அமைச்சின் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சுச் செயலாளரால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் இதன் பிரகாரம் செயற்படாது சம்பளம் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.9 வாகனப் பயன்பாடு

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 யூலை 14 ஆம் திகதிய 11/2006 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம், உத்தியோகத்தர்களுக்கு உரித்தான எரிபொருள் கொடுப்பனவு மாதாந்தம் ஒரே தடவையில் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையின் முன்னாள் தலைவருக்கும் உப தலைவருக்கும் எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்படுகையில் அவ்வாறு செயற்படாது இதற்குப் பதிலாக குழாமின் எரிபொருள் கட்டுநிதியின் மூலம் அவ்வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வகையில் முன்னாள் தலைவரால் மாதாந்தம் உரித்துடைய எரிபொருள் கொடுப்பனவைப் பார்க்கிலும் ரூபா 107,984 மிகைத்து எரிபொருள் பெறப்பட்டிருந்தது.

(ஆ) 2003 யூன் 2 ஆம் திகதிய பீஈம/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம், பீ – தரத்திலான அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் உத்தியோகபூர்வ வாகனத்தை ஒதுக்கக்கூடிய உத்தியோகத்தர்கள் தவிர்ந்த 5 பேருக்கு உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டு 2012 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 563,360 தொகையும் ரூபா 537,480 தொகையும் எரிபொருளுக்காகச் செலவிடப்பட்டிருந்தது.

(இ) 19 – 9958 ஆம் இலக்க வாகனம் 2008 செப்தெம்பர் 07 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை விபத்திற்குள்ளாகியிருந்ததுடன் அந்நாள் இவ்வாகனம் ஈடுபடுத்தப்பட்டிருந்த உத்தியோகபூர்வ கடமை தொடர்பாக எவ்வித தகவலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வாகனப் பழுதுபார்த்தலுக்காகக் கிடைக்கப்பெற்ற காப்புறுதி நட்டஈட்டுத் தொகையைப் பார்க்கிலும் செலவிடப்பட்ட ரூபா 198,724 தொகையை விபத்துத் தொடர்பாக

பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வாகனம் பழுதுபார்க்கப்பட்டு மீள அதிகாரசபைக்குக் கொண்டு வருவதற்கு 58 மாதங்களுக்கு மேலான காலம் கடந்திருந்ததுடன் இது 2013 செப்தெம்பர் மாதம் வரை உத்தியோகபூர்வ கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வாகனம் பழுதுபார்க்கப்பட்டதை அடுத்து கொடுப்பனவு செய்யப்படுவதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை செயற்படுத்தப்படாமை, பழுதுபார்த்தல்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டிராமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் நாளதுவரையாக்கப்பட்ட வருடாந்த பாதீட்டுடன் நிதியாண்டு ஆரம்பிக்கப்படுவதற்கு 15 நாட்களின் முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 இற்கும் இதனை அடுத்தும் அமுலாகும் வகையில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமும் செயற்பாட்டுத்திட்டமும் 2012 மார்ச் 02 ஆம் திகதியே பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

திருத்தப்பட்ட பாதீட்டில் மதிப்பிடப்பட்ட வருமானச் செலவினங்களுக்கும் உள்ளபடியான வருமானச் செலவினங்களுக்கும் இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் அவதானிக்கப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) காசு மற்றும் வங்கி நடவடிக்கைகள்
(இ) கணக்கீடு
(ஈ) வாகனக் கட்டுப்பாடு
(உ) முற்பணமும் கொள்வனவும்
(ஊ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(எ) பதவியணி முகாமைத்துவம்
(ஏ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஐ) பயிலுனர் பயிற்சி நடவடிக்கைகள்

ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 2012 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கான நிதிக்கூற்று தொடர்பாக 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)சி படி கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

2.2.1 உடன்படவில்லை.

சமர்ப்பிக்கப்பட்ட இறுதி கணக்கறிக்கையில் ரூபா. 2000க்கு குறையாத உடமைகள் மூலதனத்தில் உள்ளடக்கப்படவில்லை. ர்ஆவுஐ வெளிநாட்டு உதவிகளின் கீழ் கிடைத்த உபகரணங்கள் பட்டியலில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அங்கு பிரதிநிதித்துவப்படுத்திய 2000 ரூபாவுக்கு குறைவான உபகரணங்கள் மேலதிக கட்டண அறவீட்டுக்காக குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2.2

(அ) உடன்படிவில்லை
இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் காரணமாக குறிப்பிட்ட வாகனங்களின் பெறுமதி அதிகரிப்பதுடன் இது மூலதன செலவுகளாக கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.

(ஆ) உடன்படுகிறேன்.
பணிக்கொடைகள் ஒதுக்குதல் 2013/12/31ஆந் திகதிக்கு செவ்வனே கணக்கிடப்பட்டு செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(இ) இந்த ஊழியர்கள் சேவையிலிருந்து நீங்கிச் சென்றாலும் இறுதிமாத சம்பளம் செலுத்தி அவர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்படவில்லை, இதன்படி அவ்வாறு அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் சிலர் இறுதி சம்பளம் செலுத்தப்பட்டு விடுவிக்கப்படும் போது அவர்களது பணிக்கொடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடன்கள் அறவிடப்பட்டுள்ளன. மேலும் அறவிடப்பட வேண்டிய மீதிகள் தொடர்பாக 2014இல் அவற்றை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஈ) தவறுதலாக 2011இல் இந்த ஊழியர்கள் 07 பேருக்கு பணிக்கொடைக்கான ஒதுக்கங்கள் செய்யப்படவில்லை என்பதுடன் 2012இல் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
செலுத்தி முடிக்கப்பட்ட 112,227.00 ரூபா தவறுதலாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டுள்ளதுடன் 2013இல் இது செம்மையாக்கப்பட்டது.

(உ) உடன்படவில்லை.
இந்த 2011ஆம் ஆண்டுக்கான 9,669,450/- ரூபா குறிப்பிட்ட பாடநெறிகளை விட்டுச் செல்வதற்கானவை என்பதுடன் அந்த பெறுமதி கிடைக்க வேண்டிய மீதியாக முன்செல்ல முடியாது என்பதுடன் அந்த பெறுமதி கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளது.

(ஊ) இந்த பெறுமதி மீதான பின்னிணைப்பு பெறப்பட்டுள்ள முற்பணமாகும் என்பதுடன் 2013.04.30ஆந் திகதி ஆகும்போது பொருட்கள் கிடைத்து சகல செலுத்தல்களும் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

(எ) ஏற்றுக்கொள்கின்றேன். 2013 தொடக்கம் சம்பளமற்ற விடுமுறை அந்த வருடத்தில் கணக்குகளில் பதிய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஏ) இந்த அறவிடப்பட வேண்டிய சம்பளம் 2012இல் அறவிடப்பட வேண்டிய பணமாக கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(ஐ) எதிர்வரும் நாட்களில் நூலக புத்தகங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு கணக்கில் பதிந்து தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

(ஒ)(ஸ) மீளாய்வு ஆண்டினுள் தொலைபேசி கட்டணங்களாக அறவிடப்பட வேண்டிய 942,783.00 ரூபா அறவிடப்படாமை

இந்த அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ள 2012/01ஆம் இலக்க சுற்று நிருபத்தின் படி தொலைபேசி வரையறைகள் மீறப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தொலைபேசிகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். பின்வரும் பெயருள்ள இரண்டு உத்தியோகத்தர்களினதும் மாதாந்த உத்தியோகபூர்வ வீட்டுத் தொலைபேசிகளின் வரையறை ரூபா. 2000.00 என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.

திரு. கே.கே. கொரளகே – பணிப்பாளர்

திரு. மஹிந்த ஜயதிலக்க – பிரதிப் பணிப்பாளர்
எனினும் தங்களால் அவர்களது உத்தியோகபூர்வ குடிமனைக்கு தொலைபேசி கட்டண வரையறை ரூபா. 1000.00 ரூபா என கருதப்பட்டுள்ளது. அதேபோன்று ஏனைய உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு இல. 01)

அந்த பட்டியலின்படி அனுமதிக்கப்பட்ட மாதாந்த தொலைபேசி வரையறை ரூபா. 4000.00 ஆகும். ஒவ்வொரு மாதத்தையும் வெவ்வேறாக எடுத்து ஆராயும் போது குறிப்பிட்ட மாத வரையறை மீறப்பட்டுள்ளதை அறிய வருகின்ற போதிலும் பெரும்பாலான மாவட்ட நிலையங்களின் ஒட்டு மொத்தமான எல்லை மீறப்படவில்லை. குறிப்பிட்ட விபரங்கள் உள்ளடக்கப்பட்ட இணைப்பு 01 இன்படி உண்மையாக மாதாந்த உத்தியோகபூர்வ தொலைபேசி எல்லை பின்வரும் பணிமனைகளில் மாத்திரமே மீறப்பட்டுள்ளது.

1. உதவிப்பணிப்பாளர் - நாரஹேன்பிட்டி பயிற்சி நிலையம்
2. புத்தளம் - மாவட்ட செயலகம்.
3. கம்பஹ - மாவட்ட செயலகம்.
4. களுத்துறை - மாவட்ட செயலகம்.
5. இரத்தினபுரி - மாவட்ட செயலகம்.
6. மட்டக்களப்பு - மாவட்ட செயலகம்.
7. காலி - மாவட்ட செயலகம்.

மீறப்பட்ட வரையறைகளின் பெறுமதியை குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஸை) 2009 ஆண்டுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா. 151437.00 தொகை சுற்று நிருப வரையறைகளுக்கிணங்க குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டு தங்களுக்கு அறிவிக்கப்படும்.

தொலைபேசிக் கட்டணமான ரூபா. 1,334,385.00 ரூபாவுக்கான தொகை தவறுதலாக மீளாய்வு ஆண்டின் செலவாக பதிவளிக்கப்பட்டுள்ளாதுடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஓ) இவ்வாறான கட்டிடங்கள் 2012ஆம் ஆண்டு செலுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு நிர்மாணப் பிரிவினால் பரிசீலிக்கப்பட்டு பொறுப்பேற்கப்படாமையினால் 2012ஆம் ஆண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. தற்போது செலுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதனால் 2013இல் கட்டிட கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஔ) சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறைகளாக பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்ட ரூபா. 54,468.00 ரூபாவுக்கான தொகை பணிக்கொடை கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஃ) ஏற்றுக்கொள்கிறேன் இனிமேல் இவ்வாறான தவறுகள் ஏற்படாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும்.

(க) உடன்படுகிறேன்

2013இல் கணக்காய்வு கட்டணங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அது இறுதி கணக்குகளில் திரண்ட நிதியத்தில் காட்டப்பட்டுள்ளது.

(கா) சேர்த்துக் கொள்ளப்பட்ட பயிலுனர்களின் எண்ணிக்கைக்கமைய சகல பதிவு செய்யும் கட்டணங்கள் கணக்கில் பதியப்பட்டுள்ளதுடன் இங்கு காட்டப்படும் பயிலுனர்கள் 2399 பேர் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. 2013 தொடக்கம் செயலாற்று அணி அறிக்கையிலுள்ள எண்ணிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள கணக்குகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான உள்ளக வேலைத்திட்டமுமானது வகுக்கப்பட்டுள்ளது.

(கி) எதிர்வரும் நாடுகளில் அறிவித்தல்கள் வெளியிடப்படும் வருடத்தில் அந்த கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் அவற்றை கணக்குகளில் பதிவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3

(அ),(ஆ)

இந்த மீதிகள் நேர்வரிசை அமைச்சுக்கள் மற்றும் அதிகார சபையின் கீழ் இருக்கும் நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டியவை என்பதுடன் அந்த மீதிகளை அறவிட்டுக் கொள்வதிலும் பிரச்சினைகள் உள்ளன. தற்போது இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை நிதிப் பிரிவின் பணிப்பாளர் பணிப்பாளர் சபையின் கவனத்துக்கு கொண்டு வருவதன் பின்னர் பணிப்பாளர் சபையினால் பிரதானக உள்ளக கணக்காய்வுக்கு இது சம்பந்தமாக பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட அறிக்கை பணிப்பாளர் சபையிடம் ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் அதன் போது முன்வைக்கப்பட்ட விடயங்களுக்கமைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பணிப்பாளர் சபை ஆலோசனைகளை வழங்கியுள்ளதுடன் அதன்படி எதிர்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(இ) இந்த மீதிகள் சம்பந்தமாக பணிப்பாளர் சபையின் ஆலோசனைகளைப் பெறுவதற்கான சகல தகவல்களும் உள்ளடங்கிய பணிப்பாளர் சபை பத்திரமானது பணிப்பாளர் நிதியினால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபையின் ஆலோசனைகளுக்கமைய இதனை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) இந்த மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக கடந்த காலங்களில் தூதரகங்கள் மூலம் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடமிருந்து மற்றும் இவர்கள் வசிக்கும் பிரிவுக்குரிய கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து விபரங்கள் கோரப்பட்டன எனினும் இவர்கள் தொடர்பாக போதுமான விபரங்கள் அவர்களால் வழங்க முடியவில்லை. இது தொடர்பாக குறிப்பிட்ட செலாளர்களிடமிருந்து விபரங்கள் கோரப்பட்டதுடன் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து விளக்கம் கோருமாறு வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கமைய நடிக்கை எடுக்கப்பட்டது.

(உ)

| விபரங்கள் | தொகை | விளக்கமளித்தல் |
|---|---|---|
| பியவர்தன அன்ட் கம்பனி | 1,762,076.00 | இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட 2009இன் ஆரம்ப விடயம் தொடர்பாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக செலுத்தல்கள் செய்யப்படாமையினால் இதனை கணக்கிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| மீள செலுத்த வேண்டிய கேள்விப்பத்திர வைப்புக்கள் | 293,064.44 | மீள செலுத்த வேண்டிய பிணை வைப்புக்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்ட பணம் குறிப்பிட்ட தரப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்படும் இது தொடர்பாக வழங்குனர்கள் பதில் அளிக்காவிடின் அந்த மீதி வருமான கணக்கில் செம்மையாக்குதல் 2013இல் இடம்பெறும். |
| රඳවා ගත් මුදල් | 4,319,901.16 | |

2.2.4 காணிகள்

கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள 26 நிலையங்களின் காணிகள் சம்பந்தமான விபரங்கள் பின்வருமாறு.

அரச காணிகளில் உள்ள நிலையங்கள் 22

காணிகள் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குரிய காணிகளில் அமைந்துள்ள நிலையங்கள் 02

இலங்கை மகாவலி அதிகார சபைக்குரிய காணிகளின் விபரங்கள்

அந்தந்த நிலையங்களில் அமைந்துள்ள காணிகளை இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கையேற்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 02இல் காட்டப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அரச காணிகளில் முன்னெடுக்கப்பட்டும் தொழிற்பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு கையளிப்பது தொடர்பாக 2013.11.20ஆந் திகதி காணி, காணிகள் அபிவிருத்தி அமைச்சில் அந்த அமைச்சின் மேலதிக செயலாளருடன் (காணிகள்) நடைபெற்ற கலந்துரையாடலின் போது ஏற்கனவே தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்ட காணிகள் முதலில் தொழிற்பயிற்சி இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படாத காணிகள் அடுத்த படியாக கையேற்று வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க முடியுமென மேலதிக செயலாளர் (காணிகள்) அறிவித்துள்ளனர்.

இதற்காக தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்ட நிலையங்கள் மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படாத நிலையங்களை வெவ்வேறாக பட்டியலிட்டு அந்த காணிகளை அளவிடுவதற்காக நில அளவியலாளர்களை தெரிவு செய்து அவர்களது பெயர்கள் மற்றும் முகவரியுடன் அந்த ஆவணங்களை தம்மிடம் சமர்ப்பிக்குமாறு மேலதிக செயலாளர் (காணிகள்) ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆலோசனை வகைகளின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

| விடயம் | பொறுப்பு | பதில் |
|---|---|---|
| தொகை | 27இ743இ985 | சகல அட்டவணைகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| கிடைக்க வேண்டிய மீதிகள் | 28,737,083 | இந்த மீதிகள் 2006க்கு முன்னரான மீதிகள் என்பதனால் அது சம்பந்தமான தெரிவுகளை உறுதிப்படுத்திக் கொள்வது நடைமுறை ரீதியில் சாத்தியமற்றதாகும். |
| மேம்பாட்டு செலவுகள் | 340,272 | ஞாபகார்த்த மலருக்கான அறிவித்தல் அனுசரணை - 50.000<br>பத்திரிகை அறிவித்தல்கள் - 200,000<br>ආධුනිකයන් බඳවා ගැනීම වෙනුවෙන්<br>பயிலுனர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பாக வர்த்தமான அறிவித்தல் ஒன்றை பிரசுரித்தல் 90,272 ரூபாவுக்கான பிரதான கடிதக்கோவை இல்லாதிருப்பதுடன் குறிப்பிட்ட ஆவணங்கள் வவுச்சர்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. |
| மேம்பாட்டு செலவுகள் | 256,000 | இந்த வவுச்சர் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இது கணக்காய்வு பரிசீலனைக்கு உட்படுத்தப் |

| | | |
|---|---|---|
| | | பட்டது. |
| වියදම් (සැලසිනේ) | 6,500,000 | இது தொடர்பாக முறையான கடிதமொன்றை தேடிக்கொள்ள முடியவில்லை என்பதுடன் கடிதப்பரிமாறல் தகவல்களுடன் கடிதக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த கோவையின் பற்றுச் சீட்டுக்கள் இணைப்புக்களாக குறிப்பிடப்பட்டுள்ளன. இதற்காக அதிகார சபை பணம் செலவளிக்கவில்லை என்பதுடன் இது தொடர்பாக டெலிசினோ நிறுவனம் தொடர்ந்தும் கோரிக்கைகளை விடுப்பதனால் அந்த மீதிப்பணம் அல்லது கடிதக் கோவைகளில் காட்டப்பட்டுள்ளன. |
| ලෝක සංචාරක දින වියදම් | 1,000,000 | |

2.2.4

எரிபொருள்: 13,826,300 இந்த வாகனங்களின் எண்ணிக்கை 141ஆக காட்டப்பட்டுள்ள போதிலும் அதிகார சபைக்குரிய வாகனங்களின் எண்ணிக்கை 135 ஆகும்.

பின்வரும் வாகனங்கள் அதிகார சபைக்குரிய வாகனங்கள் அல்ல என்பதை தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

59-0097 250-0663 58-1310 64-7724 டீடீ-6110 லுஞ-8756

பின்வரும் வாகனங்கள் தொடர்பான வாகன ஓட்டுதல் குறிப்புக்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

துஞ-2949 ஓர்-5247 63-0316 ீஊ-0994 ஓர்-4974 ஓர்-4991 ஓர்-4980 ஓர்-5109 ஓர் -5239ீஊ-0997 ஓர் -4970 ஓர்-5112 32-2836 டுகு-8828 ஓர் -4957 ஓர் -5188 56-4647 லுஜ-8351

ீநு-1488 ஓர் -5181 ஓர் -5103 54-9655 டீடீ-3507 றுடு-0915 64-9724 32-2837 ருமு-7814 லுஏ-5649 லுஜ-8327 ீஊ-1086 ீநு-0195 ருடு-4371 ஓர் -5011 ஓர் -4964 லுஏ-5648 ஞஆ-5038 ஓர் -5099 ஓர் -5193 31-6020 யுே-9803 ஞனு-3612 லுஏ-5650 ஓர் -5003 ீடீ-6243 யுே-7309 301-8723ீஊ-2213 முசு-1063 ீஊ-2221 19-9959 முஜ-2558 ீஊ-5371 முஜ-3601 ீஊ-2217 251-7985 லுஜ-8345 56-4644 64-1602 51-6016 டுகு-8829 59-0271 19-6176 டுகு-8827 ீநு-1491 32-2835 56-4622 64-3186

டுகு-7340 → டுநு-7340 என திருத்தப்பட வேண்டும்

ஏஜ-8343 → லுஜ-8343 ஆக திருத்தப்பட வேண்டும்

டுகு-7345 → டுநு-7345 ஆக திருத்தப்பட வேண்டும்

பின்வரும் இலக்கங்கள் தொடர்பான வாகனங்கள் சம்பந்தமாக வாகன ஓட்டுதல் குறிப்புகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியவில்லை. இது தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்களிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட வாகன ஓட்டுதல் குறிப்புக்கள் வழங்கப்பட்டதன் பின்னர் தாமதமின்றி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படும் (குறிப்பிட்ட விபரங்கள் இணைப்பு 03இல்)

றுடு-0889ீஊ – 5376 ஓர் -5129 62-5483

31-6015 ஓர் -4985 லுஏ-5639 62-4814

லுமு-9746 றுமு-9746 என திருத்தப்படல் வேண்டும்

பின்வரும் இலக்கங்கள் உள்ள வாகனங்கள் கடந்த காலங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை குறிப்பிட்ட விபரங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| ீயு-1227 | - | சுதேச மருத்துவ அமைச்சுக்கு வழங்கப்பட்டது. |
| 18-5640 | - | பயிலுனர் செய்முறைப் பயிற்சிக்காக வழங்கப்பட்டது. |
| 300-2814 | - | அதிக எரிபொருள் விரயம் சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிலைமையை கொண்டிருக்காமையினால் சேவையில் ஈடுபடுத்தப்பட வில்லை. |
| முஜ-2563 | - | கௌரவ அமைச்சரின் கடமைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது |
| 19-9958 | - | புதுப்பித்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளது |
| 59-0267 | | இது கெப் வாகனமாகும். 2002இல் விபத்துக்குள்ளாகவில்லை |
| 31-6018 | - | தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. பயிலுனர்களின் செயல்முறைப் பயிற்சிக்காக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது |
| 62-2015 | - | புதுப்பித்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதனால் சேவையில் ஈடுபடுத்தப்பட வில்லை, ஆனால் தற்போது குறிப்பிட்ட புதுப்பித்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டு மிரிஜ்ஜவில தேசிய தொழிற்பயிற்சி நிலையத்தில் சாரதிகள் பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 15-5323 | - | கடந்த காலங்களில் சேவையில் ஈடுபடுத்த முடியாத நிலையில் இருந்ததுடன் தற்போது பயிலுனர் செய்முறைப் பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது |
| 60-8860 | - | விபத்துக்கு உள்ளானதால் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை (செய்முறை பயிற்சிக்காக வழங்கப்பட உள்ளது) |
| KI-2565 | - | விளையாட்டுத்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்டு தற்போது அதிகார சபை மீண்டும் பொறுப்பேற்றுள்ளது |
| 31-6019 | - | இது ஜீப் வண்டியாகும். செலுத்த முடியாத முடியாத நிலையில் காணப்பட்டதனால் சேவையில் ஈடுபடுத்த முடியவில்லை |
| 40-7898 | - | பயிலுனர்களுக்கு செய்முறை பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது |
| MO-3381 | - | சாரதி பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது எனினும் செலுத்தப்படவில்லை |
| QM-5039 | - | பயிலுனர் பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது |
| YV-5653 | - | சாரதிப் பயிற்சிக்காக பாவிக்கப்பட உள்ளதுடன் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை |
| 53-049 | - | புதுப்பித்தலுக்காக அனுப்பப்பட்டுள்ளது |
| QM-5040 | - | சாரதி பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது எனினும் செலுத்தப்பட வில்லை. |
| YV-8010 | - | சாரதி பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது எனினும் செலுத்தப்பட வில்லை. |
| 62-6616 | - | சாரதி பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது எனினும் செலுத்தப்பட வில்லை. |
| YV-5651 | - | சாரதி பயிற்சிக்காக வழங்கப்பட்டுள்ளது எனினும் செலுத்தப்படவில்லை |

இணைப்பு 03இல் காட்டப்பட்டுள்ள வாகனங்களின் ஓட்டுதல் விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது வழங்கப்படாத வாகன ஓட்டுதல் குறிப்புக்களை சமர்ப்பிக்குமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் வாகனங்களின் ஓட்டுதல் குறிப்புக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியாமல் போனமைக்கான காரணங்கள் குறிப்பிடப்பட்ட வாகன இலக்கங்களின் முன்னால் காட்டப்பட்டுள்ளன.

ஏற்றுக்கொள்கிறேன். இந்த நிலைமை இனிமேல் இடம்பெறாத வண்ணம் பார்த்துக் கொள்வேன்.

தேசத்துக்கு மகுடம் - செலவு 3,649,031 குறிப்பிட்ட கடிதம் மற்றும் பண்டங்கள் வழங்கப்பட்டமை உறுதி செய்யும் ஆவணங்கள்

குறிப்பிட்ட கடிதக் கோவை மற்றும் பண்டங்கள் வழங்கப்பட்டதை உறுதி செய்யும் கடிதம் கணக்காய்வுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பண செலவுகள் முற்பணம் ரூபா. 400,000 முற்பணம் செலுத்த தீர்த்துவைத்தல் தொடர்பான விபரங்கள்

தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்காக முற்பணமாக ரூபா. 400,000 பெறப்பட்டதுடன் அந்த முன்பணம் செலுத்தல் தொடர்பான வவுச்சர் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.2.5

(அ) வருடாந்த கணக்காய்வு அறிக்கைக்கு வெளிவாரியாக அப்போதிருந்த தலைவரினால் ஒப்படைக்கப்பட்டிருந்த நடப்பு முக்கியத்துவம் வாய்ந்த விசேட கடமைகள் மற்றும் விசேட கடமைகளுக்கான ஆய்வுகள் காரணமாக 2012இன் ஆரம்ப இரண்டு தவணைகளில் வருடாந்த கணக்காய்வு திட்டங்களுக்கு அமைய கணக்காய்வு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பின்னணி இருக்கவில்லை. கணக்காய்வு திட்டத்துக்கு வெளிவாரியாக அவ்வாறான 41 விடயங்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இந்த விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக அப்போதிருந்த தலைவரின் ஆலோசனைக்கமைய 11 விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி குறிப்பிட்ட 11 கணக்காய்வு அறிக்கைகள் முதல் 02 தவணைகளில் வழங்கப்பட்டன. இதன்படி 2012 முதல் 03 தவணைகளில் கணக்காய்வு அறிக்கைக்கமைய கணக்காய்வு பரிசீலனைகள் மேற்கொள்ளப்படாமையினால் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2012 03வது தவணை தொடக்கம் கணக்காய்வு திட்டத்துக்கான கணக்காய்வு 09 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கைகள் உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2012 வருடத்தின் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய கணக்காய்வு நடவடிக்கைகள்**

| விபரங்கள் | கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|
| பொலன்னறுவை மாவட்ட கணக்காய்வு | 19.10.2012 |
| திருகோணமலை மாவட்ட கணக்காய்வு | 19.10.2012 |
| 2012இல் ஆரம்பிக்க முடியாமல் போன பாடநெறிகள் | 06.11.2012 |
| புத்தளம் மாவட்ட கணக்காய்வு | 22.11.2012 |
| போக்குவரத்து தொடர்பான கணக்காய்வு | 05.12.2012 |
| நாரஹேன்பிட்ட தேசிய தொழிற்பயிற்சி பிரிவு நிலையத்தின் கணக்காய்வு | 12.12.2012 |
| அநுராதபுரம் மாவட்ட கணக்காய்வு | |
| குருனாகல் மாவட்ட கணக்காய்வு | 06.02.2013 |
| மொனராகலை மாவட்ட கணக்காய்வு | 06.02.2013 |
| நியாகம மாவட்ட கணக்காய்வு | 06.02.2013 |
| நிதிப் பிரிவு கணக்காய்வு | 13.02.2013 |

(ஆ)(ஊ) அலுவலக மற்றும் வர்த்தக நிலைய சட்டத்துக்கமைய இந்த கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது.

(ஐ) ஏற்றுக்கொள்கிறேன். இது தொடர்பாக 2014ஆம் ஆண்டு தொடக்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுற்று நிருபமொன்று வெளியிடப்பட்டுள்ளது.

(இ)(ை) ஏற்றுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக 2014இல் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

(ைை) இது சில வருடங்களுக்கு முன்னர் நிலவிய மீதி என்பதனால் அதனை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.

(ஈ)(ை) எதிர்வரும் நாட்களில் இந்த 10%தை தடுத்து வைப்பதற்கு வரி அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ைை) ஏற்றுக்கொள்கின்றேன். இனிமேல் இவ்வாறான செலவுகளுக்கு அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ைைை) ஏற்றுக்கொள்கிறேன். நாடு முழுவதிலும் 253 நிலையங்களில் பணியாற்றும் இந்த அதிகார சபையின் பணியாளர்களின் விடமுறை அறிக்கைகள் குறிப்பிட்ட மாதம் முடிவடைவதை அடுத்துவரும் மாதத்தில் பெற்றுக்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். நடைமுறை ரீதியிலான அசௌகரியங்கள் காரணமாக மேலதிக காலம் எடுக்கப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படலாம். எவ்வாறாயினும் 2013 தொடக்கம் குறிப்பிட்ட அறவீடுகளை குறிப்பிட்ட வருடத்துக்கு உள்ளேயே மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(உ)(ை) அதிகார சபையின் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் உள்ளடங்கிய குழுவொன்றினால் வாகனத்தில் எரிபொருள் விரயம் தொடர்பாக ஆராய்ந்து அதற்கான தரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வாகனங்களின் எரிபொருள் பாவனை தொடர்பான சமப்படுத்தல் இதன் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

(ைை) ஏற்றுக்கொள்கிறேன். குறிப்பிட்ட மாதிரி மூலம் மேலதிக நேரக் கொடுப்பனவை கேட்பதற்கான ஆலோசனை வழங்கப்பட்டது.

(ஊ)(ை) 2012 வருடாந்த அறிக்கையில் செயலாற்றும் பிரிவு தற்போது தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அதன் காரணிகள் கணக்காய்வுக்காக உங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சட்டத்தின் 14.2(சி) பிரிவுக்கமைய கணக்காய்வு அதிபதியினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை மும்மொழிகளிலும் கிடைக்காமையினால் முழுமையான வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

(ைை) ஏற்றுக்கொள்கின்றேன் 2011 வருடத்துடன் தொடர்பான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சபையில் சமர்ப்பிப்பதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

(ைைை) 2012ஆம் ஆண்டின் மேலதிகப் பணம் முதலீடு செய்யப்படவில்லை.

(ைஎ) ஏற்றுக்கொள்கிறேன். அவசர தேவைகளுக்கமைய இதில் பதில் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன. புதிய மீளமைப்பு திட்டங்கள் நடைமுறைப்படுத்தியதன் பின்னர் சகல வெற்றிடங்களும் ஆளணியினர் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். இந்த பதில் நியமனங்கள் 44 இல் இருந்து 18 ஆக குறைந்துள்ளது.

(எ)(ை) ஏற்றுக்கொள்கின்றேன். பயிற்சித் திட்டங்களுக்காக பயிலுனர்களை அதிகார சபையின் ஒவ்வொரு பிரிவுக்கும் இணைத்தல் தொடர்பாக 2007இல் தீர்மானிக்கப்பட்டது. எனினும் தற்போது பணியகத்தின் பணிகள் பெரிதும் வியாபித்துள்ளதனால் 2007இல் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட கூடுதலான எண்ணிக்கையினர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இது தொடர்பாக பூண மீளாய்வொன்றை மேற்கொண்டு அதிகார சபையின் அந்தந்த பிரிவுகளுக்கு தேவையான பதவியணியினரின் எண்ணிக்கையை தீர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

3.1 உடன்படுகிறேன்.

3.2 தற்போது அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 09 ஆகும். இந்த வழக்குகளில் 02 வழக்குகள் முறைப்பாடு செய்தவர்களினால் வாபஸ் பெறப்பட்டுள்ளது. ஒரு வழக்கு தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் மீதி 06 வழக்குகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. (குறிப்பிட்ட அறிக்கை இணைப்பு 04இல் காட்டப்பட்டுள்ளது)

3.3இ3.4. வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் வருடத்தினுள் கிடைக்கும் நிதி ஒதுக்கங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதனால் அந்த செலவுகளை கடந்த வருடத்துடன் ஒப்பிடுவது சாத்தியமல்ல.

4.1. செயலாற்றுகை

(அ) பயிலுனர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது மதிப்பிடப்பட்ட தொகையையும்விட 2.57%னால் மேலதிகமாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவ்வாறு செய்யப்படுவதற்கான காரணம் பாடநெறிகளை விட்டுச் செல்லும் தன்மைக்கு இணங்க பயிற்றுவிக்கும் இலக்கினை அடைவதை வெற்றி கொள்வதாகும்.

(ஆ) சான்றிதழ்கள் வழங்கப்படுவது குறிப்பிட்ட வருடத்தில் பயிற்சியை பூர்த்தி செய்துள்ள பயிலுனர்களுக்காக என்பதுடன் அதற்காக அவர்கள் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலதிக பயிற்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட காலகட்டத்துக்குள் தொழில் கிடைத்ததினால் இறுதி பரீட்சைக்கு வரும் பயிலுனர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக பாடநெறிகளுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக எதிர்பார்க்கப்பட்ட நிதி ஒதுக்கம் கிடைக்கவில்லை. பாடநெறிகள் தொடர்பான உத்தரவாதம் கிடைக்காமையினால் இந்த பாடநெறிகள் தொடர்பாக மதிப்பீடுகளை செய்ய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை 28.58%னால் குறைந்துள்ளது.

(இ) 2012ஆம் ஆண்டாகும்போது பாடநெறிகளை விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கை 11.23% குறைந்துள்ளது. இதற்கு முன்னரான ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த பட்ச பெறுமதியைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு விளக்கமளித்து அவற்றை தவிர்த்து கொள்வதற்கான அலோசனை வழங்கப்பட்டது. பயிற்சியின் தரத்தை உயர்த்தவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளின் படி இது தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று 2014 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வு ஆண்டினுள் தொழில் வாய்ப்புக்களை வழங்குவது குறைந்தமையானது இலக்காகக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையில் 21.3% ஆகும். தொழில் வாய்ப்புக்களைப் பெற்ற பயிலுனர்கள் அந்த நிறுவனங்களில் இருக்காமை சூழல், மற்றும் கலாசார காரணங்களினால் அந்த சேவை நிலையங்களிலிருந்து விலகுதல், தூரபிரதேச பயிலுனர்கள் கொழும்பு பிரதேசத்தில் தொழில் புரிய விரும்பாமை பயிற்சி பெற்றவர்களில் பெரும்பாலானோர் கணினி துறை சார்ந்தவர்கள் என்பதால் தொழில் வாய்ப்புக்கள் குறைதல். முஸ்லிம் இனத்தை சேர்ந்த பெண் பயிலுனர்கள் தொழில் புரிய விரும்பாமை சிகை அலங்காரம், ஒப்பனை போன்றவற்றில் பயிற்சி பெற்றவர்கள் தொழில் நிலையங்களில் பணியாற்ற விரும்பாமை வடக்கு கிழக்கில் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக தொழில்களில் ஈடுபடுத்துவதன் எண்ணிக்கை குறைந்துள்ளமை. பயிற்சி பெறுபவர்களும் பாதுகாப்பு பிரிவினரும் அடங்குவதால் புதிதாக தொழிலில் இணைபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

(உ) 2011ஆம் அண்டில் தொழில் பயிற்சிகளில் இணைந்தவர்களின் எண்ணிக்கை 35% வீதத்தினால் குறைவதற்கு மேற்கூறிய விடயங்கள் காரணமாகும்.

(ஊ) மீளாய்வு ஆண்டினுள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுக்காக 05 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக ஆய்வுப் பிரிவு 05 இலட்சம் ரூபாவினை ஒதுக்கியிருந்து இந்த வருடத்தில் குறிப்பிட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் குறிப்பிட்ட பணம் செலவிடப்படவில்லை என்பதையும் ஏற்றுக்கொள்கின்றேன். இதற்கு அடிக்கடி இடம்பெற்ற இடமாற்றங்கள் (மாவட்டங்களில் வேறு பணிகளில் ஈடுபடல்) வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கங்கள் போன்ற விடயங்கள் காரணமாக உள்ளன. தற்போது குறிப்பிட்ட உத்தியோகத்தரின் ஆராய்ச்சி மற்றும்

திட்டமிடல் பிரிவுக்கு நியமிப்பதற்கும் தேவையான நிதி ஒதுக்கங்களை முடிந்தளவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(எ) முன்னைய நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக (சீடு) நிகழ்ச்சித்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் இடம்பெறுவதுடன் அந்த நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து கொள்ளும் தகைமையுடைய தொழில் நுட்பவியலாளர்கள் அதற்காக தெரிவு செய்யப்படுவார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் துறைகள் சார்பாக இணையும் குறைந்தபட்ச எண்ணிக்கையில் அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அதன்படி இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொழில் நுட்பவியலாளர்களின் கோரிக்கைக்கு இணங்க முன்வைக்கப்பட்டுள்ளன.

(ஏ)(ை) பெற்றோர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களின் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அதன்கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி வெளிக்கள உத்தியோகத்தர்களின் 132 நிகழ்ச்சித்திட்டங்கள் இதற்காக கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவை இரண்டும் ஒருங்கிணைந்த வகையில் 662 நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

(ைை) நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கும் போது எதிர்பார்க்கப்பட்ட மொத்த எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவினை காண முடியும். இந்த வருடத்தில் தொழிற்தேர்ச்சி அணியின் பணிகள் காரணமாக வேலைச்சுமை அதிகரித்தது. இதற்கு காரணமாகும் தொழில் தேர்ச்சி செயலணியினால் மாணவர்களுக்கு அறிவூட்டுவதற்காக வடக்கு கிழக்கு பின்தங்கிய பிரதேசங்களுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை பெறமுடியாமல் போனதால் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவது குறைவாக காணப்பட்டது.

(ைைை) இளைஞர் படையணி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தும் போது அந்தந்த நிலையங்களில் காணப்படும் செயற்பாடுகளுக்கமைய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கான வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியாமல் போனதால் இவற்றை நடத்துவது கடினமாக இருந்தது. மற்றும் பயிற்சி பெற்று வெளியேறுதல் போன்ற காரணங்களினால் இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த முடியவில்லை.

(ைள) பயிற்சி பெறுபவர்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட வடக்கு கிழக்கு பகுதிகளில் அது குறைவாக காணப்படுவதனால் அதன் பங்குபற்றுதல் குறைவாக காணப்பட்டது.

(எ) ஒத்திகைகள் கூட குறைந்தளவில் நடத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. நிலையங்களை ஒருங்கிணைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதனால் அவற்றின் குறைபாடுகளும் காணப்படுகின்றன.

(ஐ) தொழில் முயற்சி பயிற்சித் திட்டங்கள் குறைவாக நடத்தப்படுவது குறையடைவதற்கான காரணம் வளவாளர்கள் சேவையின் நிமித்தம் வேறு கடமைகளில் ஈடுபட்டமையாகும். தற்போது இந்த நிலைமையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ஒ) "உங்கள் தொழில் முயற்சி தொடர்பாக அறிந்து கொள்ளவும்" என்ற நிகழ்ச்சித் திட்டத்துக்கு பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமையவே இலக்காக கொள்ளப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதன்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான திட்டமிடப்பட்ட இலக்குகள் குறைவடையலாம். அதேபோன்று தொழில் முயற்சிகள் தொடர்பாக அறிவினைப் பெற்றுவரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதினால் அதில் பங்குபற்றலும் குறைந்து விடும்.

(ஓ) ஞநீஜ கடன் வழங்கும்போது வர்த்தக வங்கிகளில் காட்டப்படும் கடும் சட்டங்கள் மற்றும் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்குவதும் கடினமாக இருப்பதனால் முன்னேற்றத்தில் ஓர் குறைவு காணப்படுகின்றது. இதற்கமைய இதற்கு சமனான ஏனைய கடன் வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளன

(அ)(i)நாட்டில் தொழிலாளர்களுக்கான தேவைகள் காணப்படும் எனினும் கிராக்கியற்ற பாடநெறிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கையை ஆகக்குறைந்தது 10 வரை திருத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது (உதாரணம் தச்சு தொழிலாளர், மேசன், வேல்டர், குழாய் இணைப்புக்கள் போன்ற பாடநெறிகள்) இதற்கு மேலதிகமாக சமூகத்தில் பெரும் கிராக்கி நிலவும் பாடநெறிகளுக்கான பயிலுனர்களை சேர்த்துக் கொள்வது 10யும் விட குறைவடையும் போது இதற்கு அமைச்சு செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(ii) பாடநெறிகளுக்கு சேர்த்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை 15 ஆக இருப்பினும் பாடநெறிகளை விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனால் கடந்த வருடங்களில் கூடுதலாக சேர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் விலகிச் செல்லும் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. எனவே எதிர்வரும் பாடநெறிகளுக்கு இலக்காக கொள்ளப்பட்ட எண்ணிக்கையினர் மாத்திரம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(ஆ) பயிலுனர்களை பதிவுசெய்வதற்கான கட்டணம்
ஆட்சேர்த்தலுக்கமைய பதிவு செய்யும் கட்டணங்கள் சரியான முறையில் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன் வேறு அறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் இறுதி கணக்குகளின்படி வழங்கப்பட்டுள்ள தகவல்கள் இறுதி கணக்குகளின்படி வழங்கப்படும் தகவல்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த உத்தியோகத்தர்களின் வேலை இடைநிறுத்தம் செய்யப்பாட்டமை தொடர்பாக அவரினால் உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் அவரது சம்பளத்தை நிறுத்தியமை தொடர்பாக சட்ட ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படலாமென அப்போதிருந்த சட்ட உத்தியோகத்தரினால் எடுத்துக் காட்டப்பட்டதுடன் அவரது சம்பளத்தை நிறுத்த முடியவில்லை. எனினும் இந்த அதிகார சபையின் புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் 2013 மே மாதம் தொடக்கம் நடைமுறையிலிருக்குமாறு இவரது சம்பளம் நிறுத்தப்பட்டது. அடிப்படை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இவருக்கு எதிராக குற்றப்பத்திரமொன்று தாக்கல் செய்யப்பட்டு முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டது. அந்த ஒழுக்காற்று விசாரணை அறிக்கைகளின்படி அவர் சேவையிலிருந்து நீக்கப்பட்டனர். அதன்படி செலுத்தப்பட்ட பணத்தை முழுமையாக மீள செலுத்துமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டாலும் செலுத்தல் மறுக்கப்பட்டதனால் இது தொடர்பாக சட் ஆலோசனை கோரப்பட்டுள்ளது.

(ஈ) இதன்படி முதல் இரண்டு தலைமைகளில் தவணைக்கு ஓர் கூட்டம் வீதம் நடத்தப்பட்டுள்ள அதிகார சபை 2012 செப்டம்பர் மாதம் கலைக்கப்பட்டு மீண்டும் புதிய பணிப்பாளர் சபை 2013இல் நியமிக்கப்பட்டதனால் மூன்றாம் நான்காம் தவணைகளில் கணக்காய்வு கூட்டங்களை நடத்த முடியவில்லை.

(உ) இந்த ஆலோசனை நிபுணர்கள் இருவரதும் 2012.11.12ஆந் திகதி தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளார்கள், இது தொடர்பான விபரமான தகவல்கள் 2011ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஊ)(i)ஏற்றுக்கொள்கிறேன். இந்த பயிற்சித்திட்டங்கள் இரவு 10.00 மணிவரை நடத்தப்பட்டமையினால் அவற்றில் கலந்து கொண்டவர்களுக்கு வெளியிலிருந்து உணவு பெற முடியாமையினால் அப்போதைய தலைவரின் பூரண அனுமதியுடன் இரவு உணவு வழங்கப்பட்டது. எதிர்வரும் நாட்களில் இவ்வாறான நிலைமைகள் இடம்பெறா வண்ணம் பார்த்துக் கொள்ளப்படும்.

(ii) இலங்கை தேசிய கூட்டுறவு சபை அரசுக்குரிய நிறுவனமாகும் என்பதனால் அங்கு தங்குமிட வசதிகள் இருப்பதனாலும் விலை மனுக்கள் கோராமல் அந்த நிறுவனத்தில் பயிற்சி நெறிகளை நடத்த திட்டமிடப்பட்டது.

எ)(i) மட்டக்களப்பு மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் வெவ்வேறாக பட்டியல்படுத்தப்பட்டு பொருட் பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ளது. வந்தாறுமூலை நிலையத்துக்கு வழங்கிய பொருட்கள் காரணமாக போனமை தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

(ii) கருத்திட்டம் ஆரம்பிக்கப்படும் போது நிலவிய குறைபாடுகள் காரணமாக பயிலுனர்களின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும் பயிற்சி உபகரணங்கள் கிடைத்தல் மற்றும் விரிவான வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நிலைமை சீர் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஊளுேஊ (ஊழஅிரவநச ரேஅநசஉைடயட ஊழவெசழட) பாடநெறிகளுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக தகைமையாக இயந்திரவியலாளர் 3வது மட்டத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். எனினும் அந்த பிரதேசத்தில் மேற்கூறிய தகைமையுள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதனால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

(iii) இந்த உத்தியோகத்தர் இராஜினாமா செய்யும் போது அதிகார சபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கமைய குறிப்பிட்ட பணம் அறவிடப்படாமைக்கான காரணம் அவர் நேர்வரிசை அமைச்சின் கீழ் உள்ளக நிறுவனமான தொழிற்கல்வி பயிற்சியளிப்பு திணைக்களத்தில் நிரந்தரமான ஓய்வூதியமுடைய பதவிக்கு நியமனம் பெற்று சென்றுள்ளமையாகும். அந்த ஒப்பந்தத்தை அமைச்சு செயலாளரின் ஆலோசனைக்கமைய குறிப்பிட்ட திணைக்களத்திற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஏ)(i) வழங்குனர்கள் மாதிரிகளை வழங்காமையினால் கேட்கப்பட்ட பெரும்பாலான பொருட்கள் சம்பந்தமாக தொழில்நுட்ப அறிக்கைகளை பெற்றுக்கொடுக்கும் போது வழங்குனரால் வழங்கப்பட்ட விபரங்கள் பரிசீலிக்கப்பட்டு நீண்ட ஆய்வின் பின்னர் தொழில்நுட்ப அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதனால் குறிப்பிடத்தக்களவு நேர தாமதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பக் குழுக்களின் அங்கத்தவர்களின் மாவட்ட நிலையங்களில் கற்கைகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் என்பதனால் குறிப்பிட்ட கடமைகளையும் மேற்கொள்வதுடன் குறிப்பிட்ட பணிகளுக்கு இடையூறுகள் ஏற்படாத வண்ணம் பணியாற்றியதனால் அது சம்பந்தமாக சற்று காலதாமதம் ஏற்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கின்றேன். இனிமேல் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) இந்த உபகரண பாடநெறிகளை தரம் உயர்த்துவதற்காக கொள்வனவு செய்த உபகரணங்கள் ஆகும் என்பதுடன் பெரும்பாலான உபகரணங்கள் சந்தையில் தாராளமாக கிடைப்பவையல்ல. இவற்றை பயிற்சிக்கு ஏற்றவாறு தயார்படுத்த வேண்டும் என்பதுடன் பயிற்சிக்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டும். மற்றும் உற்பத்திக்கும் குறிப்பிட்ட காலம் எடுக்கும் இந்த உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதுடன் இவ்வளவு காலதாமதம் ஏற்படுவதற்கான காரணம் அதுவாகும். எனவே பயிலுனர்களுக்கு ஏதேனும் தாமதம் ஏற்பட்டாலும் பாடநெறிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் சில உபகரணங்கள் கிடைத்தமையினால் நிலைமையை கட்டுப்படுத்த முடிந்தது.

iii) கேள்விக் கட்டளை இல. 18க்கமைய வழங்குனர்களால் வழங்கப்பட்டுள்ள கேள்விக் கட்டளை 44.5%மான உபகரணங்களை களஞ்சியத்துக்குப் பொறுப்பேற்க தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு சிபாரிசு செய்துள்ள போதிலும் (அது பக்க இல 851) அதன் பின்னர் வழங்கப்பட்ட 07 வகை பொருட்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கேள்விப் பத்திரசபைக்கு அறிவூட்டப்பட்டுள்ளதுடன் 2013/07/25ஆந் திகதி கேள்விப்பத்திர சபையானது (பக்கம் இல 857-858) 2012/09/15ஆந் திகதி வரை முற்பணத்தை குறைத்து வழங்கப்பட்டுள்ள பெறுமதியில் 5%தை தடுத்து வைத்ததன் பின்னர் மீதிப்பணத்தை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி குறிப்பிட்ட நிறுவனத்தினால் 2012/10/15ஆந் திகதி வரை வங்கி பிணை நீடிக்கப்பட்டிருந்தது (பக்கம் 863)

(iv) 6,840,673 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டு மதிப்பீட்டு அறிக்கை 2012.10.03ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. 6,090,768.00 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்ட போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் குறிப்பிட்ட உபகரணங்களை உற்பத்தி செய்த நாடுகள் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்கள் மீள வழங்கப்படவில்லை.

(v) குறிப்பிட்ட உபகரணங்கள் சம்பந்தமான பயிற்சியின் தேவையின் அடிப்படையில் மீண்டும் கேள்விப் பத்திரச்சபை கலந்துரையாடியதுடன் கேள்விப்பத்திரச் சபையின் தீர்மானம் எடுக்கப்படும் தீர்மானங்களை செயலிழக்கச் செய்து மீண்டும் கேள்விப் பத்திரங்களை இற்றைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டது. அதன்படி குறிப்பிட்ட தீர்மானம் கேள்விப்பத்திர சபையின் தலைவர் என்ற வகையில் வழங்கல் முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட கேள்விப்பத்திர சபையின் கையொப்பத்துடன் கூடிய தீர்மானமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த எஞ்சின் தொடர்பாக ஆலோசகர்களுக்கு விளக்கமளிக்கப்படவில்லை என்பதுடன் இதன்படி சில பிரச்சினைகள் ஏற்பட்டன. பின்னர் ஆலோசகர்களை அழைத்து குறிப்பிட்ட எஞ்சின் தொடர்பாக செயலமர்வு நடத்தப்பட்டு இது சம்பந்தமாக விரிவான விளக்கம் வழங்கப்பட்டதுடன் குறிப்பிட்ட பிரதான கம்பனியினால் அதன் செயற்பாடு தொடர்பாக னுஏனு இருவட்டுக்களும் வவழங்கப்பட்டுள்ளதுடன் பிரச்சினைகள் இல்லாமல் பயிற்சியை நடைமுறைப்படுத்துவதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த கேள்விக் கட்டளை தொடர்பான 19 பொருட்களில் 03 வகை வழங்குனர்களினால் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மொத்த கேள்விக் கட்டளைப் பெறுமதி 83.32% ஆகும்.

(vi) 66 கேள்விக் கட்டளைகள் தொடர்பாக 16 வகைப் பொருட்கள் வழங்குனர்களினால் வழங்கப்படவில்லை.

(VII) ஏற்றுக்கொள்கின்றேன். இந்த உபகரணங்களை வழங்கும் நிறுவனங்கள் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையானவை என்பதனால் கேள்விப் பத்திரங்களுக்காக முன்வரும் எண்ணிக்கைகளையும் கருத்தில் கொண்டு இந்த நிறுவனத்தின் பெயர் கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஐ) i. அந்த பணிகளுக்கான நிச்சயமற்ற செலவுகளின் எல்லை 10%தை தாண்டியுள்ளதனால் அப்போதிருந்த தலைவரினால் அமைச்சு செயலாளரின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அது தொடாபான அனுமதி எமக்கு கிடைக்காமையினால் நிதி ஒதுக்கங்கள் செய்யப்படவில்லை என்பதுடன் அமைச்சின் தீர்மானித்தின்படி எதிர்வரும் நாட்களில் கணக்குகளில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. இந்த கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2012.12.31ஆந் திகதி பூர்த்தியடைந்து இருந்த போதிலும் நிர்மாணப்பிரிவினால் பரிசீலித்து சிபாரிசுகள் வழங்கப்பட்டு செலுத்தல் செய்ய காலவகாசம் எடுத்ததனால் 2012 மேலும் முன்னெடுத்து செல்லப்படும் பணிகளாக 2013 குறிப்பிட்ட பெறுமதியை கட்டிட கணக்கில் மாற்ற நடவடிக்கை எடுகக்ப்பட்டுள்ளது.

iii. இந்த கருத்திட்டங்கள் தாமதமடைந்தமை தொடர்பாக ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தாமத கட்டணங்கள் மற்றும் செயலாற்று முறிகளின் நீடிப்பு இன்மையினால் அதற்கு சமனான பணத்தொகை என்பவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iv. ஒப்பந்த காலத்தில் பூர்த்தி செய்ய முடியாமல் போன எனினும் நியாயமான காரணங்கள் காட்டப்பட்ட கருத்திட்டங்களுக்காக பெறுகைகளைக் கோருவதற்கான சபையினால் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் எனினும் நியாயமான காரணங்கள் காட்டப்படாத தாமதங்களுக்காக ஒப்பந்தத்தின்படி தாமத கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளன.

(ஓ)(I.) இறுதி மதிப்பீட்டு அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த சிற்சில குறைபாடுகள் மற்றும் வழங்குனர்களால் கேள்வி கட்டளைகளுக்கான உபகரணங்களை வசழங்குதல் பூர்த்தி செய்யப்பாமை மற்றும் வழங்குனர்களினால் வழங்கப்பட்டிருந்த பட்டியல்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக இந்த செலுத்தல்களை செய்வது தாமதமடைந்துள்ளது. மேற்கூறிய குறைபாடுகளை நிவர்த்தி செய்து செலுத்தல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது இந்த செலுத்தல்களில் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய செலுத்தல்களும் விரைவில் செலுத்தி முடிக்கப்படும்.

(II) இந்த பொருட்கள் தொடர்பான இறுதி தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கைகள் தாமதடைந்திருப்பதனால் இந்த செலுத்தல்களும் தாமதமடைந்துள்ளன. குறிப்பிட்ட பண்டங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த பிரதேச நிலையங்களில் அந்த உபகரணங்களை பயன்படுத்தும் போதனாசிரியர்களிடமிருந்து குறிப்பிட்ட உபரணங்கள் தொடர்பான அறிக்கை பெறப்பட்டு 2013இல் செலுத்தல்கள் செய்யப்பட்டன.

(III) எதிர்வரும் நாட்கள் நடவடிக்கைகள் செவ்வனே மேற்கொள்ளப்படும்

(ஔ) 809ஆம் சம்பள இலக்க மறைப்படி திருமதி. யூ.ஜி.எஸ்.சீ. காரியவசம் 2012.06.01ஆந் திகதி தொடக்கம் 2012.12.01ஆந் திகதி வரை 06 மாதகாலத்தை சொந்த தேவைக்காக 06 மாதகாலத்துக்கு அவுஸ்திரேலியா செல்வத்காக 06 சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பித்திருந்தார். இதன்படி அவர் சம்பளமற்ற விடுமுறை காலம் போன்று இரண்டு மடங்கு (ஒரு வருட) சேவைகள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

எனினும், அமைச்சு இவருக்கு 03 மாதகால சம்பளமற்ற விடுமுறைக்கே அனுமதி வழங்கியிருந்தது. அவர் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை முடிவடைந்தவுடன் 2012.08.31ஆந் திகதி தொடக்கம் சேவையிலிருந்து விலகியுள்ளார்.

வெளிநாட்டு விடுமுறை பெறும் போது 06 மாதகால வெளிநாட்டு விடுமுறையினைப் பெறுவதற்காக ஒரு வருடகால கட்டாய சேவைகாலத்திற்கு கைச்சாத்திட்டாலும் அவருக்கு 3 மாதகாலத்துக்கு மாத்திரமே வெளிநாட்டு விடுமுறை அனுமதிக்கப்பட்டதனால் கட்டாய சேவைக்காலம் 06 மாதங்களாக கருதப்பட்டு (சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறைக்காலம் 03 மாதங்கள் × 02) வருட கட்டாய சேவைக்காலத்துக்கு ஒப்பிடப்பட்ட உடன்படிக்ரைகயில் அரைவாசிப் பணம் அவரிடமிருந்து அறவிடப்பட்டது.

க) களஞ்சியத்தின் குறைபாடுகள் ∴ மேலதிகம் தொடர்பாக பிரதான உள்ளக கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்பு அறிக்கைகளின்படி வெளிப்படுத்தப்பட்டுள்ள குறைகளின் பெறுமதி ரூபா 1,593,015,27 ஆகும். இதற்கு தவணைக் கட்டணமான 25% சேரும்போது அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 1,981,177.83 ஆகும். இந்த குறை தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

(கா) அநுராதபுரம் தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்காக கலந்து கொண்ட உத்தியோகத்தர் உணவு உறையுள் கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை என்பதுடன் கண்காட்சி கடமைகளுக்காக செலுத்தப்படும் விசேட கொடுப்பனவுகளாக ரூபா 424.500 செலுத்தப்பட்டுள்ளது.

(கி) இந்த அனைத்து பகுதிநேர பாடநெறிகளுக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளின்படி பயிலுனர்கள் எண்ணிக்கை இல்லாவிட்டாலும் பாடநெறிகள் ஆரம்பிகக்ப்படும். இந்த பாடநெறிகளுக்கு பயிலுநர்களை சேர்த்துக் கொள்வதை விளம்பரப்படுத்தும் பொருட்டு கட்டணம் செலுத்தல் 02 தவணைகளில் இடம்பெற்றுள்ளது. சிலவேளைகளில் முதற்கட்டணத்தை செலுத்தி பின்னர் பாடநெறிகளை விட்டுச் சென்ற பயிலுனர்களும் இருக்கின்றார்கள்.

அவர்களிடமிருந்து இரண்டாவது தடவைக்கட்டணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடையாது. எவ்வாறாயினும் இந்த பாடநெறிகள் தொடர்பாக போதனாசிரியர்களுக்கு செலுத்தல்களைச் செய்யும்போது அதிகாரசபைக்கு நட்டம் ஏற்படாத வண்ணம் மதிப்பீடுகள் மீள திருத்தப்பட்டு போதனாசிரியர்களுக்கான செலுத்தல்கள் செய்யப்பட்டன.

(கீ) 2011ஆம் ஆண்டில் ஆறு மாதகால பாடநெறியின் முதலாவது குழுவுக்'கான மதிப்பீடு 2012 ஜனவரி மாதத்தின் பின்னர் ஆகும் என்பதுடன் 2011ஆம் வருடத்தின் பாடநெறிகள் மற்றும் 2011 இரண்டாவது குழுவின் ஆறுமாத பாடநெறிக்கான மதிப்பீடுகள் 2012 ஜூன் மாதத்தின் பின்னரே மதிப்பீடு செய்யப்படுகின்றது. தற்போது பல சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் பாடநெறிகளை ஒழுங்கமைக்கும் பிரச்சினைகளினால் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பெறுபேறுகளுக்கான சான்றிதழ்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

(கு) பாடநெறிகளை ஒழுங்க செய்வதற்காக கடந்த வருடங்களில் மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் உதவிகளாக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கங்களின் மூலம் அந்த உபகரணங்களை கொள்வனவு செயய வழங்கல் பிரிவுக்கு கையளிக்கப்பட்டது.

4.3(அ) இந்த பணிகள் ஆற்றப்பட்ட 2009ஆம் ஆண்டில் குறிப்பிட்ட க……………ளுக்கான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருந்ததுடன் இதற்கான செலுத்தல்கள் செய்யப்படாமையினால் 2013ஆம் ஆண்டில் இது கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

(ஆ) பணிக்கொடை செலுத்தல் சட்டமூலங்களுக்கமைய ஊழியர் ஒருவருக்கு சேவை முடிக்கப்பட்ட நாள் தொடக்கம் 30 நாட்களுக்குள் பணிக்கொடையை செலுத்த வேண்டும் எனினும் எவரேனுமொருவரின் சேவையை முடிக்கும்போது அவரது பொறுப்பில் உள்ள அதிகார சபைக்குரிய பொருட்கள், ஆவணங்கள் என்பவற்றை அவரினால் உரியவாறு வழங்கப்படும் வரை குறிப்பிட்ட செலுத்தல்களை மேற்கொள்வது பிரச்சினையாகும் விசேடமாக அதிகார சபையின் கல்விசார் ஊழியர்கள் பொறுப்பில் பயிற்சி அணுகுமுறை மற்றும் பயிற்சி உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டதால் அவற்றை உரியவாறு ஒப்படைக்கும் வரை குறிப்பிட்ட செலுத்தல்களை தாமதிக்க வேண்டியுள்ளது. அதேபோன்று பெரும்பாலான உத்தியோகதத்ர்கள் நாட்டில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுவதனால் மாவட்ட பயிற்சி நிலையங்கள், கிராமிய பயிற்சி நிலையங்கள் என்பன அமைந்துள்ளன. அவ்வாறான உத்தியோகத்தர்கள் தொடர்பில் அறவீட்டு விபரங்களில் பெற்றுக்கொள்வது தாமதமடைகின்றது. எனவே நடைமுறை ரீதியிலான பிரச்சினைகள் காரணமாக 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட செலுத்தல்களை மேற்கொள்வது கடினமாகும். எனினும் செலுத்தல்களை உரிய நேரத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும் பணிக்கொடைகளை செலுத்தும் போது ஏதேனும் தாமதம் ஏற்பட்டால் அவ்வாறு தாமதமடைவதற்கான காரணம் அந்த உத்தியோகத்தர்களுக்கு கூறப்படும்.

(இ) உப தவிசாளரின் உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காக ரூபா 40,000.00 முற்பணம் பெறப்பட்டுள்ளது. ரூபா 44,000.00 குறிப்பிட்ட கண்காட்சியில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளுக்காகப் பெறப்பட்டது.

4.4.(அ) 2013ஆம் ஆண்டில் செயலிழந்து காணப்படும் கணக்குகள் அனைத்தையும் மூடிவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) தற்போது குறிப்பிட்ட பொருட்களில் பெருந்தொகையானவை விநியோகிக்கப்பட்டுள்ளன. தேவைகள் இனங்காணப்பட்ட பின்னர் மீதி பொருட்களும் அனுப்பிவைக்கப்படும்.

4.5. இனிமேல் இசை நிகழ்ச்சிகள் மற்றும் இசை நிகழ்ச்சிகளுக்கான பதாதைகளுக்கு அனுசரணை வழங்கவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

4.6(அ) இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக உரிய சம்பள படி நிலையில் வைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஏற்றுக்கொள்கிறேன்

(இ) சர்வதேச வலைப் பின்னல்களுக்காக வழங்கப்பட்டுள்ள கணினி மென்பொருட்கள் துண்டிக்கப்பட்டுள்ளன.

(ஈ) ஏற்றுக்கொள்கிறேன், இதனுடன் தொடர்பான உத்தியோகத்தர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

4.7

(அ) இந்த ஒப்பந்தம் “னுநளபைெ யனெ டீரடைன” பெறுகைகள் கோரல் முறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பெறுகைகள் கோரலானது அவ்வாறான படைப்புக்களை தெரிவு செய்வதற்கும் அது தொடர்பாக மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் அதிகார சபையில் அதற்கான ஆளணியினர் இல்லாமையினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த விடயத்துக்காக தேசிய பெறுகைகள் கோரல் முறைமையின் கீழ் பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட:டு விலை கோரல்கள் பெறப்பட்டன. இதன்படி ஒரு விலைகோரல் மாத்திரம் இதற்கு கிடைத்தது.

(ஆ) இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான விலை ஏற்றத்தாழ்வுகள் செலுத்தப்படவில்லை. எனினும் சில வேலைகள் அதனது அளவுகளை தாண்டியிருத்தல் மற்றும் பதிலீடு தொடர்பான மேலதிக விடயங்களுக்கு செலுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

(இ) இந்த பணிகளை மேற்கொள்ளும் போது அடிக்கடி இந்த ஆக்கங்கள் அவற்றின் உற்பத்தி திறனை அடிப்படையாகக் கொண்டு கூட்டுதல் மற்றும் குறைத்தல்கள் செய்யப்பட்டதனால் சில மூலப்பொருட்களை உள்நாட்டில் பெறுவதில் நிலவிய கஸ்ட்டங்கள் போன்றவற்றினால் இதற்கு திட்டமிடப்பபட்ட காலத்தையும் விட கூடிய காலம் சென்றுள்ளது.

(ஈ) இது பழைய தோற்றத்தைக் கொண்ட கட்டிடம் என்பதால் பயிலுனர்களை கவர்தல் மற்றும் நிறுவனத்தின் ஆளுமையை பேணுவதன் முக்கியத்துவத்தின் கீழ் மேற்கொள்ளக்கூடிய மிக சிறந்த மற்றும் குறுகிய முறை எவ்வாறு வெளிவாரியாக அதனை புதிய வடிவில் நிர்மாணிப்பதும் வெளிச்சம் ஊட்டுவதுமாகும். இதன் மூலம் தேசிய தொழிற்பயிற்சி சபை கொழும்பு நகரில் ஓர் அலங்கார கட்டிடமாக விளங்குவதுடன் இதன் மூலம் முன்னரையும் விட மக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடியதாக உள்ளது.

4.8

(அ) கணக்காய்வு அறிக்கையின்படி இந்த அதிகார சபையின் 25 உத்தியோகத்தர்கள் நீண்டகால அடிப்படையில் வெளிவாரி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பபட்டுள்ளதுடன் அந்த எண்ணிக்கை 13 மாத்திரமே அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1 | அதிகார சபை சேவையிலிருந்து விலகியவர்களின் எண்ணிக்கை | 07 |
| 2 | மீண்டும் அதிகார சபையில் இணைந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 05 |

| | | |
|---|---|---|
| 3 | இளைஞர் விவகார, தொழிற்தேர்ச்சி அபிவிருத்தி அமைச்சில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 08 |
| 4 | வெளிவாரி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | 05 |
| | மொத்தம் | 25 |

மேற்கூறியவாறு நேர்வரிசை அமைச்சுக்கள் மற்றும் ஜனாதிபதி செயலகம், இலங்கை பாராளுமன்றம் ஆகிய இடங்களில் சேவையின் நிமித்தம் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த காலங்களில் அவ்வாறான உத்தியோகத்தர்களின் தேவை தொடர்ந்தும் அந்த நிறுவனங்களில் காணப்பட்டதால் அவர்களை மீண்டும் வரவழைக்க முடியவில்லை.

(ஆ) தற்போது இளைஞர் விவகார தொழில் தேர்ச்சி அபிவிருத்தி அமைச்சில் போதனாசிரியர்கள் 04 பேர் மாத்திரமே பணியாற்றுகின்றனர். தொழில் நுட்ப பாடநெறிகளை திட்டமிடும்போது எடுக்கப்படும் கொள்கை தீர்மானங்களுக்கமைய அதற்கு உதவும் வகையிலேயே அத்தகைய போதனாசிரியர்கள் அமைச்சுக்கு அணைக்கப்பட்டனர். அதன்படி அவர்களது நியமனக் கடிதங்களின் நிபந்தனைகளுடன் இவை முரண்பாடாது.

(இ) இந்த உத்தியோகத்தர்களின் நிரந்தர பதவியின் சம்பள மற்றும் கொடுப்பனவாக ரூபா 40,865.00 அவர் உரித்துடையவராவார். மக்களின் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளராக 2012.07.17ஆந் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ள இந்த உத்தியோகத்தர் சம்பள மீளளிப்பு செய்யும் நிபந்தனைகளின் கீழ் இந்த அமைச்சில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நிரந்தரப் பதவியில் பணியாற்றியிருந்தால் அவருக்கு ரூபா 40,865.00 சம்பளம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன் அமைச்சின் செயலாளரின் ஒருங்கிணைப்பு செயலாளரின் பதவிக்கு வேறு ஒருவர் நியளமிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதற்கான சம்பளத்ததையும் அவருக்கு செலுத்த நேரிட்டிருக்கும். எனவே, பொதுவாக எடுத்துப் பார்க்கும் போது அவருக்குரிய சம்பளத்தை அரசினால் செலுத்த நேரிட்டிருக்கும். எனவே, மீளளிப்பு செய்யப்படாத ரூபா 99,167.50 அவரிடமிருந்து நியாயமில்லை என்பதனால் அதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) ஊழியர் இல. 294 திரு. ஜி.எம்.பி.ஏ. கல்லப 2012/03/01ஆந் திகதி தொடக்கம் அதிகார சபை சேவையிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். தற்போது அந்த இராஜிநாமாக் கடிதம் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. அவருக்கான பணிக்கொடை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வாகன விபத்து தொடர்பான முன்னனைய குழுவின் அறிக்கை குறைபாடுகளை கொண்டிருப்பதனால் சகல விடயங்களையும் ஆராய்வதற்காக உப தலைவரின் தலைமையில் மீண்டும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் சிபாரிசுகள் அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆலோசனைகளைப் பெறுவதற்கு தற்போதைய பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் பொறுப்புள்ள பிரிவினரிடமிருந்து அறவிடுவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படும்.

(உ) இந்த இரண்டு உத்தியோகத்தர்களும் ஒப்பந்த அடிப்படையில் குறிப்பிட்ட பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். பின்வருமாறு அவர்களது ஒப்பந்தக் காலம் முடிவடைந்துள்ளதுடன் அதன் பின்னர் சேவை நீடிப்பு இடம்பெறவில்லை.

| பெயர் | ஒப்பந்த சேவைக்காலம் முடிவடைந்த திகதி |
|---|---|
| திரு. டி.எம்.ஆர்.சி.ஏ.கே. பண்டார | - 2012.10.31 |
| திரு. ஆர்.எம்.என்.டி. ராஜகுரு | - 2012.12.31 |

(ஊ) முஜ–2563 - கடமையின் நிமித்தம் அமைச்சில் நியமிக்கப்பட்டுள்ளார்

முஜ–2565 - அந்த வாகனம் மீண்டும் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ீயு–1227 - இந்த கெப் வாகனம் சுதேச மருத்துவ அமைச்சினால் பயன்படுத்துவதுடன் மீண்டும் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கு பதில் கிடைக்கவில்லை.

4.9

(அ) சேவைகளின் அவசியத் தன்மைக்கமைய இந்த ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதுடன் எனினும் தாபனத்தின் மீள் ஒழுங்கமைக்கும் செயற்பாடு தொடர்பாக சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. அனைத்து பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு விதிமுறைகள் தயாரித்து அனுமதிக்காதக முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்த உத்தியோகத்தருக்கு மீண்டும் அதிகார சபையில் சேவைக்கு வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது குறிப்பிட்ட பதவியில் பதில் கடமையாற்ற ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(இ) இந்த பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) அமை.ப/11/1203/539/021 மற்றும் 2012.12.20ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் படி இந்த அதிகாரசபையின் பதவியணியினர் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளனர். இதற்காக முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்தின் னுஆளு.∴1680 மற்றும் 2013.12.17ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி கல்விசார் ஊழியர்கள் தமது நிரந்தர பதவியின் கடமைகளில் இணைக்கப்பட உள்ளனர். இதற்கு மேலதிகமாக மாவட்ட பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களை இனங்கண்டு அவர்களை வேறு மாவட்டங்களில் நியமிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் சிபாரிசுக்கு அமைய எதிர்வரும் நாட்களில் நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

(உ) பாடநெறிகளை முன்னெடுத்து தொடர்பான அத்தியாவசிய பணிகளை முன்னெடுப்பதற்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பாடநெறிகளை ஏஎு மட்டத்தில் முன்னெடுப்பதற்காக அவற்றின் தரம் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்காகவும் வழிகாட்டுவதற்கும் குறிப்பிட்ட உத்தியோகதத்ர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (உதாரணம் அளவீட்டு ஆய்வு பாடநெறி)

(ஊ) 15 பயிலுனர்களுக்கும் அதிகமானவர்களைக் கொண்ட சில பாடநெறிகளுக்கு குறிப்பிட்ட போதனாசிரியர்களுக்கு மேலதிகமாக மேலதிக அலோசகர்களை பயன்படுத்துவதன் மூலம் சிறந்த தரத்திலான பயிற்சியை அந்த பயிலுனர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எ) சம்பளமற்ற லீவு பெற்று பணியாற்றும் ஆலோசனைகளுக்கு குறிப்பிட்ட சம்பள ஏற்றங்களை வழங்காமல் இருப்பதற்கும் பதவி உயர்வுகள் மற்றும் பதவிகளை வழங்கும் போது அவற்றை வழங்காமல் இருப்பதற்கும் சிபாரிசு செய்யப்படாததன் மூலம் எதிர்காலத்தில் சிறந்த தரமுள்ள சேவையை பெற்றுக்கொள்ள அதற்கான ஆலோசனைகள் உதவி பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஏ) பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடாத போதனாசிரியர்களை எதிர்வரும் நாட்களில் குறிப்பிட்ட நிலையங்களில் வைக்க நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என்பதுடன் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்ய நேரிடும் போது அமைச்சு செயலாளரின் பூரண அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

4.10

(அ)ஏற்றுக்கொள்கின்றேன் விசேட கடமைகள் காரணமாக முன்னாள் தலைவரால் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆரம்பிக்கப்பட்ட சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று பின்னர் நேர்வரிசை அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) இந்த உத்தியோகத்தரின் சேவை 2012.10.24ஆந் திகதி நிறுத்தப்பட்டுள்ளது.

(ஈ) பணிப்பாளர் (நிர்வாகம்) என்ற ரீதியில் இருவருக்கு எரிபொருள் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. 2012.09.20ஆந் திகதி தொடக்கம் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக வேறு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதனால் 2012 ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பணிப்பாளர் (நிர்வாகம்) என்ற வகையில் குறிப்பிட்ட உத்தியோகத்தருக்கு எரிபொருள் கொடுப்பனவு செலுத்தப்பட்டது. அதுவரை பணிப்பாளராக (நிர்வாகம்) பணியாற்றிய உத்தியோகத்தர் பணிப்பாளர் (தொழில் வழிகாட்டல், தொழில் வாய்ப்பு வழங்கல்) பதவிக்கு நியமிக்கப்பட்டதனால் 2012 ஒக்டோபர் மாதம் தொடக்கம் அவர் இளைப்பாறிய 2012 நவம்பர் மாதம் 05ஆந் திகதிவரை எரிபொருள் கொடுப்பனவானது அந்த பதவிக்கு ஏற்ப செலுத்தப்பட்டுள்ளது.

(உ) ஏற்றுக்கொள்கிறேன். வாகன விபத்துக்கள் தொடர்பாக நி.பி. 104 இன் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) குறிப்பிட்ட விபத்து தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு விசாரணை அதிகாரியின் சிபாரிசுக்கமைய ஒழுக்காற்று கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(எ) இனிமேல் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

5.(ை) ஏற்றுக்கொள்கின்றேன். 2012 ஒருங்கிணைப்பு திட்டம் மற்றும் செயற்பாட்டுத்திட்டம் 2012.02.17ஆந் திகதி நிர்வாகக் குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2012.03.02இல் கணக்காய்வு திணைக்களம் தேசிய வரவு செலவு திணைக்கம் மற்றும் அரச முயற்சிகள் திணைக்களம் என்பவற்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

(ை) 2012 இல் திருத்தப்பட்ட ஆறவரவு செலவேடு மற்றும் உண்மையான செலவுகளுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் ஏற்படவில்லை.

6. <u>පද්ධති හා පාලනය</u>

| | | |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | இறுதிக் கணக்குகயுளுடன் இணங்கும் இற்றைப்படுத்தப் பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படுகின்றது. |
| (ஆ) | நிதி மற்றும் வங்கி நடவடிக்கைகள் | தற்போது நாடு முழுவதிலும் இருக்கும் மாவட்ட வங்கி கணக்குகளுடன் தொடர்பான கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| (இ) | கணக்கீடுகள் | அன்றாட கொடுப்பனவுகளை இற்றைப்படுத்தும் கணக்கீட்டு கட்டமைப்பொன்று நடைமுறையிலுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஏ) | களஞ்சிய கட்டுப்பாட்டாளர் | இதற்காக உள்ளக நிர்வாகம் பலப்படுத்தப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| (ஈ) | வாகன கட்டுப்பாடு | வாகன கட்டுப்பாடு தொடர்பான 2013இல் முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைக்கு வந்தது. வாகன கட்டுப்பாடு தொடர்பாக கடமைகளுக்காக வாகனங்களை கேட்டல் பெற்றரிகளை பெறுதல், டயர்களை குழுவுதல், வாகன சேர்விஸ், சாரதிகளிடம் வாகனங்களை ஒப்படைத்தல், பொறுப்பேற்றல், வெளிச்செல்லும் வாகனங்கள் தொடர்பான விபரங்கள், வாகனங்களுக்கு சாரதிகளை நியமித்தல், எரிபொருள் விரயத்தை பரிசீலித்தல், வாகன வெளிச்செல்லல் தொடர்பாக பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வாகனங்களின் மீற்றர்களை பிரசீலித்தல் என்பவை தொடர்பாக கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. |
| (உ) | முற்பணம் மற்றும் கொள்வனவு | இந்த விடயங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு உள்ள சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டு உள்ளக நிாவாக முறை பலப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) | கடன் பட்டோர் கடன் கொடுத்தோர் | மிகவும் பழைய கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தற்போது கடன் கொடுத்தோர் கடன் பட்டோர் மீதிகள் செம்மையாக பேணப்படுகின்றன. |
| (எ) | ஆளணி முகாமை | அதிகார சபையின் ஆளணியை மீள் ஒழுங்கமைப்பதற்காக புதிய ஆளணியினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கிடைத்துள்ளது. அந்த ஆளணியினருக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. |

| | | |
|---|---|---|
| (ஓ) | பயிலுனர் பயிற்சிக் காலம் | இந்த நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காக குழு சிபாரிசுகளின்படி 2014 தொடக்கம் ஓர் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

கர்ணல் எஸ்.ஆர்.பி. ரத்நாயக்க (ஆர்.டப்ளியூ.பி. ஆர்.எஸ்.பி)
தலைவர்,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை